பக்கங்கள்:இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2047 மார்கழி 18 திங்கட்கிழமை (02.01.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 014






## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒத்துழைப்புடன்

# இலங்கைக்கு சாதகமான மற்றொரு தீர்மானம்

## ஜெனிவாவில் நிறைவேற்ற அரசு திட்டம்

(கொழும்பு)

எதிர்வரும் மார்ச் மாதம் இடம்பெறவுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் தனக்குச் சாதகமான மற்றொரு தீர்மானத்தை நிறைவேற்ற அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. அரசு கோரினால் மேலும் ஒருவருட அவகாசத்தை வழங்கத் தயார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ள நிலையில், அதை சாதகமாகக் பயன்படுத்தி இந்த தீர்மானத்தைக் கொண்டு வந்து நிலைமையை சமாளிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

23 ஆம் பக்கம் பார்க்க...

## இந்தியா-இலங்கை மீனவர் பேச்சு

(டில்லி)

இந்திய-இலங்கை மீனவர் பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தைக்கு முன்னதாக இருதரப்பு அதிகாரிகள் மட்டப் பேச்சுவார்த்தை டில்லியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இவ்வாறு செயலாளர்கள் மட்டப் பேச்சுவார்த்தையில் எடுக்கப்பட்ட தீர்மாணங்களை முன்னோக்கி கொண்டுசெல்லும் வகையில் கொழும்பில் இன்றையதினம் இடம்பெறும் அமைச்சர்கள் மட்டப் பேச்சுவார்த்தை அமையும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த ஒக்டோபர் மாதம் டில்லி

23 ஆம் பக்கம் பார்க்க...

## உரிமையை மறுக்கும் இனவாதத்துக்கு எதிராக போராடவே 'எழுக தமிழ்'

### கிழக்கு பேரவைக்கு அணி திரள வசந்தராசா அழைப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் எதிர்வரும் 21ஆம் திகதி நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மாபெரும் எழுக தமிழ் மக்கள் பேரணியில் அணி திரளுமாறு புத்தாண்டு தினத்தில் அறை கூவல் விடுப்பதாக தெரிவித்த தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவர்களில் ஒருவரான ரீ.வசந்தராசா,

உரிமையை மறுக்கும் இன வாதத்துக்கு எதிராக ஒன்றுபட வேண்டும் எனவும் அவர் அழைப்பு விடுத்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

உரிமைக்காக சலுகைகளை மறுத்து கடந்த 06 தசாப்தங்களுக்கும் மேலாகப் போராடி, ஆயுதப் போராட்டம் மௌனித்து 07 ஆண்டுகளாகி விட்டன. ஆயினும், ஜெனிவா தொடங்கி சர்வதேசம் வரை எமது உரிமைக்கான குரல் உரக்க ஒலித்தும், இலங்கை அரசாங்கம் இனப் பிரச்சினை தொடர்பாக தமிழ் பேசும மக்களின் அபிலாஷைகளை அங்கீகரிக்கத் தயாரில்லாத நிலைப்பாட்டை முறியடிக்க எழுக தமிழ் மக்கள் போராட்டம் தேவையாகவுள்ளது.

இணைந்த வடக்கு, கிழக்கு மாகாணங்களே தமிழர் தாயகம் என்பதுடன், சுயநிர்ணயத்துடனான சமஷ்டித் தீர்வை வலியுறுத்துகின்றோம். தமிழர் தாயகத்தைச் சீர்குலைக்கும் திட்டமிட்ட குடியேற்றங்களை உடன் நிறுத்த வேண்டும் என்பதுடன், விசாரணையின்றித் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்

24 ஆம் பக்கம் பார்க்க...

## ஆயுதக்குழு அடாவடி!

(மிருசுவில்)

குறித்த நபரொருவரை வெட்டுவதற்காக ஆயுதங்களுடன் வருகை தந்த 15 பேர் அடங்கிய கும்பல் ஒன்று அவர் வீட்டில் இல்லாத காரணத்தால் அவ் பகுதியில் நின்றிருந்த மூவரை கடுமையாக தாக்கியுள்ளது.

இதில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் மிருசுவில் சந்திப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே இடத்தினை சேர்

24 ஆம் பக்கம் பார்க்க...

## மகிந்தவின் ஆட்சிக்கு மீண்டும் இடமில்லை!

### அநுரகுமார எம்.பி. தெரிவிப்பு



(கொழும்பு)

மகிந்த ஆட்சியை மீண்டும் கொண்டு வர ஒரு போதும் மக்கள் இடமளிக்கமாட்டார்கள். மகிந்த ஆட்சியில் இடம்பெற்ற மோசடிகள், ஜனநாயக விரோத செயல்களை மக்கள் ஒரு

23 ஆம் பக்கம் பார்க்க...

## 362 பிரேரணை நேற்றிலிருந்து அமுல்

(கொழும்பு)

2017 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தினூடாக முன்வைக்கப்பட்ட 362 பிரேரணைகள் நேற்று தொடக்கம் அமுல்படுத்தப்படவுள்ளதாக நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார். இந்த விடயங்கள் குறித்து சம்பந்தப்பட்ட அமைச்சுக்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் நிதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். அமுல்படுத்தப படவுள்ள திட்டங்கள் குறித்து அமை

24 ஆம் பக்கம் பார்க்க...

## பொருத்துவீட்டு விண்ணப்பங்களை முழுமையாக நிராகரியுங்கள்



(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணத்தில் வசிக்கின்ற மக்களுக்கு கல் வீடே வேண்டும், பொருத்து இரும்புக் கூடு வேண்டாம் என தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா பொருத்து வீட்டு விண்ணப்பங்களை முழுமையாக நிராகரிக்குமாறு மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பாக

23 ஆம் பக்கம் பார்க்க...

## விவசாய துறையில் புரட்சிகர மாற்றம்

(பொலநறுவை)

ஆரம்பமாகியுள்ள புதுவருடம் நாட்டின் விவசாயத் துறையில் புரட்சிகரமான மாற்றத்தைக் கொண்டு வரும் என ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன தெரிவித்தார்.

பொலநறுவை மாவட்ட விவசாய சங்கங்களின் தலைவர்களுடன் நேற்று பொலநறுவையில்

24 ஆம் பக்கம் பார்க்க...

## ஐக்கிய இலங்கையை உருவாக்க ஜனாதிபதி, பிரதமர் அர்ப்பணிப்பு

### நல்லாட்சி மலர்வு என சந்திரிகா கருத்து



(கொழும்பு)

சகல இன மக்களும் சமத்துவத்துடன் வாழக்கூடிய வகையில் ஐக்கிய இலங்கையினை கட்டியெழுப்புவதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்

23 ஆம் பக்கம் பார்க்க...

## 25 ஆயிரம் அபராதம் யோசனையில் திருத்தம்

(கொழும்பு)

வீதி விதிகளை மீறும் சாரதிகளுக்கு எதிராக விதிக்கப்படும் அபராதத் தொகையை 25 ஆயிரம் ரூபாயாக அதிகரிக்கும் யோசனையில் திருத்தங்களை மேற்கொள்ள உள்ளதாக நிதி அமைச்சர் தெரிவித்து

### நீதி அமைச்சர்

ள்ளார்.

குறித்த யோசனையில் திருத்தங்களை மேற்கொண்டு இந்த வருடத்தில் மீண்டும் சமர்ப்பிக்கவு ள்ள

24 ஆம் பக்கம் பார்க்க...

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# முன்னாள் பிரதமர் ரட்ணசிறியின் வீடு எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தனுக்கு

(கொழும்பு)

முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்கவின் இல்லம் எதிர்க் கட்சித் தலைவர் இரா.சம்பந்தனுக்கு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் காலமான ரட்ணசிறி விக்கிரமநாயக்க அரசாங்க உத்தியோகபூர்வ இல்லமொன்றை பயன்படுத்தி வந்தார். அவரது மறைவின் பின்னர் அந்த இல்லத்தை, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனுக்கு வழங்குவது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராக பதவி ஏற்று ஒன்றரை ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் உத்தியோகபூர்வ இல்லமொன்று வழங்கப்படவில்லை.

கொழும்பில் வீடமைப்பு திட்டமொன்றின் மூன்றாம் மாடியில் சிறிய இல்லமொன்றிலேயே சம்பந்தன் தங்கியிருக்கின்றார். இது தொடர்பில் பல தடவைகள் ஏற்கெனவே ஊடகங்களில் சுட்டிக்காடடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் அண்மையில் காலமான முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாய க்கவின் உத்தியோகபூர்வ இல்லத்தை சம்பந்தனுக்கு அரசாங்கம் வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-3)


**மலிவு விற்பனை**

வாடிக்கையாளர்களின் நலன்கருதி
தைப்பொங்கலை முன்னிட்டு
02.01.2017 - 15.01.2017 வரை விசேட
விலைக் கழிவுகளில் பெற்றுக் கொள்ளலாம்.

**லைடன் புடைவை நிலையம்**
410, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 2381

(C-7061)


முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்களுக்கான

# 3ஆவது விசேட மருத்துவ முகாம் யாழ்.போதனாவில் நேற்று



(யாழ்ப்பாணம்)

முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்களுக்கான 3 ஆவது விசேட மருத்துவ முகாம் யாழ்.போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பகுதியில் நேற்றைய தினம் நடைபெற்றது.

அனைத்துலக மருத்துவ சுகாதார நலச் சங்கத்தின் அனுசரணையுடன் நடைபெற்ற இந்த மருத்துவ முகாமில் முள்ளந்தண்டு வடம பாதிக்கப்பட்டதால் இடுப்பு மற்றும் நெஞ்சுப் பகுதிக்குக் கீழ் செயலிழந்தவர்கள் பலர் பயன் பெற்றனர்.

யுத்தத்தினாலும் விபத்துக்களினாலும் முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களது அன்றாட தேவைகளுக்குரிய டெற்ரோல், ஓடிக்கலோன், லைபோய்சோப், செவ்எக்சல் முதலான பொருள்கள் அடங்கிய பொதிகளும் வழங்கப்பட்டது. இதற்கான அனுசரணையை அனைத்துலக மருத்துவ சுகாதார நலச்சங்கம் வழங்கி உதவியது.

யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய நிபுணர் த.சத்தியமூர்த்தியின் நெறிப்படுத்தலில் விசேட வைத்திய நிபுணர்களான ஆ.அரவிந்தன், உணர்வழியியில் சிகிச்சை நிபுணர் S.பிறேமகிருஸ்ணா மற்றும் சத்திர சிகிச்சை நிபுணர் சர்மா ஆகியோரது வழிகாட்டலில் ஏனைய துறைசார் வைத்தியர்கள் இம் மருத்துவ முகாமிற்கு உதவிகளை வழங்கியிருந்தனர்.

இதன்போது குருதி மற்றும் சலப் பரிசோதனைகள் செய்யப்பட்டதுடன் சிகிச்சையும் வழங்கப்பட்டது. மேலும் விசேட துறைசார் வைத்திய நிபுணர்களது ஆலோசனைக்காக மேலதிக பரிசோதனைகளுக்கான அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டது.

இம் மருத்துவ முகாமில் அனைத்துலக மருத்துவ சுகாதார நலச்சங்கத்தின் அமெரிக்க மற்றும் இலங்கைகக் கிளையின் பொருளாளர் முரளி இராமலிங்கமும் கலந்து சிறப்பித்திருந்தார். (செ-9)

## மணி விழா வாழ்த்து



பெருமை சேர்த்தோன்
கொக்குவில் இந்துவின்
அதிபர் **வே.ஞானகாந்தன்**
உன்னதமான பணி கண்டு
உவந்து உளமார
வாழ்த்துகின்றோம்.


வாழ்த்துவோர்:
சண் வாமதேவன்
குடும்பத்தினர்
(ஓய்வுநிலை அதிபர்-யா/கோண்டாவில் இராம கிருஸ்ண மகா வித்தியாலயம்)

(C-7036)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
03
02
1947

மறைவு
13
01
2016



## அமரர் சுப்பிரமணியம் பாலசிங்கம்

வாழ்க்கை எனும் பாதையிலே
எம்மோடு பயணித்த எமது அப்பாவே
இன்றுடன் ஓராண்டு முடிந்தாலும்
உங்கள் நினைவுகள் எம்மை விட்டு மறையவில்லை

உம்மையே உலகமென உறுதியாய் நாமிருக்க
எம்மைப் பாதியிலே தவிக்கவிட்டு
ஏன் விண்ணுலகம் நிரந்தரமாய் விரைந்தீரோ

ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும்
உம் நினைவாய் வாழ்ந்திடுவோம்
உங்கள் ஆன்மா ஆண்டவரின் திருவடியில்
அமைதி பெறவேண்டுகின்றோம்.

**குடும்பத்தினர்**
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி


(C-7060)

# குற்றவாளிகளுக்கு தண்டனை நிச்சயம்

## ஜனாதிபதி எச்சரிக்கை

(கொழும்பு)

**இலங்கை மத்திய வங்கியின் பிணை முறிப்பத்திர மோசடி சம்பந்தமாக சட்டத்தை அமுல்படுத்தி குற்றவாளிகளுக்கு நிச்சயம் தண்டனை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். இந்த விடயம் தொடர்பாக தான் கடுமையான நிலைப்பாட்டில் இருப்பதாகவும் பிணை முறிப்பத்திர விவகாரத்தில் எவருக்கும் சலுகையை வழங்க தயாரில்லை எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.**



மத்திய வங்கியின் பிணை முறிப்பத்திர விவகாரம் சம்பந்தமான கோப் குழுவின் அறிக்கையை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றி, சபாநாயகர் மூலம் சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்ட பின்னர், அது சம்பந்தமாக சட்டத்தரணிகளுடன் கலந்துரையாடி தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த மோசடி தொடர்பாக விசாரணை நடத்த விசேட ஆணைக்குழுவை நியமிப்பதா இல்லை என்பது குறித்து கோப் அறிக்கை சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்ட பின்னர் தீர்மானிக்கப்படும் எனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேலும் தெரிவித்தார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (இ-3)

## பொலிஸ் உத்தியோகத்தர் கட்டையால் அடித்துக்கொலை

குருநாகல், குளியாப்பிட்டிய இழுக்ஹேன பிரதேசத்தில் பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவர் அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பிரதேசத்தில் உள்ள வீடொன்றிக்குள் இந்த பொலிஸ அதிகாரி கட்டையால் அடித்து கொலை செய்யப்பட்டுள்ளார்.

இழுக்ஹேன குடாவெவ பிரதேசத்தை சேர்ந்த 53 வயதான கொலை செய்யப்பட்ட நபர் குளியாப்பிட்டிய பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்துள்ளார்.

குடும்ப தகராறு வலுப்பெற்றதன் காரணமாகவே நேற்று அதிகாலை இந்த கொலை நடந்துள்ளது என ஆரம்ப கட்ட விசாரணைகளின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

இதேவேளை தாக்குதல் நடத்திய நபர் குறித்த பிரதேசத்தில் இருந்து தப்பிச் சென்றுள்ளார். இந்த சம்பவம் குறித்து குளியாப்பிட்டிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-3)

## புதுவருடம் கொண்டாடிய சிறுவன் மர்மமான முறையில் மரணம்

(கொழும்பு)

ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள தளவாய்க் கிராமத்தில புத்தாண்டு பிறப்புக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சிறுவன் திடீரென விழுந்து உயிரிழந்துள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஏறாவூர். புன்னைக்குடா வீதி, தளவாய் கிராமத்தைச் சேர்ந்த தயாகரன் மதுஷான் (வயது11) என்ற சிறுவனே நேற்று அதிகாலை மர்மமான முறையில் மரணித்துள்ளான்.

இதுபற்றி சிறுவனின் தந்தை சிவலிங்கம் தயாகரன் தெரிவிக்கையில்,

தான் புன்னைக்குடாவில் ஆழ்கடல் தொழிலுக்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்த வேளையில் நேற்று அதிகாலை 5.30 மணியளவில் மனைவியிடமிருந்து மகன் மரணித்து விட்டதாக செய்தி கிடைத்தது.

ஏறாவூர் ஆதார வைத்தியசாலைக்கு மகன் கொண்டு செல்லப்பட்டபோதும் அவரது உயிர் முன்னரே பிரிந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

புத்தாண்டின்போது எமது வீட்டு வளவில் அமைக்கப்பட்டுள்ள புதிய தேவாலயத்தில் நடந்த புத்தாண்டு கொண்டாட்டத்தில் அவர் சனிக்கிழமை இரவிலிருந்து ஞாயிறு அதிகாலை வரை ஈடுபட்டிருந்தார்.

இந்த நிலையிலேயே இவர் திடீரென விழுந்து உயிரிழந்துள்ளதாக மனைவியிடமிருந்து அறியக்கிடைத்தது என்றார்.

இச்சம்பவம் பற்றி ஏறாவூர் பொலிஸார் தீவிர விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

பிரேத் பரிசோதனைக்காக சிறுவனின் சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-3)

## மக்களின் சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதே நல்லாட்சி அரசாங்கத்தின் நோக்கமாகும்

### நிதியமைச்சர் ரவி தெரிவிப்பு



(கொழும்பு)

மக்களின் எதிர்காலத்தைப பாதுகாத்து அவர்களின் சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதே நல்லாட்சி அரசாங்கத்தின் நோக்கமாகும் என நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

பொருளாதார சவால்களை வெற்றிகொள்வதற்காக அனைவரும் இலங்கையர்களாக கைகோர்க்கவேண்டும் என்றும் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் முன்வைக்கப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டத்திற்கு அமைய புதிய பொருளாதார வேலைத்திட்டம் நாட்டிற்கு அறிமுகப்படுத்தப்படும் என நிதியமைச்சு அறிவித்துள்ளது.

ஊழல் மற்றும் அடக்குமுறையில் இருந்தும் அதிக கடன் சுமையில் இருந்தும் தற்போது நாடு மீண்டு வருகின்றது என்று தெரிவித்துள்ளார். (இ-3)

## துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துக்கு இலங்கை அரசு கடும் கண்டனம்

(கொழும்பு)

துருக்கியின் இஸ்தான்புல் நகரில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்திற்கு இலங்கை அரசாங்கம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

துருக்கியின் இஸ்தான்புல் நகரில் உள்ள Reina Club இல் நடத்திய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் 35 பேர் உயிரிழந்ததுடன் 40 மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

புத்தாண்டு கொண்டாட்டத்தை முன்னிட்டு பெரும் எண்ணிக்கையிலான இளைஞர்கள் மற்றும் இளம்பெண்கள் குறித்த இரவு விடுதியில் தங்கியிருந்துள்ளனர்.

புத்தாண்டைக் கொண்டாட அனைவரும் கூடியிருந்த வேளை இந்த கொடூர தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து இஸ்தான்புல்லில் ஆயிரக்கணக்கான பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

எனவே குறித்த தாக்குதலில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஆழ்ந்த அனுதாபம் தெரிவிப்பதாக வெளிவிவகார அமைச்சின் ஊடகப் பேச்சாளர் மகிஷினி கொலன்னே குறிப்பிட்டுள்ளார்.

தனது உத்தியோக பூர்வ டுவிட்டர் கணக்கில் இந்த தகவலை பதிவேற்றம் செய்துள்ளார். (இ-3)

## பண்டார வன்னியன் சிலை திறப்பு விழா

இன்று பிற்பகல் 3.30 மணிக்கு மல்லாவி நகரத்தில் பண்டார வன்னியன் சிலை திறப்பு விழா நடைபெறும். இதில் முல்லைத்தீவு மாவட்ட அரசியல்வாதிகள், பொது மக்கள் கலந்துகொள்ளவுள்ளார்கள். மேற்படி சிலை வன்னி மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி சி. சிவமோகனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி உதவியுடன் அமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-3)

## அப்ப(ம்) கோட்பாட்டில் அரசாங்கத்தை கவிழ்க்க தயாராகும் கூட்டு எதிர்க்கட்சி

(கொழும்பு)

போரை முடிவுக்கு கொணடு வந்து நாட்டை அபிவிருத்தியை நோக்கி இட்டுச் சென்ற மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தை அப்ப(ம்) கோட்பாட்டில் கவிழ்க்க முடியுமாயின் நாட்டுக்கு எந்த பணிகளையும் செய்யாத தற்போதைய அரசாங்கத்தை அப்ப(ம்) கோட்பாட்டில் மாற்றுவது பெரிய காரியமல்ல என கூட்டு எதிர்க்கட்சியின் ஒருங்கிணைப்பாளரான நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

மினுவாங்கொடையில் நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

தற்போதைய அரசாங்கத்தை 2017ஆம் ஆண்டில், அவர்கள் நாட்டுக்கு அறிமுகப்படுத்திய அப்ப(ம்) கோட்பாட்டை பயன்படுத்தியே வீட்டுக்கு அனுப்புவோம். மேலும் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் அரசாங்கத்தை அமைத்த பின்னர் இந்த கோட்பாட்டை அனைவரும் அறிந்து கொள்ள முடியும்.

யுத்தம் காரணமாக நாடு அழிந்து போயிருந்த சந்தர்ப்பத்திலேயே மகிந்த ராஜபக்ஷ நாட்டை பொறுப்பேற்று போரை முடிவுக்கு கொண்டு வந்து, அதற்கு செலவு செய்த பணத்தை கல்விக்கு செலவு செய்தார.

மகிந்த ராஜபக்ஷ போரை முடிவுக்கு கொண்டு வந்து நாட்டை அபிவிருத்தி செய்து வந்த போது மாற்றம் ஒன்றை ஏற்படுத்தும் தேவை சிலருக்கு ஏற்பட்டது. இதற்காக பல்வேறு கருத்துக்களை சமூகமயப்படுத்தினர்.

தற்போது மாற்றம் ஏற்பட்டுள்ளதா என்பது குறித்து சிந்திக்க வேண்டும். நாட்டின் தேசிய பாதுகாப்பு பாதிக்கப்பட்டுள்ளது, வடக்கு, கிழக்கில உள்ள பௌத்த விகாரைகள் உடைக்கப்பட்டுள்ளன.

அரிசி விலை 100 ரூபாவாக அதிகரித்துள்ளது. மாற்றத்திற்காக வாக்களித்தவர்களுக்கு தற்போது வெட்கம் ஏற்பட்டுள்ளது எனவும் பிரசன்ன ரணதுங்க மேலும் தெரிவித்தார். (இ-5)

## மழையுடன் மலர்ந்த புத்தாண்டு கிழக்கில் விவசாயிகள் மகிழ்ச்சி

கடந்தாண்டு மழையுடன் விடைபெற்றது. புதிய ஆண்டும் மழையுடன் மலரந்திருக்கின்றது. இதனால் கிழக்கில் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்ததுடன் நீண்ட நாட்களாக விவசாயிகள் மழையை எதிர்பார்த்து காத்திருந்தனர். ஆண்டு மாற்றத்துடன் அது ஓரளவு நிறை வேறியிருக்கின்றது. (இ-3)

## 2017ம் ஆண்டுக்கான முதலாம் தவணை இன்று ஆரம்பம்

2016 இற்கான மூன்றாம் தவணை விடுமுறை காலம் முடிவடைந்து இன்று 2017 ஆம் ஆண்டிற்கான முதலாம் தவணைக்கான கற்றல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதேவேளை க.பொ.த. சாதாரண தரப்பரீட்சை வினாத தாள்கள் திருத்தும் பணிகள் காரணமாக 68 பாடசாலைகள் எதிர்வரும் 16 ஆம் திகதியன்று திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், 2017 ஆம் ஆண்டிற்கான முதலாம் தவணையானது ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதியன்று நிறைவடையவுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (இ-3)

## ஜனாதிபதிக்கு ஆசிவேண்டி 5000 பேருக்கு அன்னதானம்



ஜனாதிபதிக்கு ஆசி வேண்டி காத்தான்குடியில் 5000 பேருக்கு நேற்று அன்னதானம் வழங்கப்பட்டதுடன் நல்லாட்சி நிலைக்கவும் நாட்டில் நிரந்தர அமைதி சமாதானம் ஏற்படவும் விசேட பிரார்த்தனை வைபவமும் இடம்பெற்றுள்ளது.


மட்டக்களப்பு காத்தான்குடி றசூல் சங்கம் ஏற்பாடு செய்த இந் நிகழ்வு அதன் தலைவர் மௌலவி ஏ.எம். றஸீன் றப்பானி தலைமையில் வாவிக்கரை வளாகத தில் நடைபெற்றது.

காத்தான்குடி பொலிஸ் நிலைய சமூக நல்லிணக்க பிரிவு பொறுப்பதிகாரி எஸ்.மகேஸவரன் உட்பட மார்க்க அறிஞர்கள், முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

காத்தான்குடி பத்ரியா ஜும்ஆ பள்ளிவாயல் உலமாக்களினால் விசேட மௌலீது நிகழ்வும் இடம்பெற்றது.

பெரும் எண்ணிக்கையிலான தமிழ் முஸ்லிம் மக்கள் அன்னதான நிகழ்வில் கலந்து கொண்டனர். (இ-3)

# மிஸ்பா கப்டனாக செயல்படுவார் பாகிஸ்தான் கிரிகெட் வாரியம்



சிட்னி டெஸ்டில் பாகிஸ்தான் அணியின்கப்டனாக மிஸ்பா உல்ஹக் செயல்படுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியா சென்று விளையாடி வருகிறது. மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை அவுஸ்திரேலியா 2 - 0 எனக் கைப்பற்றி முன்னிலையில் இருக்கிறது.

'பாக்சிங் டே' டெஸ்ட் சமநிலையில் முடியும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் பாகிஸ்தான் அணி இன்னிங்ஸ் மற்றும் 18 ரன்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்து.

இதனால் டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவது குறித்து யோசித்து வருகிறேன் என்று மிஸ்பா உல் ஹக கூறியிருந்தார். இதனால் 3-ந் திகதி தொடங்க இருக்கும் டெஸ்டில் அவர் பாகிஸ்தான் அணியின் கப்டனாக இருப்பாரா? என்ற கேள்வி எழுந்தது.

இந்நிலையில் சிட்னி டெஸ்டில் மிஸ்பாதான் கப்டனாக இருப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்தின் மீடியா டைரக்டர் அம்ஜத் ஹூசைன் கூறுகையில் "சிட்னி டெஸ்டில் மிஸ்பா விளையாடுவார். அவர் அணியின் கப்டனாக செயல்படுவார்" என்று தெரிவித்துள்ளார்.


சிட்னி டெஸ்டில் விளையாடும் மிஸ்பா அதன்பின் ஓய்வு பெறுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. "அணியின் வெற்றிக்கு எனது பங்களிப்பு இல்லை என்றால், அணியில் நீடிப்பதற்கான எந்த வாய்ப்பும் இல்லை" என்று மிஸ்பா கூறிஇருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சிமித்தை நிலைக்க விடமாட்டேன் பௌன்சர் மூலம் நிலைகுலைய வைப்பேன்

## இர்பான் மிரட்டல்

பாகிஸ்தானின் உயரமான வேகப்பந்து வீச்சாளர் என்று அழைக்கப்படும் மொகமது இர்பான் 7 அடியும் ஒரு இஞ்ச் உயரம் கொண்டவர்.

இவர் அவுஸ்திரேலியா அணிக்கெதிரான பாகிஸ்தான் ஒருநாள் அணியில் இடம்பிடித்துள்ளார்.



இரு அணிகளுக்கு இடையிலான ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் 13ஆம் திகதி தொடங் குகிறது. இதுகுறித்து மொகமது இர்பான் கூறுகையில் நான்தான் மிகவும் அதிக உயரம் கொண்ட பந்து வீச்சாளர்.


பவுன்சருக்கு சாதகமான அவுஸதிரேலியாவின் ஆடுகளத்தை நான் சாதகமாக பயன்படுத்திக்கொள்வேன்.

அதன்மூலம் அவுஸ்திரேலிய அணியின் தலைவர் ஸ்மித்தை வீழ்த்துவேன். ஸ்மித்தான் என்னுடைய இலக்கு என்றார்.

# ஆறுமாத ஓய்வின் பின் மீண்டும் களம்புகும் பெடரர்

டென்னிஸ் அரங்கில் 17 முறை கிராண்ட்ஸ்லாம் பதக்கம் வென்று சாதனைப் படைத்தவர் ரோஜர் பெடரர்.

அதன்பிறகு காயம் காரணமாக சுமார் 6 மாதம் விளையாடாமல் இருந்தார். அதன்பின் தற்போது பெர்த்தில் நடைபெறும் இரட்டையர்கள் விளையாடும் ஹோப்மன் கோப்பை தொடரில் விளையாட இருக்கிறார்.



35 வயதாகும் இவர் கடந்த ஜூலை மாதம் இங்கிலாந்தில் நடைபெற்ற விம்பிள்டன் கிராண்ட்ஸ்லாம் தொடரின் அரையிறுதியில் மிலோஸ் ரயோனிக்கை எதிர்த்து விளையாடினார்.

சுவிட்சர்லாந்து அணி சார்பில் பெடரர், பென்சிக் உடன் இணைந்து களம் இறங்குகிறார்.

# ஐ.சி.சி.தரவரிசை : இரட்சைச் சதத்தால் 6-வது இடத்திற்கு முன்னேறினார் அசார் அலி


அவுஸ்திரேலியா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான 2-வது டெஸ்ட் கிரிக்கெட் மெல்பேர்னில் கடந்த 26ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரை நடைபெற்றது.

இதில் அவுஸ்திரேலியா இன்னிங்ஸ் மற்றும் 18 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

முதல் இன்னிங்சில் பாகிஸ்தான் அணியின் தொடக்க வீரர் அசார் அலி சிறப்பாக விளையாடி இரட்டை சதம் அடித்தார்.

முதல் இன்னிங்சில் 205 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்த அவர், 2-வது இன்னிங்சில் 43 ஓட்டங்கள் சேர்த்தார்.


இதன் மூலம் ஐ.சி.சியின் டெஸ்ட் தரவரிசையில் 6-வது இடத்திற்கு முன்னேறியுள்ளார். அவரது கிரிக்கெட் வாழ்க்கையில் இதுதான் சிறந்த டெஸ்ட் தரவரிசை ஆகும்.



அவுஸ்திரேலிய அணியின் தலைவர் ஸ்மித் 937 புள்ளிகளுடன் முதல் இடத்திலும், 875 புள்ளிகளுடன் விராட் ஹோலி 2-வது இடத்திலும், ஜோ ரூட் 848 புள்ளிகளுடன் 3-வது இடத்திலும், 817 புள்ளிகளுடன் கேன் வில்லியம்சன் 4-வது இடத்திலும், 790 புள்ளிகளுடன் டேவிட் வோர்னர் 5-வது இடத்திலும் உள்ளனர்.

# என் நெற்றியில் துப்பாக்கி வைக்கப்பட்டபோது வாழ்வை இழந்துவிட்டேன் என எண்ணினேன்

## கங்குலி நெகிழ்ச்சி



முன்னாள் இந்திய அணித் தலைவர் சவுரவ் கங்குலி லண்டனில் துப்பாக்கி முனையில் சிக்கிய சம்பவம் தற்போது தெரியவந்துள்ளது.

இந்திய கிரிக்கெட் அணியின் வெற்றிவாகை சூடிய அணித்தலைவர் என வர்ணிக்கப்பட்டவர் சவுரவ் கங்குலி. சச்சின், லட்சுமண், டிராவிட் உள்ளிட்ட ஜாம்பவான்கள் இடம் பெற்ற அணியை வெற்றிகரமாக வழிநடத்தியவர் கங்குலி.

இவர் கடந்த 1996இல் பிரித்தானியா சென்ற போது, தனது வாழ்க்கையில் நடந்த மோசமான நிகழ்வை தற்போது வெளியிட்டுள்ளார்.

கடந்த 1996 ஆம் ஆண்டு லண்டன் சென்ற போது, ஒரு கும்பலிடம் துப்பாக்கி முனையில் சிக்கிய சம்பவத்தை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து விளக்கிய கங்குலி, லண்டனின் புறநகர் பகுதியில் உள்ள சுரங்கப்பாதையில் நாங்கள் ரயிலில் பயணம் செய்து கொண்டிருந்த போது எங்கள் பகுதியில் ஒரு குழு இருந்தது. அதில் இரண்டு ஆண்கள் மூன்று பெண்கள் இருந்தனர்.

அவர்கள் குடித்துக் கொண்டிருந்தனர். அதில் ஒருவன் எங்களை முறைத்துக்கொண்டே இருந்தான். நான் எந்தப் பிரச்சினையும் வேண்டாம் என உடன் இருந்த சித்துவிடன் சொன்னேன்.

இதை கவனித்த அந்த நபர் எங்களை நோக்கி வந்து என்னைப்பார்த்து என்ன சொன்னாய்? என்றான்.

இதைக் கேட்டு ஆத்திரம் கொண்ட சித்து அவனை தடுக்க, பிரச்சினை துவங்கியது. உடனே நான் என்னுடைய கண்ணாடியை கழட்டி தரையில் வீசிவிட்டு எது நடந்தாலும் சந்திக்க தயாரானேன்.

பின்னர் ஒரு ரயில் நிலையம் வந்தது அப்போது நான் அவனை தள்ளிவிட்டேன். அவன் கீழே விழுந்தான். அவன் எழுந்தபோது. என் முகத்தில் துப்பாக்கி இருப்பதைத்தான் பார்த்தேன்.

அப்போது என் மனதில் என் வாழ்நாள் இங்கேயே முடிந்துவிடும் என நினைத்தேன். அப்போது ஒரு பெண் அவனை பின்பக்கம் இருந்து தாக்கி, எங்களை காப்பாற்றினார். இவ்வாறு கங்குலி தெரிவித்துள்ளார்.

# இந்திய அணியில் இடம்பிடிக்க உள்ளூர் போட்டியில் யுவராஜ், ரெயினா

இந்திய அணியில் இடம்பிடித்து சிறப்பாக விளையாடியவர்கள் யுவராஜ் சிங், ரெய்னா. தற்போது இவர்கள் இரண்டு பேரும் இந்திய அணியில் இல்லை. மீண்டும் இந்திய அணியில் இடம்பிடிப்பதற்காக தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.



தற்போதைய நிலையில் இந்திய அணியில் இடம்பிடிக்க வேண்டுமென்றால் உள்ளூர் போட்டிகளில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த வேண்டும்.

இதற்காக இவர்கள் இருவரும் டி.ஒய். பட்டீல் இருபது - 20 தொடரில் விளையாட இருக்கிறார்கள்.

மும்பையில் உள்ள நெருல் டி.ஓய்.பட்டீல் ஸ்போர்ட்ஸ் அக்கடமியில் ஜனவரி 4ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை இந்த தொடர் நடைபெற இருக்கிறது. 16 அணிகள் கலந்துகொள்ளும் இந்த தொடரில் 31 போட்டிகள் நடைபெற இருக்கிறது.

இந்தப் போட்டியில் விளையாடி தங்கள் திறைமையை நிரூபித்தால் கண்டிப்பாக இந்திய அணியில் இடம் கிடைக்கும்.

தங்கள் திறமையினை வெளிப்படுத்த நம்பிக்கையுடன் களம்புகும் யுவராஜ், ரெய்னா ஆகியோருக்கு வெற்றி கிடைக்குமா?

# முல்லையில் 5,901 குடும்பங்கள் பெண் தலைமைத்துவத்தின் கீழ்

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுமார் ஐயாயிரத்து 901 குடும்பங்கள் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களாக காணப்படுகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஆறு பிரதேச செயலர் பிரிவுகளிலும் மீள் குடியேறியுள்ள சுமார் நாற்பத்து இரண்டாயிரத்து 158 குடும்பங்களில் ஐயாயிரத்து 901 குடும்பங்கள் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களாக காணப்படுகின்றன என மாவட்டச் செயலகத்தின் புள்ளிவிபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் 1577 குடும்பங்களும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் 1852 குடும்பங்களும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் 1055 குடும்பங்களும் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 636 குடும்பங்களும் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் 444 குடும்பங்களும் வெலிஓயா பிரதேச செயலர் பிரிவில் 337 குடும்பங்களும் என சுமார் ஐயாயிரத்து 901 குடும்பங்கள் பெண்களைத்தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களாக காணப்படுகின்றன. இதில் 19 கிராம அலுவலர் பிரிவுகளை கொண்ட புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் அதிகளவான பெண தலைமைத்துவக் குடும்பங்கள் காணப்படுகின்றன.

இவ்வாறு ஆறு பிரதேச செயலர் பிரிவுகளிலும் உள்ள 5901 பெண் தலைமைத்து குடும்பங்களிலும் நான்காயிரத்து 488 குடும்பங்கள் கணவனை இழந்த குடும்பங்களாகவும் ஏனைய குடும்பங்கள் கணவனைப் பிரிந்து வாழும் குடும்பங்கள், காணாமல் போனவர்கள் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டவர்களின் குடும்பங்களும் அடங்குகின்றன. (இ-15)

## நேரமாற்றம்

(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த பாடசாலை பேருந்து சேவைகளில் நேரமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக கிளி நொச்சி சாலை முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

தற்போது பாடசாலைகள் 2017ஆம் ஆண்டில் கல்வி நடவடிக்கைகளுக்காக காலை 7.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் அதற்கமைவாக இலங்கை போக்குவரத்துச்சபையின் பேருந்து சேவைகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் புதிய நேர ஒழுங்குகளுக்கு அமைவாக இன்று முதல் சேவை நடைபெறும் எனவும் சாலை முகாமையாளர் அறிவித்துள்ளார்.

அதன்படி கிளிநொச்சி சிவபுரம் காலை 6.40 காஞ்சிபுரத்திலிருந்து பரந்தன் இந்து மகா வித்தியாலயம் காலை 7.10 மணிக்கும் விசுவமடு றெட்பானாவிலிருந்து முரசுமோட்டை முருகானந்தாக் கல்லூரிக்கான சேவை காலை 6.40 மணிக்கும் அரசபுரம் முக்கொம்பன் சேவை காலை 7 மணிக்கும் மன்னித்தலை பூநகரி மகா வித்தியாலயத்திற்கான சேவை காலை 6.20 மணிக்கும் யாழ்ப்பாணம் திருவையாறுக்கான சேவை காலை 6.05 மணிக்கும் யாழ்ப்பாணம் வட்டக்கச்சி சேவை அதிகாலை 5.40 மணிக்கும் யாழ்ப்பாணம் முக்கொம்பன் கிளிநொச்சிக்கான சேவை அதிகாலை 5.45 மணிக்கும் யாழ்ப்பாணம்-மாங்குளம் ஊடாக முல்லைத்தீவுக்கான சேவை காலை 7.15 மணிக்கும் மாற்றப்பட்டுள்ளதாகவும் பிற்பகல் பாடசாலை முடிவுறும் நேரங்களுக்கு அமைவாக சேவைகள் மேற்கொள்ளப்படும் எனவும் கிளிநொச்சி சாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது. (இ-15)

## ஆற்றுமணலை ஏற்றிப் பயணித்த 3 டிப்பர் வாகனங்கள் பறிமுதல்



கிளிநொச்சி / முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் வெலிகன்னனின் உத்தரவுக்கமைய விசேட போதைப்' பொருள் தடுப்புப் பிரிவு பொலிஸ் அணியினரால் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மாங்குளம் பொலிஸ் நிலையப்பிரிவின் ஊடாக செல்லும் ஏ-9 வீதியில் 18 ஆம் போர் என்னும் இடத்தில் அனுமதிப் பத்திரத்திறகு முரணான வகையில் ஆற்று மணலை ஏற்றி பயணித்த டிப்பர் வாகனங்கள் 3, பறி முதல் செய்யப்பட்டுள்ளதுடன், சந்தேகத்தின் பேரில் அதன் சாரதிகள் மூவரும் கைது செய்யப்பட்டு மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக மாங்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மாலின் பெரேரா தெரிவித்துள்ளார்.

பிரதிப் பொலிஸ்மா அதிபர் காரியாலயப் பிரிவின் விசேட போதைப் பொருள் தடுப்புப் பிரிவுப் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து திடீர் சுற்றி வளைப்பை மேற்கொண்டபோதே அனுமதிப்பத்திரத்திற்கு முரணாக ஆற்று மணலை ஏற்றிப் பயணித்த டிப்பர் வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இச்சம்பவத்தில், கைதான சந்தேக நபர்களிடம் விசாரணைகள் நடைபெற்று முடிந்த நிலையில், கைப்பற்றப்பட்டுள்ள தடயப்பொருட்களுடன் இன்று திங்கட்கிழமை காலை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக மாங்குளம்பொலிஸ நிலையப் பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (இ -15)


## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>சூரிசெவ் 6 இல்<br>உயரம்: 5’8"<br>தகைமை/தொழில்:O/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/6701 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: செவ் 4 இல்<br>c a uk; 5’1"<br>தகைமை/தொழில்: A/L/தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/6704 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>உயரம்: 6’1"<br>தகைமை/தொழில்:O/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/6702 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 13 செவ் 4 இல்<br>உயரம்: 150 cm<br>தகைமை/தொழில்:O/L<br>தொ.இ: G/6706 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 17<br>உயரம்: 5’7"<br>தகைமை/தொழில்:O/L/வியாபாரம்<br>தொ.இ: B/6703 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 26<br>உயரம்: 5’3"<br>தகைமை/தொழில்:Diploma/ஆசிரியர்<br>தொ.இ: G/6707 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 36 சூரிசெவ் 7இல<br>உயரம்: 5’7’’<br>தகைமை/தொழில்:O/L/மெக்கானிக் அரச தொழில்<br>தொ.இ: B/6705 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 9<br>உயரம்: 5’3"<br>தகைமை/தொழில்:தாதி பிரான்ஸ்<br>தொ.இ: G/6708 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai. jaffna@gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.


## இராசி பலன்

02.01.2017
(மார்கழி 18, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.22 மணிக்கு
சதுர்த்தி பிற்பகல்.2.57 மணிவரை
அவிட்டம் பிற்பகல் 4.16 மணிவரை
சுபநேரம் 12.30- 2.00 மணிவரை
இராகுகாலம் 8.00-9.30 மணிவரை
சதுர்த்தி விரதம்
திருவெம்பாவை பூஜை ஆரம்பம்
வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது செவ் சுக் சந் | கிரகநிலை சந்திராஷ்டமம் பூசம்- ஆயிலியம் | | |
| | | | ராகு |
| சூரி | சனி புத | | குரு |

**மீனம்:** ஆதாயம் இல்லாத அலைச்சல்கள் இடம்பெறலாம், மூத்த சகோதரர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், சுப செலவுகள் இடம் பெறலாம்.

**மேடம்:** எடுத்த காரியங்களில் முன்னேற்றம் பெறுவீர்கள், குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**இடபம்:** செய்தொழில் மேன்மையுண்டு, செல்வாக்கு மேலோங்கும் நாள், சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத் தோன்றும், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.

**மிதுனம்:** பகை விலகி பாசம் கூடும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்,

**கும்பம்:** இறை வழிபாட்டால் இன்பம் காணவேண்டிய நாள், சான்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம், ஒரு சில வேலைகளை முடிக்க பல மணி நேரம் காத்திருக்கும் நிலை ஏற்படலாம்.

**கடகம்:** தேக நலனில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், கணபதியை வழிபட்டு காரியம் தொடங்கவேண்டிய நாள், மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் ஏற்படலாம்.

**மகரம்:** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**சிம்மம்:** மனதிற்கினிய சம்பவமொன்று இடம்பெறலாம், நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்களால் பலனுண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**தனுசு:** வெளியூர்த் தொடர்புகளால் அனுகூலமுண்டு, விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபடவேண்டிய நாள், வியாபார விரோதம் விலகும், பயணங்களால் பலனுண்டு.

**விருச்சிகம்:** பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயம் உண்டு, உறவினர் வருகையுண்டு, வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், வாகனசுகமுண்டு.

**துலாம்:** கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், வளர்ச்சி கூடும் நாள், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள்.

**கன்னி:** செய்தொழில் மேன்மையுண்டு, சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், கடன் பாக்கிகள் திடீரென வசூலாகலாம், ஆலய வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

# அதிகரித்துவரும் போதைப்பொருள் கடத்தலை கட்டுப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு மிக அவசியம்

## யாழ்.அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் அதிகரித்துவரும்போதைப்பொருள் கடத்தலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு அனைத்து தரப்பினருடைய ஒத்துழைப்பும் மிக அவசியம் என யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ் அரச அதிபர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது. யாழ் மாவட்டத்தில் அதிகரித்து வரும் போதைப்பொருள் கடத்தலை தடுப்பதற்கு எவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் போதைப்பொருள் கடத்தல் மற்றும் போதைப்பொருள் பாவனை மிக முக்கியமான பிரச்சினையாகவும் சவாலாகவும் உள்ளது. கேரள கஞ்சா கடத்தல் என்பது தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் பிரச்சினையாகவுள்ளது. இவற்றை கட்டுப்படுத்துவதற்கு ஒரு தரப்பினர் மட்டும் நடவடிக்கை எடுத்தால்போதாது அனைத்து தரப்பினரும் ஒன்று சேர்ந்து நடவடிக் கைகளை மேற்கொள்ள வேண்டும்.

எல்லோரும் ஒன்று சேர்ந்தால் மட்டுமே இந்த பாரிய சவாலான விடயத்தை எமது மாவட்டத்தில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும். அதிலும் முக்கியமாக இப் போதைப்பொருள் கடத்தலை முறியடிக்க பொதுமக்களின் ஒத்துழைப்பு மிக மிக அவசியமாகும். போதைப்பொருள பாவனை பொதுமக்கள் மத்தியில் அதிகளவில் பரப்பப்படுகறது. எனவே அது தொடர்பில் தகவல்களை அறிபவர்கள் உடனடியாக எமக்கு தெரிவிக்க முடியும். போதைப்பொருள் கடத்தல் தொடர்பான தகவல்கள் தெரிவிப்பவர்கள் தொடர்பில் இரகசியம் பேணப்படுவதுடன் உடனடி நடவடிக்கைகளும் எடுக்கக்கூடியதாக இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)




யாழ். ஆனைப்பந்தியில் உள்ள குருகுலத்தில் இந்து சமய அலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்பட்டுவரும் இந்து ஆன்மீகப் பிரசாரகர் பயிற்சி நெறிசார்ந்த பயிலுநர்கள் நேற்று முன்தினம் தமது களக்கற்கைக்காக காரைநகர் சிவன் கோவிலுக்குச் சென்றிருந்தனர். கோவிலும் நாமும் என்ற பொருளில் இடம்பெற்ற இக்களக்கற்கையில் சிவன் கோவில் மஹோற்சவ குரு பிரம்மஸ்ரீ தி.உமாசுதக் குருக்கள். நீர்வை தியாக.மயூரகிரிக் குருக்கள். விரிவுரையாளர் ச.லலீசன் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து விளக்கங்களை வழங்கினர்.

## சமூக சேவையில் ஆர்வமுள்ளோர் பயிற்சிக்கு விண்ணப்பிக்க முடியும்

பல்சமய கருத்தாடல்நிலையம் மற்றும் யாழ். ராகஸ்வரம் இசை மன்றத்தின் ஏற்பாட்டில் story of image @ 4 toography வழங்கும் ஒளிப்படப் பயிற்சி நெறி நடத்தப்படவுள்ளது. இலவசமாக வழங்கப்படும் மேற்படி பயிற்சியானது பகுதி நேரமாக நடத்தப்படும். இதில் சமூக சேவையில்ஆர்வமுள்ளவர்கள்இணைந்து கொள்ள முடியும்.

ஒளிப்படத் துறையால் சமூகத்திற்கு பயனுள்ள வகையில் சிறந்த படங்களை எடுத்து கண்காட்சிகள் மற்றும் கருத்தாடல்கள் மூலம் நல்ல சமூகத்தை கட்டி எழுப்ப விரும்புவோர் விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒளிப்படப் பயிற்சி நெறி 2017

யாழ் ராகஸ்வரம் இசை மன்றம்

28/1 A.V றோட், கொழும்புத்துறை எனும் முகவரிக்கு 14.01.2017 ஆம் திகதிக்கு முன்னர் வி ணப்பிக்க முடியும் என அறி விக்கப்பட்டுள்ளது. (இ-51)

## பாடல் போட்டிக்கான குரல் தேர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். ராகஸ்வரம் இசைமன்றத்தின் ஏற்பாட்டில் மாபெரும் பாடல் போட்டிக்கான குரல் தேர்வு நடைபெறவுள்ளது. சிறுவர், இளையோர் , மூத்தோர் என மூன்று பிரிவுகளாக குரல் தேர்வுகள் நடத்தப்பட்டு எதிர்வரும் 14.01.2017 சனிக்கிழமை மாபெரும் பாடல் போட்டியை நடத்தி சிறந்த பாடக, பாடகிகள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இதில் இசைக் குழுக்களில் பாடுவோர் கலந்து கொள்வதாயின் விண்ணப்பத்தில் குழுவிபரங்களையும் குறிப்பிடல் வேண்டும். அவர்களுக்கு பிரத்தியேகமாக போட்டிகள் நடத்தப்படும்.பாடல் போட்டியில் கலந்து கொள்ள விரும்புவோர்

யாழ் ராகஸ்வரம் இசை மன்றம்,

28/1 A.V றோட், கொழு ம்புத் துறை எனும் முகவரி க்கு விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-51)

## காசோலை வழங்கல்



கரவெட்டி பிரதேச செயலகத்தில் அமைந்துள்ள சமூக சேவை பகுதியினரால் வறுமைக்கோட்டின் கீழுள்ள பயனாளிகளுக்கு பிரதேச செயலர் காசோலை வழங்கும் நிகழ்வில் பிரதேச செயலர் எஸ்.சிவசிறி சமூக சேவை உத்தியோகத்தர் சிறி வரதராஜபாஸ்கரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.(இ-60)

# சுவரொட்டிகளை காட்சிப்படுத்தல் முற்றாகத் தடைசெய்யப்படுகிறது

## யாழ்.மாநகர சபை ஆணையாளர் அறிவிப்பு

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் காணப்படும் குறித்தொதுக்கப்பட்ட இடங்கள் தவிர்ந்த பொதுச் சொத்துக்கள், பொது இடங்களில் சுவரொட்டிகளை காட்சிப்படுத்துதல் ( ஒட்டுதல் ) மற்றும் வீதிகளின் ஓரங்களில் , பொது இடங்களில்உள்ள நிழல் தரும் மரங்களில் விளம்பரத் தகடுகளை/பலகைகளைஆணிகளைப் பாவத்துப் பொருத்துதல் என்பன 01.01.2017 முதல்முற்றாகத்தடை செய்யப்படுகிறது. குறித்த முடிவு பொதுச் சொத்துக்களை பாதுகாக்கும் முகமாகவும், வரியிறுப்பாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை தவிர்ப்பதற்காகவும் யாழ். மாநகர பகுதியை அழகுபடுத்துவதற்காகவும் எடுக்கப்படுகின்றது.

சுவரொட்டிகளை விளம்பர நோக்கத்திற்காகவும், அறிவுறுத்தல் நோக் கத்திற்காகவும் காட்சிப்படுத்த விரும்புவோர் தங்களது இரண்டிற்கும் மேற்படாத சுவரொட்டிகளை யாழ்ப்பாணம் மாநகர சபையும் தனியார் நிறுவனம் ஒன்றும் இணைந்து நகரப் பகுதியில் ஆங்காங்கே நிறுவியிருக்கின்ற விளம்பரப் பலகைகளில் மாத்திரம் காட்சிப் படுத்த முடியும். சுவரொட்டிகளை காட்சிப் படுத்துவோர்தங்களது சொந்த ஆதனங்களில் காட்சிப்படுத் துவதற்குத் தடை எதுவுமில்லை எனினும் மற்றையவர்களது ஆதனங்களின் மீது காட்சிப் படுத்துவது தவிர்க்கப்படல் வேண்டும்.

விளம்பரங்கள் மற்றும் அறிவுறுத்தல்களை பதாகை அல்லது தொங்கும் பதாகை வடிவில் காட்சிப்படுத்த விரும்புவோர் யாழ்.மாநகர சபையின் அனுமதியுடன் காட்சிப் படுத்த முடியும். விளம்பரங்கள் மற்றும் அறிவுறுத் தல்களின்தன்மையைபொறுத்துக் கட்டணம் அறவிடுதல் தொடர்பாகத் தீர்மானிக்கப்படும்.

மேற்படிஅறிவுறுத்தல்களை மீறி சுவரொட்டிகளை மற்றும் விளம்பரத் தகடுகளை/ பலகைகளைவீதிகுறியீட்டுபலகைகள், பொது இட ங்கள் மற்றும் பொதுச் சொத் துக்கள் மீது காட்சிப்படுத்த முற்படுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறான மீறல் புரியும் விளம்பர தாரர்கள்அல்லது அறிவித்தல்செய்தோர் ஆகியோர்இவ்விடயத்தில் பொறுப் பாளிகள் ஆக்கப்படுவர் என யாழ். மாநகரசபை ஆணையாளர் பொ. வாகீசன் அறிவித்துள்ளார். (இ





ஊர்காவற்றுறை பிரதேச சபையினால் உள்ளூராட்சி மாதம் மற்றும் தேசிய வாசிப்பு மாத இறுதி நாள் நிகழ்வு கடந்த 29 ஆம் திகதி தலைமை அலுவலக மாநாட்டு மண்டபத்தில். பிரதேச சபை செயலாளர் சு.சுதர்ஜன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் , சிறப்பு விருந்தினராக ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் திருமதி.எழிலரசி அன்ரன் யோகநாயகம். கௌரவ விருந்தினராக ஊர்காவற்றுறை தபால் அதிபர் ஆர்.எஸ்.ஜீவராஜ் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள்: பொ.சோபிகா)

# விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தினால் 2016/2017 ஆம் கல்வியாண்டிற்கு பொறியியல் ,கற்கை நெறிக்கு (Bachelor of Technology & Bachelor Of Industrial Studies) புதிய மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பதாரிகள் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் கணித/ உயிரியல் பிரிவில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும் **அல்லது** இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் அடிப்படை தொழில்நுட்ப கற்கை நெறியில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

இக் கற்கை நெறிக்காக விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் 14.12.2016 தொடக்கம் 17.01.2017 வரை www.ou.ac.lk என்னும் இணையத்தளத்தினுள் பிரவேசிப்பதன் மூலம் விண்ணப்பங்களைப் பெற்று விண்ணப்பிக்க முடியுமென யாழ். பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ

---

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் கல்வி பீடத்தினால் 2016/2017 ஆம் கல்வியாண்டிற்கு முன்பள்ளிக் கல்விச் சான்றிதழ் நிகழ்ச்சித் திட்டத்திற்கு புதிய மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பதாரிகள் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் கணிதம், தமிழ் உட்பட குறைந்தது ஆறு பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். இக் கற்கை நெறிக்காக விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் 18.12.2016 தொடக்கம் 18.01.2017 வரை www. ou. ac.lk என்னும் இணையத்தளத்தினுள் பிரவேசிப்பதன் மூலம் விண்ணப்பங்களைப் பெற்று விண்ணப்பிக்க முடியுமென யாழ்.பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.(இ

# வட மத்திய மாகாண சபை உறுப்பினராக என்.வி.சமந்த

(கொழும்பு)

வட மத்திய மாகாண சபையில் நிலவும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் உறுப்பினர் வெற்றிடத்திற்கு என்.வி. சமந்த நியமிக்கப்பட்டுள்ளார்.

மாகாண சபை செயலாளர் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு வழங்கிய அறிவித்தலையடுத்து கூட்டமைப்பின் பொதுச் செயலாளரால் இந்த நியமனம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. அம்மாகாண சபை தலைவராக இருந்த ஆனந்த சரத்குமார ரத்நாயக்க காலமானதையடுத்து ஏற்பட்ட வெற்றிடம் தொடர்பிலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (இ-3)



எழுதுமட்டுவான் கரம்பகம் கிராம முன்னேற்றச் சங்கமண்டபத்தில் சிரேஷ்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெ.சத்தியேந்திரன் தலைமையில் மிரிகம சில்வர் மில் நிறுவனத்தினரின் நிதிப்பங்களிப்பில் தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் அனுசரணையுடனும் 100 பயனாளிகளுக்கு 500 பொலித்தீன் பை தென்னங்கன்றுகள் இலவசமாக விநியோகம் செய்யும் வைபவம் நடைபெற்றது.

# மஹோற்சவ விஞ்ஞாபனம்

குரும்பசிட்டி அருள்மிகு முத்துமாரி அம்பாள் வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிபத்துத்திங்கள் மஹோற்சவம் இடம்பெறும். எதிர்வரும் 10 ஆம் திகதி தேர்த்திரு விழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும்.(இ


## தேவை

லான்சர் 90 ஜப்பான் மோட்டார் சைக்கிள் தேவை.

தொடர்புகளுக்கு:-077 618 3885

(7155)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை 32 ஆவது பொதுப்பட்டமளிப்பு வைபவம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொதுப்பட்டமளிப்பு வைபவம் எதிர்வரும் ஜனவரி மாதம் ஆம் மற்றும் 11 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

இப்பட்டமளிப்பு வைபவத்தில் நேரடியாகப் பட்டம் பெறுவோருக்கு கீழ்க்குறிப்பிட்ட திகதிகளில் பட்டமளிப்பு அங்கிகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்விக் கிளையில் வழங்கப்படும். பட்டமளிப்பு வைபவத்திற்கான அங்கிகளைப் பெற்றுக்கொள்ளும் போது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடியதான பல்கலைக்கழக அடையாள அட்டை அல்லது தேசிய அடையாள அட்டையினை காண்பித்தல் வேண்டும்.

பட்டமளிப்பு விழாவின் போது புகைப்படம் மற்றும் DVDயினை எடுப்பதற்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்ட புகைப்படப்பிடிப்பாளரிடம் பட்டமளிப்பு அங்கி பெற்றுக்கொள்ளும் தினமன்றே புகைப்படம் மற்றும் DVD பிரதிகளுக்காக பதிவுகளை மேற்கொள்ளுமாறு பட்டதாரி மாணவர்கள் வேண்டப்படுகின்றனர். குறித்த புகைப்படம் மற்றும் DVD பிரதிகளுக்கான கட்டண விபரங்களையும் தமக்காக குறித்தொதுக்கப்பட்ட பட்டமளிப்பு அமர்வு விபரங்களையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்விக் கிளையின் விளம்பரப் பலகையில் பார்வையிடலாம். மேற்குறித்த விபரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத்தளத்திலும் பார்வையிடலாம். முகவரி www.jfn.ac.lk.

| திகதி | நேரம் | பட்டம் |
|---|---|---|
| 04.01.2017 புதன்கிழமை | மு.ப. 09.00-12.00<br>பி.ப. 02.00- 04.00 | விவசாய விஞ்ஞானமாணி, சித்த மருத்துவ சத்திர சிகிச்சைமாணி, மருத்துவமாணி, சத்திரசிகிச்சைமாணி, தாதியியல் விஞ்ஞான மாணி, மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞான மாணி, மருந்த கவியல் மாணி, கலைமாணி (சிறப்பு), சட்டமாணி |
| 05.01.2017 வியாழக்கிழமை | மு.ப. 09.00-12.00<br>பி.ப. 02.00- 04.00 | கலைமாணி (பொது), நுண்கலைமாணி (சங்கீதம், நடனம், சித்திரமும் வடிவமைப்பும்), தொழில் நிர்வாகமாணி, வணிகமாணி (3 வருடங்கள்), விஞ்ஞானமாணி (சிறப்பு, பொது), கணனி விஞ் ஞானத்தில் விஞ்ஞானமாணி, பிரயோக விஞ்ஞானத்தில் விஞ்ஞான மாணி, கணனிவிஞ்ஞானமாணி |
| 06.01.2017 வெள்ளிக்கிழமை | மு.ப. 09.00-12.00<br>பி.ப. 02.00- 04.00 | பட்டப்பின்படிப்பு பட்டதாரிகள் |

குறிப்பு:

1. பட்டமளிப்பு அங்கிகள் வழங்கப்படும் தினத்திலன்று பட்டதாரி மாணவர்கள் நேரடியாக சமுகமளித்து கல்விக் கிளையினால் வழங்கப்படும் கேள்விக் கொத்தினை முறையாகப் பூரணப்படுத்தி சமர்ப்பிக்க வேண்டும்

2. வவுனியா வளாக மாணவர்கள் 06.01.2017 ஆம் திகதியிலிருந்து பட்டமளிப்பு அங்கிகளை வவுனியா வளாகத்தில் பெற்றுக் கொள்ளலாம். விபரங்களை வவுனியா வளாக இணையத்தளத்தில் பார்வையிடலாம். முகவரி:**www.vau.jfn.ac.lk**.

பதிவாளர்

## University of Jaffna, Sri Lanka 32nd General Convocation

Gradaunds those who will be conferred degree in person at the above Convocation are requested to obtain their cloks at the Academic Branch of the University of Jaffna on the following dates, producing either Student Identity Card/ National Identity Card.

University of Jaffna has assigned a photographer officially to take photograph/ Video at the Convocation. Those who wish to obtain copies of photograph/ DVD are kindly requested to register for the same.

Rates for each photograph/ DVD and details of the sessions are available at the Notice Board of the Academic Branch and University website:www.jfn.ac.lk.

| Date | Time | Degrees |
|---|---|---|
| 04.01.2017 (Wednesday) | 9.00 a.m-12.00 p.m.<br>2.00 p.m-04.00 p.m. | B.Sc. in Agriculture, Bachelor of siddha Medicine and Surgery, Bachelor of Medicine and Bachelor of Surgery, Bachelor of Science in Nursing, Bachelor of Science in Medical Laboratory Science, Bachelor of Pharmacy, Bachelor of Arts (Special), Bachelor of Laws |
| 05.01.2017 (Thursday) | 9.00 a.m-12.00 p.m.<br>2.00 p.m-04.00 p.m | Bachelor of Arts (General), Bachelor of Fine Arts (Music/ Dance/ Art & Design), Bachelor of Business Administration, Bachelor of Commerce (3 Years), Bachelor of Science (General & Special) Bachelor of Science in Computer Science, Bachelor of Science in Applied Science, Bachelor of Computer Science) |
| 06.01.2017 (Friday) | 9.00 a.m-12.00 p.m.<br>2.00 p.m-04.00 p.m | Doctor of Philosophy Master of Philosophy, Master of Education, Master of Arts in Tamil, Master of Science in Health Management, Postgraduate Diploma in Population Development St.Postgraduate Diploma in Library and Information Sc. |

Note: 1.Graduands are kindly requested to obtain questionnarie for employability survey and hand over duly furnished at the Academic Branch before obtaining cloaks.

2.Graduands attached to Vavuniya Campus are requested to obtain their cloaks at the Vavuniya Campus from 06.01.2017. Details can be obtained from Vavuniya Campus website www.vau.jfn.ac.lk.

Registrar

# மங்கையர் நலமோங்கி மாநிலம் சிறக்க வழிகாட்டும் மார்கழித் திருவெம்பாவை

துர்முகி வருஷ 2016 ஆம் ஆண்டிற்குரிய உதயத்தின் முன் திருவெம்பாவை பூஜை ஆரம்பம் மார்கழி மாதம் 18 ஆம் திகதி (02.01.2017) இன்று திங்கட்கிழமை மங்கையர் நலமோங்கி மாநிலம் சிறக்க, வழிகாட்ட, ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்கள் இடம்பெற்று திருவாதிரை உதயம் ஆர்த்திரா தரிசனத்துடன் புதன்கிழமை (11.01.2017) நிறைவு பெறுகின்றது. சிவன் மூவருக்கும் மேலான கடவுள். சைவ சித்தார்ந்த விதிமுறைகளின்படி இறைவன் பிறப்பற்றவன். இதையே ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெரும் சோதி அதாவது தொடக்கமும் முடிவும் இல்லாத சோதி வடிவம் என மாணிக்கவாசகர் திருவெம்பாவையின் முதற் பாடலிலேயே மிக அழகாக குறிப்பிடுகின்றார். சிவபெருமான் ஒருவனே முதல்வனாக அழியாப் பொருளாக நிலைபெற்று பின் படைத்தல் தொழிலைச் செய்வதற்கு பிரணவ தத்துவத்தை சார்ந்து நிற்பவன் என்பது சைவ சமயத்தை கடைப்பிடிக்கும் இந்து மத மக்களின் அயராத நம்பிக்கை. இதையே ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை ஏழை பங்காளனைப் பாடேல் ஒரெம்பாவாய் என மாணிக்கவாசகர் திருவெம்பாவைப் பாடல்களில் குறிப்பிடுகின்றார்.

திருவெம்பாவையில் இறைவனின் பெருமை கூறி ஆணவ மலம் நீங்கப் பெற்ற மனித உயிர்கள் இறைவனை அடைவதையே கருத்தாகக் கொண்டு அதன் அடிப்படையிலேயே திருவெம்பாவையில் வரும் 20 பாடல்களையும் மிகவும் கருத்தாளத்துடன் மாணிக்கவாசகர் இயற்றி உள்ளார்.

இறுதியாக உள்ள பாடல் போற்றியருள நின் ஆதியாம் பாதமலர்போற்றி என ஆரம்பித்து போற்றியாம் மார்கழி நீராடேல் ஒரெம்பாவாய் என முடிவுறுகின்றது.

பெருமானே எம்மைக் காப்பாற்றி ஆதியாயும் அந்த மாயுமுள்ள பாதங்கள் காக்க, தோற்றம், காப்பு, அழிவு மூன்றிற்கும் காரணமான பாதங்கள் காக்க, மால், பிரமன் காணாத பாதங்கள் காக்க, நாங்கள் உய்ந்து பிழைக்க ஆட்கொண்டருளும் பாதங்கள் காக்க என்றும் நாம் நீராடி மார்கழி நீருக்கு வணங்குவோம் என்றும் வீதியிலே சேர்ந்து செல்லும் பல மங்கையர்கள் தம் தோழியரைத்துயிலெழுப்பி மார்கழி நீராட அழைத்துச் செல்லும் காட்சிகள் பல படியாகச் சித்தரித்துக் காட்டப்படுகின்றன. பாவை நோன்பு மார்கழி நோன்பு கார்த்தியாயினி விரதம் என்பதுமாம்.

திருவாதவூரடிகளைக் கொண்டு திருவாசகம் பாடுவிக்க எண்ணிய சிவபெருமான் மானிட வடிவம் கொண்டு குருந்தமர நிழலில் அமர்ந்திருந்தார். தென்னவன் பிரமராயன் என்னும் பெயரோடு பாண்டிய மன்னனிடத்தில் முதன் மந்திரியாக இருந்த திருவாதவூரடிகள் திருப்பெருந்துறையில் குதிரை வேண்டுவதற்காக பெரும் தொகை பொன்களுடன் சென்ற பொழுது குருந்தமர நிழலிலே மானிட வடிவம் கொண்டு அமர்ந்திருந்த இறைவனைக் கண்டு தன்னை மறந்து, தன்னுடன் வந்தவர்களை மறந்து ஓடோடிச் சென்று அங்குள்ள அடியார்களுடன் தானும் ஒருவனாகச் சேர்ந்து கொண்டார்.

கொண்டு சென்ற பொன், பொருள் எல்லாவற்றையும் அழித்து விட்டார். உதவிக்கு வந்தவர்கள் ஓடோடிச் சென்று பாண்டிய மன்னனிடம் நிழ்ந்தவற்றை முறையிட்டனர்.

இதற்கிடையில் குருவும் அங்குள்ள அடியார்களும் மறைந்து விட்டனர். வாதவூரர் அவர்களைத் தேடினார், அழுதார், புலம்பினார். மன்னவன் வேறு சேவகரை அனுப்பி வாதவூரரை அழைப்பித்தான். குதிரை வாங்கத் தந்த நாற்பத்தி ஒன்பது பொன் எங்கே? என்று அரசன் கேட்டான். வாதவூரரிடம் எதுவுமே இருக்கவில்லை. மெய்ஞானத்தில் இதைவனையே சிந்தித்துக் கொண்டிருந்தார்.



தண்டனையாக வைகை ஆற்றுச் சுடுமணலில் நிற்க வைத்தான் அரசன். இந்தக் கொடுமையைக் கண்ட இறைவன் காட்டில் உள்ள நரிகளை எல்லாம் பரிகளாக்கி தானே தலைமை தாங்கி குதிரைப் படைகளுடன் வந்து பாண்டிய மன்னனிடம் ஒப்படைத்தார்.

அன்றிரவு தொழுவத்தில் நின்ற பரிகளாக வந்த நரிகள் எல்லாம் நரிகளாக மாறி தொழுவத்தில் நின்ற குதிரைகளைக் கடித்துக் குதறியது. இதனைக் கேள்வியுற்ற பாண்டியன் சீற்றம் கொண்டு வாதவூரடிகளுக்கு பல தண்டனைகள் கொடுத்தான்.

பொறுக்க முடியாத இறைவன் வைகை ஆற்றை பெருகச் செய்தார். செம்மனச் செல்விக்காக வைகை ஆற்றை அடைக்க இறைவன் மானிட வேடம் கொண்டு சென்று பிட்டுக்கு மண்சுமந்து ஆற்றை அடைக்காமல் உறங்கிக்கிடந்தார்.

கோவம் கொண்ட சேவகன் முதுகில் அடித்த அடி மன்னவன் உட்பட எல்லா உயிர்கள் மேலும் பட்டது. அடிவாங்கிய மன்னவன் வாதவூரடிகளை அழைத்து மன்னிப்புக் கேட்டு மீண்டும் முதன் மந்திரியாக அமரும்படி அழைத்தான்.

எந்தப் பதவியும் வேண்டாம் எனக்கூறி ஞானச்செம்மலாக வெளியேறினார். வாதவூரடிகள்.

"திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்" என்பது ஆன்றோர் வாக்கு. இதனால் " திருவாசகம் என்னும் தேன் நமக்கு கிடைத்தது. தனது அனுபவங்களை பாடல்களாக்கி மக்களை இறை வழிபாட்டில் ஈடுபடச் செய்தார். அந்தப் பாடல்கள் மணிவாசகங்கள் ஆகின.

திருவாதவூரடிகள் மாணிக்கவாசகர் ஆனார். திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி, திருவாசகம் போன்ற பாடல்களைப் பாடிய திருவாதவூரடிகள் புராணத்தைப் படித்துப் பயன்சொல்லும் நிகழ்வுகளை அன்றும் இன்றும் எமது சைவ ஆலயங்கள் நிகழ்த்தி வருவதை நாம் கண்கூடாகச் காணலாம்.

இவ்வாறு அதிகாலை எழுந்து பத்துத் தினங்களும் மார்கழி குளிர் நீரில் நீராடி, ஆலயங்களுக்குச் சென்று மிகவும் பக்தி சிரத்தையுடன் திருவெம்பாவைப் பாடல்களைப் பாடி அரும்பெரும் சோதியாகிய சிவனை வணங்கி அவன் அருள்பெற சைவசமயத்தவராகிய நாம் முன்வந்து என்றும் அழியாத சைவ சமயத்தை நிலைபெறச் செய்து மானிடர ாகப் பிறந்த அனைவரும் மண்ணிலே நல்ல வண்ணம் வாழ இறைவன் அருள்பாலிப்பாராக!

**திருமதி. மலர்விழி-கனகசவை**
உதவிக் கல்விப்பணிப்பாளர்
(அழகியல்)
தீவக கல்வி வலயம்,
வேலணை.





2017 ஆம் ஆண்டு வருடப்பிறப்பு பூசைகள் முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் வெகுசிறப்பாக இடம்பெற்றன. ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலய பிரதம குருக்கள் கீர்த்தி ஸ்ரீவாசனால் அபிஷேகங்கள் இடம்பெற்று பூசைகளும் இடம்பெற்றன.

(படங்கள்: முல்லைத்தீவு செய்தியாளர்)



புத்தாண்டு நள்ளிரவு திருவிழா திருப்பலி நாட்டின் பல பாகங்களிலுமுள்ள தேவாயைங்களில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 11.30 மணியளவில் ஒப்புக்கொடுக்கப்பட்டது. அந்த வகையில் மன்னார் நானாட்டான் துாய ஆரோக்கிய அன்னை ஆலயத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 11.30 மணிக்கு புத்தாண்டு திருவிழா திருப்பலி மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை தலைமையில் பங்குத்தந்தை அருள்ராஜ் குரூஸ் இணைந்து திருநாள் திருப்பலியை கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுத்தனர். இதன்போது ஆயிரக்கணக்கானவர்கள் திருநாள் திருப்பலியில் பங்கெடுத்திருந்தனர். இதேவேளை மன்னார் மறை மாவட்டத்தில் உள்ள அனைத்து பங்குகளில் உள்ள தேவாலயங்களிலும் விசேட ஆராதனைகள் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (படங்கள்:- உ.சாளின்)

# புளியங்குளம் பிரதேச வைத்தியசாலைக்கு 6இலட்சம் பெறுமதியுடைய சக்கரநாற்காலி வழங்கல்



(மல்லாவி)

வவுனியா மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள புளியங்குளம் பிரதேச வைத்தியசாலைக்கு நோயாளர்களின் - நலன் கருதி ஆறு இலட்சம் ரூபா பெறுமதியுடடைய விசேட சக்கர நாற்காலி ஒன்று, "தொழில் வாய்ப்புக்களை உருவாக்கும் உழைப்பு ஸ்தாபனத்தினால்," வைத்திய சாலை நிர்வாகத்தினரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை முற்பகல் 10.30. மணியளவில் வவுனியா கனகராயன் குளம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற நிகழ்வில், கனகராயன் குளத்தை சேர்ந்த தற்போது கனடாவில் வசித்துவரும் மதபோதகர் பயஸ் வறிஜியபாலன் மரியாம்பிள்ளை மற்றும் கனகராயன்குளம் பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி அபயகோன் பண்டா ஆகியோர் இணைந்து புளியங்குளம் வைத்தியசாலை நிர்வாகத்திடம் கையளித்துள்ளனர்.

இந்த உதவியானது, புளியங்குளம் வைத்தியசாலைக்கு சிகிச்சை பெற்றுக் கொள்ள வருகை தரும் மாற்றுத் திறனாளிகள் மற்றும் நடக்க முடியாத நிலையில் வருகை தரும் நோயாளர்களுக்கும் பெரும் உதவியாக அமையும்.

இந்த நிகழ்வில்கனகராயன் குளம் பொலிஸ் நிலைய பொலிஸ் உத்தியோகத்தர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் உட்பட பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் ஆர்வலர்கள், பொது மக்கள் எனப்பலரும் கலந்து சிறப்பித்துள்ளார்கள். (இ-15)




# கரைதுறைப்பற்றில் 379 கி.மீ. வீதி இன்னும் புனரமைக்கப்படவில்லை

(மல்லாவி)

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பகுதியில் உள்ள- 498. கிலோ மீற்றர் வீதியில் இடப்பெயர்வின் பின்னரான ஏழு ஆண்டுகளில் - 119. கிலோ மீற்றர் வீதிகள் மட்டுமே புனரமைக்கப்பட்ட நிலையிலும் மிகுதி. 379. கிலோ மீற்றர் வீதிகள் இன்று வரையில் எந்தவித புனரமைப்பும் இன்றிக் காணப்படுவதாக கரைதுறைப் பற்று பிரதேச செயலகத்தின் புள்ளி விபரத் தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கீழ் மொத்தம் ஆறு பிரதேச செயலாளர் பிரிவுகள் உள்ளன. முல்லைத்தீவு நகரை உள்ளடக்கியுள்ள, கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் முக்கிய வீதிகளாக 498, கிலோ மீற்றர் வீதிகள் உள்ளன. இதில் கடந்த ஏழு ஆண்டுகளில், அனைத்து வகையான வீதிகளிலும் மொத்தமாக 119, கிலோ மீற்றர் வீதிகளே புனரமைக்கப்பட்டுள்ளன.

இதன் அடிப்படையில் புனரமைக்கப்பட வேண்டிய மிகுதி 379, கிலோ மீற்றர் வீதிகளும் எவ்வித அபிவிருத்தியும் இன்றிக் காணப்படுவதாக கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தின் புள்ளி விபரத் தகவல்களில் இருந்து தெரியவருகிறது.

முல்லைத்தீவு நகரில் , ஏ மற்றும் பீ தரத்திலான 90, கிலோ மீற்றர் வீதிகள், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கட்டுப்பாட்டினுள் உள்ளது.

இதில் 89, கிலோ மீற்றர் வீதிகள் புனரமைக்கப்பட்டுள்ளது. மிகுதியாக ஒரு கிலோ மீற்றர் வீதி மட்டுமே புனரமைக்கப்பட வேண்டியுள்ளது.

இதேவேளை வீதி அபிவிருத்தித் திணைக்களத்திற்குச் சொந்தமான- சீ, தரத்திலான 99.41, கிலோ மீற்றர் வீதிகளில் 8.83, கிலோ மீற்றர் வீதிகள் மட்டுமே புனரமைக்கப்பட்டு மிகுதி 90.58, கிலோ மீற்றர் வீதிகள் இன்று வரை எந்தவிதமான புனரமைப்பும் இன்றிக் காணப்படுகிறது.

இதேபோன்று கரைதுறைப்பற்று பிரதேச பிரதேச சபைக்குச்சொந்தமான 307.6, கிலோ மீற்றர் வீதியிலும் 21.2 கிலோ மீற்றர் வீதியே புனரமைக்கப்பட்டு எஞ்சிய 286, கிலோ மீற்றர் வீதிகள் மிகவும் படுமோசமான நிலையிலேயே உள்ளது.

இந் நிலையில், முல்லைத்தீவு மாவட்டத்தினை ஏனைய மாவட்டங்களுடன் இணைக்கும் பிரதான வீதிகளை சீர் செய்து வெளி மாவட்ட பயணிகளின் வருகைக்கும் வெளியாரின் பார்வைக்கும் வீதிகள் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளதாக காண்பிக்கும் நிலையில் மாவட்ட மக்களின் பயன்பாட்டிற்கான உள்ளூர் வீதிகள் எவையுமே புனரமைக்கப்படவில்லை என மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (இ-15)

# வவுனியாவில் 18 ஆயிரம் ஏக்கரில் இம்முறை உழுந்து பயிர்ச்செய்கை

(மல்லாவி)

வவுனியா மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்குட்பட்ட பகுதிகளில் 2016-2017, காலபோக பயிர்ச்செய்கையின் போது உப உணவுப் பயிரான உழுந்துச் செய்கையினை 18, ஆயிரம் ஏக்கரில் விவசாயிகள் மேற்கொண்டுள்ளதாக வவுனியா மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் ஆர்.விஜயகுமார் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்டத்தில் தற்போது சீரற்ற காலநிலை நிலவுகிறது. இதனால் நெற்செய்கை அழிவடையும் நிலையில் காணப்படுகின்றது.

ஆயினும், உழுந்துப் பயிர் செய்கைக்கு மழைவீழ்ச்சி குறைவாக இருந்த போதும் தற்போது பனியின் தாக்கம் நன்மையாகவே காணப்படுகின்றது.

கடந்த காலங்களை விட இம்முறை அதிகமாக உழுந்துப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆயினும் இனி வரும் மாதங்களில் காலநிலை மாற்றத்தால் தொடர்ந்து அதிக மழை பெய்யும் பட்சத்தில் உழுந்து செய்கை பாதிக்கப்படக் கூடிய சூழ்நிலை ஏற்படலாம் என அவர் தெரிவித்தார். (இ-15)

# பனை மரத்தீராந்திகள் மீட்பு

(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்குட்பட்ட பளை பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள வெற்றிலைக்கேணியில் ஆட்கள் இல்லாத, பனைமரத் தோப்பினுள் சட்டவிரோதமான முறையில் வெட்டப்பட்ட பனை மர தீராந்திகள் பெரும் தொகையில் கைப்பற்றப்பட்டுள்ளதாக பளைப் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் கடந்த 30. ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை 2.30 மணியளவில், இடம் பெற்றுள்ளது.



பளை பொலிஸ் நிலையத்திற்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, பளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ. எஸ். டபிள்யூ. ரஞ்சன பண்டார தலைமையில் பொலிஸ் சாஜன் நவரட்ன மற்றும் பொலிஸ் கொஸ்தபுல்களான சுனில், (38 605 ), குணதிலக, (33325 ). பிரசாந்த், (83237). ஆகியோராடங்கிய பொலிஸ் அணியினரின் திடீர் முற்றுகையின் போதே அனுமதிப் த்திரம் இன்றி வெட்டப்பட்ட பனைமர தீராந்திகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இச்சம்பவத்தில் சந்தேக நபர்கள் பொலிஸார் வரும் தகவலை அறிந்து தப்பிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவத்தில் கைப்பற்றப்பட்டுள்ள பனைமர தீராந்திகள் பளை பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருப்பதுடன் சம்பவத்துடன் தொடர்புடையவர்களை கைது செய்வதற்கு நடவடிக்கைகள், மேற்கொள்ளவுள்ளதாக பளை பொலிஸ் நிலையத் தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-15)

# புத்தாண்டுப் பலன்கள்



**எடுத்த முடிவை எளிதில் மாற்றிக் கொள்ளும் மிதுன இராசி அன்பர்களே!**

நீங்கள் யாரையும் எளிதில் நம்ப மாட்டீர்கள். நம்பிக்கைக்குரியவர்களா? என்று ஆராய்ந்த பிறகுதான் பொறுப்புகளை மற்றவர்களிடம் ஒப்படைப்பீர்கள். மனதில் பட்டதை மறைக்காமல் எடுத்துரைப்பதால் எதிரிகள் உங்கள் எல்லைக்குள்ளேயே இருப்பர். சந்தர்ப்பங்களைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்வீர்கள். உங்கள் சிந்தனை ஜெயிப்பதற்கு வழி காட்டும். அடிக்கடி குணங்களை மாற்றிக் கொள்ளும் உங்களுக்கு நிரந்தர நட்பும் இல்லை. நிரந்தரப் பகையும் இல்லை. செயற்பாடுகளில் நீங்கள் வீரத்தைக் காட்டிலும் விவேகத்தைக் காட்டுவதால் தான் வெற்றி கிடைக்கிறது. குடும்ப வாழ்வில் உங்களுக்கு குதூகலம் குறைவாக இருந்தாலும் பொது வாழ்வில் புகழ் கொடி நாட்டுபவர்களாகத் திகழ்வீர்கள்.

## சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும்!

உங்கள் இராசிநாதன் புதன் என்பதால், எப்பொழுதும் உங்களுக்கு ஒரு தூணடுதல் தேவை. ஒரே கருத்தை ஆதரித்தும் பேசுவீர்கள். எதிர்த்தும் பேசுவீர்கள். கொள்கைப் பிடிப்பு கொஞ்சம் குறைவாகவே இருக்கும். எல்லா இடங்களிலும் தாங்கள் யார் என்பதை உணர்த்தியே, காரியம் சாதித்துக் கொள்வீர்கள். உங்களிடம் உள்ள மனக் குழப்பத்தை மட்டும் மாற்றிக் கொண்டால் மாபெரும் சாதனையாளராக முடியும்.

இப்படிப்பட்ட குணங்களைப் பெற்ற உங்களுக்குப் பிறக்கும் புத்தாண்டு பெருமைகளை வழங்குமா? சுழற்சியாகும் கிரகங்கள் சுகங்களையும் சந்தோசங்களையும் கொடுக்குமா? என்பதைப் பார்க்கலாம்.

சூரியனின் ஆதிக்கத்தில் இந்தப் புத்தாண்டு பிறக்கிறது. உங்கள் இராசிப்படி சூரியன் சகாய ஸ்தானாதிபதியாவார். எனவே அவரது பாதசார பலமறிந்து பரிகாரம் செய்தால், சாதனைகள் நிகழ்த்தி சரித்திரத்தில் இடம்பெறலாம்.

**புத்தாண்டின் தொடக்கம்**

பிறக்கும் புத்தாண்டு புதிய வாய்ப்புகளை வரவழைத்துக் கொடுக்கப் போகிறது. சிறப்பான எதிர்காலத்திற்கு அஸ்திபாரம் அமைக்கும் வகையில் கிரக நிலைகள் சாதகமாக உள்ளன. செல்வாக்கு அதிகரிக்கும். செயற்பாடுகளில் வெற்றி கிடைக்கும். கவலைகளில் இருந்து விடுபட்டு கனிவுமிக்க வாழ்க்கையைக் காணப்போகிறீர்கள். சதா சர்வ காலமும் உங்கள் முன்னேற்றத்திலேயே அக்கறை கொண்டிருக்கும் உங்களுக்கு இந்தப் புத்தாண்டு புதிய திருப்பங்களைத் தரப்போகிறது.

உங்கள் இராசிக்கு 3 ஆம் இடத்தில் ராகுவும் 4 ஆம் இடத்தில் குருவும் 6 ஆம் இடத்தில் சனியும், 9 ஆம் இடத்தில் கேதுவும் சஞ்சரிக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் உங்கள் இராசிநாதன் புதன் ஆறாமிடத்தில் சனியுடன் கூடிச் சஞ்சரிக்கிறார். சுக்ரனும், செவ்வாயும் 9 ஆம் இடத்தில் கேதுவோடு இணைந்திருக்கிறார்கள். சூரியபலம் உங்கள் இராசிக்கு 7 இல் உள்ளது.

திருவோண நட்சத்திரத்தில் பிறக்கும் இந்தப் புத்தாண்டு செல்வ வளம் பெருக உங்களுக்கு வழி வகுத்துக் கொடுக்கப் போகிறது.

விபரீத இராஜயோகத்தோடும், குரு சந்திர யோகத்தோடும் சுக்ர-மங்கள யோகத்தோடும் பிறக்கும் இந்தப் புத்தாண்டு உங்கள் திறமையைப் பளிச்சிட வைக்கப் போகிறது.

ராகு-கேது, குரு, சனி ஆகிய கிரகங்கள் அனைத்தும் இந்த ஆண்டு மாற்றம் காண்கின்றன. இந்த கிரக மாற்றங்கள் உங்களுக்கு உன்னதமான பலனைக் கொடுக்கப்போகின்றன.




**தன விருத்தி தரும் ராகு-கேது பெயர்ச்சி**

27.07.2017 அன்று ராகு-கேதுக்களின் பெயர்ச்சி நிகழவிருக்கிறது. இதுவரை உங்கள் இராசிக்கு 3 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த ராகு, 2 ஆம் இடத்தில் சஞ்சரிக்கப்போகிறார். 2 இல் ராகு வந்தால் திரண்டசெல்வம் வரும் என்பார்கள். எனவே செல்வ நிலை ஒரு படி உயரும். செய்யும் காரியங்களில் ஆதாயம் அதிகரிக்கும். உதாசீனப்படுத்தியவர்கள் ஓடி வந்து ஒட்டிக்கொள்வர். தெரிந்த தொழிலாக இருந்தாலும், தெரியாதத் தொழிலாக இருந்தாலும் அதில் வெற்றி கிடைக்கும். அலுவலகப் பணியில் இருப்பவர்களுக்கு நன்மை கிடைக்கும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றி மகிழ்வீர்கள். வருமானப் பற்றாக்குறை அகலும். கட்டிய வீட்டைப் பழுது பார்ப்பீர்கள். புதிய வீடு கட்டிக் குடியேறுவதில் இருந்த தாமதங்கள் அகலும். குடும்பத்தில் உள்ளவர்களின் குறைகளை சரி செய்வீர்கள். உணவுக் கட்டுப்பாட்டால் ஆரோக்கியம் சீராகும்.

கேது அஷ்டமத்தில் சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல. என்றாலும் பெரியளவில் பாதிப்புகள் ஏற்படாது. வாகனப் பழுதுச் செலவுகள் அதிகரிக்கும். புதிய வாகனம், புதிய சொத்துகள் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். வழக்குகளில் போராடும் நிலைமாறி புதிய திருப்பம் உண்டாகும் நேரம் இது.

தனவரவு அதிகரிக்கவும் ஆரோக்கியத் தொல்லை அகலவும் தாரா பலம் பெற்ற நாளில் சர்ப்பசாந்திப் பரிகாரங்களைச் செய்து கொள்வது நல்லது.

**பஞ்சம ஸ்தானத்தில் குரு பகவான்**

02.09.2017 இல் குரு, துலாம் இராசியில் சஞ்சரிக்கப் போகிறார். இதுவரை அர்த்தாஷ்டம குருவாக விளங்கி, அல்லல்கள் பலவும் ஏற்படுத்தி இருக்கலாம். இனி அந்த நிலை மாறும். கௌரவம், அந்தஸது உயரும். 5 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை பலத்தால் கல்யாணக் கனவுகள் நனவாகும். பூர்வீகச் சொத்துகளில் முறையான பங்கீடுகள் கிடைக்கும். குருவின் பார்வை உங்கள் இராசியில் மட்டுமின்றி, 9,11 ஆகிய இடங்களிலும் பதிகிறது. எனவே குருப்பெயர்ச்சிக்குப் பிறகு, கூடுதல் நன்மை கிடைக்கப் போகிறது. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்குப் பதவி உயர்வு, ஊதிய உயர்வு மேலதிகாரிகளின் ஆதரவோடு கிடைக்கும். உங்கள் திறமைக்கு வெற்றி கிடைக்கும் நேரமிது. வேலையின்றி இருப்பவர்களுக்கு வேலை கிடைக்கும். ஏற்றுமதி, இறக்குமதி வணிகத்தால் வாழ்க்கைத் தரம் உயரும். சகோதரர்களால் இணக்கம் ஏற்படும். உறவினர்களால் ஏற்பட்ட வீண் பழிகள் அகலும். பிள்ளைகளின் முன்னேற்றத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள். பங்காளி பகை மாறும். பூர்வீகச் சொத்துகளால் இலாபம் கிடைக்கும். பணப் பற்றாக்குறை அகலும்.

**சனிப் பெயர்ச்சிக் காலம்**

இதுவரை உங்கள் இராசிக்கு 6 இல் சஞ்சரித்து வந்த சனி, 16.12.2017 முதல் சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகிறார். அஷ்டமாதிபதியாகவும் 9 இற்கு அதிபதியாகவும் விளங்கும் சனி, ஏழில் சஞ்சரிக்கும் பொழுது ஆரோக்கியத் தொல்லைகளை ஏற்படுத்தலாம். தேவையற்ற செலவுகள் உண்டாகக்கூடும். உறவுகளில் பிரிவு ஏற்படாமல் பார்த்துக் கொள்வது உங்கள் புத்திசாலித்தனம். புதிய ஒப்பந்தங்களை யோசித்து ஏற்றுக் கொள்வது நல்லது. அனுபவம் மிக்கவர்களின் ஆலோசனை இப்பொழுது உங்களுக்கு கைகொடுக்கும். வன்னி மரத்தடி சனீஸ்வரர் வழிபாடு நீங்கள் எண்ணியதை நிறைவேற்றும்.

**அக்கறை செலுத்த வேண்டிய வக்ர காலம்!**

சுக்ரன் வக்ர காலத்தில் (09.04.2017 முதல் 18.04.2017 வரை) வெளிநாட்டு முயற்சி வெற்றி பெறும். வீடு மாற்றச் சிந்தனை மேலோங்கும். பணியிட மாற்றங்கள் ஏற்படலாம். சொத்துப் பிரச்சினை நல்ல முடிவிற்கு வரும்.

புதன் வக்ர காலத்தில் (09.04.2017 முதல் 22.04.2017 வரை) புதிய திருப்பங்கள் ஏற்படும். பொருளாதார நிலை உயரும். அதிகச் செலவுசெய்து இதுவரை முடியாத காரியங்கள் இப்பொழுது முடிவடையும். சுபநிகழ்ச்சிகள் நடைபெறும்.

குருவின் வக்ர காலத்தில் (09.04.2017 முதல் 31.05.2017 வரை) வளர்ச்சி கூடுதலாகவே இருக்கும். தொழில் மாற்றச் சிந்தனைகள் உருவாகும். அரசியல் வாதிகளுக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கும். அலுவலகம் சார்ந்த பணிகள் அதிகரிக்கும். விலை உயர்ந்த ஆபரணங்களையும் பொருட்களையும் வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள்.

சனியின் வக்ர காலத்தில் (09.04.2017 முதல் 06.08.2017 வரை) தந்தை வழி உறவில் விரிசல் உருவாகும். உடன் பிறப்புகளால் தொல்லைகள் உண்டு. திட்டமிடாத சில சம்பவங்கள் நடைபெறும். அலைச்சல் அதிகரிக்கும். ஆதரவுக் கரம் நீட்டுபவர்களின் எண்ணிக்கை குறையலாம்.

**செல்வம் தரும் சிறப்பு வழிபாடு!**

காரைக்குடி அருகிலுள்ள அரியக்குடியில் வீற்றிருந்து அருள் வழங்கும் விஷ்ணுவையும், இலட்சுமியையும், அனுமனையும் வழிபட்டு வாருங்கள். ஏகாதசி விரதமிருந்து பெருமாளை வழிபட்டு வந்தால் வளமான வாழ்க்கை அமையும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

**மிதுன இராசியில் பிறந்த பெண்களுக்கு!**

இந்தப் புத்தாண்டு சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும் ஆண்டாக இருக்கிறது. தன்னம்பிக்கையால் தக்க பலன் கிடைக்கும். குடும்ப ஒற்றுமை கூடுதலாக இருக்கும். பணம் எதிர்பார்த்த அளவிற்கு வந்து சேரும். பகைவர்கள் உறவாக மாறுவர். நகை வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள். தாய்வழி ஆதரவு கிடைக்கும். கணவன்-மனைவிக்குள் பாசமும் நேசமும் அதிகரிக்கும். கடமையைச் செவ்வனே செய்து முடித்துப் பாராட்டுக்களைப் பெறுவீர்கள். பிள்ளைகளின் உத்தியோக நலன்கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி பெறும். உதிரி வருமானம் உண்டு. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு திடீர் ஊர் மாற்றம் ஏற்படும். குருவின் பார்வையால் மனதிற்குப்பிடித்த மண வாழ்க்கை அமையும். பிள்ளைகளால் பெருமை வந்துசேரும். வெளிநாட்டிற்கும் வெளிமாநிலங்களுக்கும் சென்று பணிபுரிய முயற்சிப்பவர்களுக்கு இதுவரை இருந்துவந்த தடை அகலும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. இலட்சுமி கவசம் பாடி இலட்சுமியை வழிபாடு செய்யுங்கள். சாப-விமோசன படங்களை பூஜையறையில் வைத்துப் புனிதமாகப் போற்றி வழிபடுவது நல்லது. ஆண்டு முழுவதும் நற்பலன் கிடைக்கும்.

(தொடரும்...)



# இன்று விமர்சிப்போரையும் நாளை பின்தொடர வைப்போம்

## முதல் உரையில் சசிகலா உறுதி

அ.தி.மு.க. பொதுச் செயலாளராக பொறுப்பேற்றுக் கொண்ட வி.கே.சசிகலா தனது முதல் உரையில், "அண்ணா. எம்.ஜி.ஆர். ஜெயலலிதா தான் அ.தி.மு.கவின் அடையாளம். இவர்களைத் தவிர, வேறு யாரும் இங்கே முன்னிலைப்படுத்தப்படமாட்டார்கள்என்பதுஉறுதி' என அவர் தெரிவித்தார்.

மேலும், "நம்மை இன்று விமர்சிப்பவரும் கூட, நாளை மனமுவந்து நம்மை பின் தொடரும் அளவுக்கு, ஒரு புனிதமான பொது வாழ்வை நாம் மேற்கொள்வோம்" எனவும் உறுதிபடத் தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற அ.தி.மு.க. பொதுக்குழு கூட்டத்தில் சசிகலா அ.தி.மு.க. பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டார். அதனை ஏற்றுக்கொண்ட சசிகலா நேற்று முன்தினம் சனிக்கிழமை முறைப்படி அ.தி.மு.க. பொதுச் செயலாளராக பொறுப்பேற்றுக்கொண்டார். பின்னர் அவர் கட்சித் தொண்டர்கள் மத்தியில் முதன் முறையாக உரையாற்றினார்.

**சசிகலா உரை முழு விபரம்**

"தலைமைக் கழக நிர்வாகிகளே, அமைச்சர் பெருமக்களே, மாவட்டக் கழகச் செயலாளர்களே, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே, கழகத்தில் பல்வேறு நிலைகளில் பணியாற்றி வரும் நிர்வாகிகளே, செயறகுழு, பொதுக்குழு உறுப்பினர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உடன்பிறப்புகளே, உங்கள் அனைவருக்கும் எனது பணிவான வணக்கம்.

என் உயிரில் நான் சுமக்கிற மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவை, எநநாளும் நெஞ்சத்தில் சுமநது வாழும், என் அன்பு சகோதர, சகோதரிகளே!

உலகமே வியக்கிற வெற்றிகளால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை வழி நடத்திய முன்னாள் முதல்வர் ஜெயலலிதா, இப்போது நம்மிடம் இல்லாத நிலையில், இன்னும் 100 ஆண்டுகள் ஆனாலும், அ.தி.மு.க. தான் தமிழகத்தை ஆளும் என, அவர் முன்வைத்துச் சென்றிருக்கிற நம்பிக்கையைக் காப்பதற்காக, இங்கே நாம் கூடி இருக்கிறோம்.

நமக்கெல்லாம் அடையாளமாக, நமக்கெல்லாம் பெருமைகள் பல தேடித் தந்து, இந்த இயக்கத்தின் இதயமாக, நம் ஒவ்வொருவரின் இதயத்தின் இயக்கமாக, எனக்கு எல்லாமுமாய்... எனக்கு மட்டுமல்ல, நம் அனைவருக்கும் எல்லாமுமாய் திகழ்ந்த, அவரை வணங்குகிறேன்.

எம்.ஜி.ஆருக்கு பிறகு, தாய் இருந்து நம்மை வழி நடத்திய தன்னிகரில்லா இந்த மாபெரும் இயக்கத்திற்கு, என்னை கழகப் பொதுச் செயலாளராக ஒருமனதாக தேர்வு செய்து, ஜெயலலிதாவின் வழியில் கழகப் பணியாற்றிட, என்னை பணித்தமைக்காக உங்கள் அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆயரம் ஆயிரம் கூட்டங்களுக்கு நான் அவரோடு சென்றிருக்கிறேன். ஏறத்தாழ 33 ஆண்டுகளுக்கும் மேலாக, எத்தனையோ கூட்டங்களில் அவருடன கலந்து கொண்டேன். ஆனால் இன்று, மேடைக்கு வந்து உங்களிடையே பேசுகிற ஒரு சூழல் எனக்கு உருவாகி இருக்கிறது.

உங்களின் அன்புக் கட்டளையை ஏற்க வேண்டிய கடமையும் கட்டாயமும் எனக்கு ஏற்பட்டுள்ளது. நான் கனவிலும் கூட நினைக்காத ஒன்று. கற்பனை செய்து கூடப் பார்க்க முடியாத ஒன்று நடந்துவிட்டது. தலையில் இடி வந்து விழுந்ததைப் போல, நன்கு உடல் நலம் தேறி வந்தவர், நம்மை விட்டுப் பிரிந்துவிட்டார். தன்னை நம்பி வந்த யாரையும் கைவிடாதவர், இன்று தனது மரணத்தின் மூலம் நம் அனைவரையும் கைவிட்டு விட்டார்.

அவருக்கு இந்த இயக்கம் தான் வாழ்க்கை. எனக்கோ அவர்தான் வாழ்க்கை. ஆனால், இறைவன் தன் அன்பு மகளை தன்னிடம் அழைத்துக் கொண்டு விட்டார்.

75 நாட்கள் எவ்வளவோ போராட்டங்கள். அவரை மீட்டுவிட வேண்டும் என்ற மருத்துவர்கள் போராட்டத்தோடு, கோடானகோடி தொணடர்களாகிய, நமது ஆன்மீக வழிபாடுகளும் ஒன்று சேர, அவை அவரைக் காப்பாற்றி விடும் என்று நான் உறுதியாக நம்பினேன்.

அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் இருந்து தனி அறைக்கு வருகிற அளவுக்கு அவரின் உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டது.

எய்ம்ஸ் மருத்துவர் களை வரவழைத்தும், தலை சிறந்த சிகிச்சைகள் மேற்கொண்டோம். லண்டன் மருத்துவர்களைத் தொடர்ந்து, சிங்கப்பூர் மருத்துவர்களின் பிசியோதெரபி சிகிச்சை தொடங்கப்பட்டது.

இன்னும் சில நாட்களில் அவரை பூரண நலம் பெற்ற முழுமதியாக போயஸ் தோட்டத்திற்கு அழைத்து வந்து விடுவேன் என்ற நம்பிக்கையோடு காத்திருக்கின்ற வேளையில், அவரின் இதயத் துடிப்பை நிறுத்தி, 10 கோடி தமிழ் மக்களின் பாசத் தாயை நம்மிடம் இருந்து இறைவன் பறித்துக் கொண்டான்.

இன்று, நாட்டு அரசியலையே, தென்னாட்டுப் பக்கம் திருப்பிக் காட்டிய ஒரு தேவதை இல்லாத அரசியல் மாடம், களை இழந்து நிற்கிறது. எனக்கோ, அனைத்தையும் இழந்துவிட்டு நிற்கிற நிர்க்கதி நிலை.

சில நிமிடங்கள் மட்டுமே அவரை சந்தித்தவர்கள், சில முறை மட்டுமே அவரைப் பார்த்தவர்கள், சில விநாடிகள் மட்டுமே அவரிடம் பேசியவர்கள் அவர்களே இன்று அவரின் பிரிவில் துடிக்கிறார்கள் என்றால், 33 வருடங்களை அவருடன் மட்டுமே என் வாழ்நாட்களை கரைத்து விட்ட எனக்கு எப்படி இருக்கும் என்பதை, வார்த்தைகளால் விபரிக்க முடியாது.

அவரின் அரசியல் ஆரம்ப காலம் முதல், அவரோடு தொடர்ந்து பயணித்தேன். அப்போது யாரும் நினைத்துக் கூட பார்த்திருக்க மாட்டார்கள் அம்மா என்கிற அந்த வார்த்தை இந்த அளவுக்கு மக்கள் இதயத்தை ஊடுருவும் என்று!

ஆனால், இத்தனை ஆணடுகள் அவரோடு இருந்த என் ஆசையெல்லாம், அவர் நன்றாக இருக்க வேண்டும் என்பது மட்டும் தான்.

"அக்கா, கோட்டைக்கு கிளம்பிட்டீங்களா அக்கா, மதிய சாப்பாட்டிற்கு என்ன வேண்டும்" என அனுதினமும் அவரைப் பற்றிய சிந்திப்புகளிலேயே என் வாழ்நாட்களை செலவழித்தவள் நான்.

எனக்கு இப்போது 62 வயது ஆகிறது. கடந்த 33 ஆண்டுகளாக, என்னுடைய 29 ஆவது வயது முதல் அவருடன் இருந்துள்ளேன் அவரை விட்டு நான் பிரிந்திருந்த நாட்கள் மிக மிகக் குறைவு. அதை நாட்கள் என்று சொல்வதை விட, அவருடைய கம்பீரக் குரலை நான் கேட்காத நேரம் குறைவு என்று தான் சொல்ல வேண்டும்.

அவரும், அ.தி.மு.க. வுமே உலகம் என்று வாழ்ந்த என்னை, உங்களின் அன்புக் கட்டளை, எஞ்சி இருக்கும் காலத்தை, அவர் கட்டிக் காத்த கழகத்திற்காகவும் கோடான கோடி கழகக் கண்மணிகளுக்காகவும் நான் வாழ வேண்டும் என்கிற உறுதியை எனக்குள் எடுக்க வைத்திருக்கிறது.

அவருக்கென்று ஆசைகள் இருந்தது. அவர் வாழ்ந்த வாழ்க்கைக்கு ஒரு அர்த்தம் இருந்தது. அது, இந்த இயக்கம் வாழ வேண்டும், தமிழ் மக்களை இந்த இயக்கம் வாழ வைக்க வேண்டும் என்பது தான். இத்தனை ஆண்டுகாலமாக அது நிறைவேறியது. இனிமேலும் அது நிறைவேறிக் கொண்டு தான இருக்கும்.

தனக்குப் பின்னால் இன்னும் எத்தனை நூற்றாண்டுகள் ஆனாலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மக்களுக்காகவே இயங்கும் என்று சட்டமன்றத்திலே நம் அரசியல் எதிரிகளுக்கு முன்னால், அவர் சிங்கம் போல கர்ஜித்தார். அது, அவர்களுக்கு மட்டும் பதில் அல்ல. அவர் இந்த உலகுக்கே சொன்ன செய்தி அது.

எத்தனையோ போராட்டங்கள், அரசியல் நெருக்கடிகள், எதிரிகளின் சூழ்ச்சிகள், ஏற்றத்தாழ்வுகள் என எவ்வளவோ வந்த போதிலும், அதில் எல்லாம் அவர் வென்று வருவார். நான் உறுதுணையாக இருப்பேன். ஆனால் இன்று, தாயை இழந்த பிள்ளைகளாய் நாம் தவித்துக் கொண்டிருக்கிறோம்.

உங்களின் பல செயற்பாடுகளை, பண்புகளை அவர் என்னிடம் பகிர்ந்து கொள்வார். எப்போதும், செயற்பாட்டையும் விசுவாசத்தையும் தான் அவர் நம்மிடம் எதிர்பார்த்திருந்தார். சில நேரங்களில் அவற்றைக் கூடுதலாகவே எதிர்பார்த்தார். அதற்குரிய வாய்ப்புகளையும் அவர் ஏற்படுத்தித் தான் தந்தார். அத்தகையவரின் எதிர்பார்ப்பு தான், நம்மை இயக்கும் சக்தியாகத் திகழ்ந்தது. அது, தொடர்ந்து அமைந்திட வேண்டும். அணையா நெருப்பாக அதை நாம் ஒவ்வொருவரும் இதயத்தில் நிலை நிறுத்த வேண்டும்.

அடிப்படையில் அவர் துணிச்சலின் பிறப்பிடம். அன்றைக்கு ஆண் ஆதிக்கம் நிறைந்த அரசியலில், இந்தியா முழுவதும் தேடினாலும் ஒரு இந்திராவைத் தவிர வேறு ஒருவர் இல்லை என்ற நிலையில், ஜெயலலிதாவின் அரசியல் பிரவேசம், பெண் இனத்திற்கே ஒரு வழகாட்டுதலையும், வலிமையையும், நம்பிக்கையையும் கொடுத்தது.

அரசியல் மாடங்களில் பெண்கள் பங்கேற்று பெரும் புகழ் சேர்க்க முடியும் என்கிற புரட்சிகர வரலாறு அவரால் தான் உருவானது. இந்த இயக்கத்தின் மிகப் பெரும் ஊக்க சக்தியே தாய்மார்கள்தான் என்பதைக் கண்டு உலகமே வியக்கிறது.

இன்றும் அவருக்குப் பிறகு ஒரு பெண்ணாக, நான் கழகத்தின் பொதுச் செயலாளர் கடமையை ஆற்றுவதற்கு முன் வந்திருக்கிறேன் என்று சொன்னால், அதற்கு மிக முக்கியமான காரணம், கோடான கோடி சகோதர, சகோதரிகள் எனக்கு பக்க துணையாக நிற்பார்கள் என்கிற நம்பிக்கையில் தான்.

பெரியாரின் தன்மானம், அண்ணாவின் இனமானம், எம்.ஜி.ஆரின் பொன்மனம், இவை யாவும் ஒருங்கே பெற்ற ஜெயலலிதாவின் போர்க குணத்திற்கு ஈடு இணை ஆகிட ஒருவராலும் முடியாது. இன்னும் ஆயிரம் ஆண்டுகள் கடந்தாலும் அவரது இடத்தை யாராலும் நிரப்ப முடியாது, நிரப்பவே முடியாது.

ஆனாலும் அவர், நமக்கு கற்றுத் தந்திருக்கிற அரசியல் பாடங்களை, அவரது பாதத் தடங்களை, வேதமெனப் பின்பற்றுவோம்.

அவர் நிர்மாணித்த இந்த இயக்கம், மக்களின் இயக்கம். இந்த அரசு மக்களின் அரசு. அவர் காட்டிய வழியில் தான் நம் பாதை. அவர் காட்டிய பாதையில் தான் நமது பயணம்.

அண்ணா, எம்.ஜி.ஆர், ஜெயலலிதா... இவர்கள் தான் இந்த மாபெரும் இயக்கத்திற்கு அடையாளம். இவர்களைத் தவிர, வேறு யாரும் இங்கே முன்னிலைப்படுத்தப்பட மாட்டார்கள் என்பது உறுதி.

எம்.ஜி.ஆரும் சரி, ஜெயலலிதாவும் சரி, சாதி, சமய வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட மாபெரும் தலைவர்கள். அந்த மகத்தான வழியில் தான் இந்த இயக்கம் இன்றுவரை பயணித்திருக்கிறது. இனியும், அதே வழியில் தான் வீறு நடை போடும்.

ஜெயலலிதா எந்த வேகத்தில் இந்த இயக்கத்தை வழி நடத்தினாரோ, அதே வேகத்தோடு, எந்த இராணுவ கட்டுப்பாட்டோடு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை அவர் வைத்திருந்தார்களோ, அதில் கடுகளவும் குறையாத, அதே கட்டுப்பாட்டோடு... உழைக்கும் தொண்டர்களுக்கு உயர்வு அளித்து அழகு பார்க்க, எந்த அளவுகோலை அவர் கொண்டிருந்தாரோ, அந்த அளவுகோலோடு அவர காட்டிய வழியில் இருந்து இம்மி கூட விலகாமல் இந்த இயக்கத்தை கொண்டு செலுத்துவோம்.

கனி வெளியே தெரியும்! காய் வெளியே தெரியும்! பூ வெளியே தெரியும்! இலை வெளியே தெரியும்! கிளை வெளியே தெரியும்! ஆனால, இதையெல்லாம் தாங்கி பிடித்துக் கொண்டிருக்கும் வேர் வெளியே தெரியாது. அந்த வேர் தான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்கிற இந்த இமயப் பேரியக்கத்தை கட்டிக் காத்துக் கொண்டிருக்கும் அப்பழுக்கில்லா கோடான கோடித் தொண்டர்கள். உழைப்பு தான் இந்த இயக்கத்தின் உயிர் நாடி என்பதை உணர்ந்து, கழகத்தின் தொண்டர்களை நாம் கண் இமையாகக் காப்போம். தமிழக மக்களால் ஆராதிக்கப்படுகிற கழக அரசின் மீதான மக்களின் அன்பல் குன்றிமணி அளவுக்கும் குறை வராது பாதுகாப்போம்.

நம் கருணைத் தாயின் மறைவில், அந்த சரித்திரத்தின் நிறைவில், கழகத்தை வீழ்த்திடலாம் என்று கணக்குப் போட்ட சூது மதியாளர்களின் சூழ்ச்சிகளை முறியடித்து, தாய்வழி வந்த தங்கங்கள் எல்லாம், ஓர் வழி நின்று, நேர் வழி சென்றால், நாளை நமதே, என்ற மக்கள் திலகத்தின் வாய் மொழியையே, நாம் எந்நாளும் தாய்மொழியாக ஏற்போம்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நிறுவனத் தலைவர் எம்.ஜி.ஆர். , பிறந்த நாள் நூற்றாண்டு விழா, ஜனவரி மாதம் 17ஆம் திகதியன்று தொடங்குகிறது. இவ்விழாவினை, நாடு போற்றும் வகையில் கொண்டாட வேண்டும் என்பது ஜெயலலிதாவின் கனவாக இருந்தது. அவர் கனவை நிறைவேற்றும் வண்ணம், எம்.ஜி.ஆரின் பிறந்த நாள் நூற்றாண்டு விழா, கழகத்தின் சார்பில் ஆண்டு முழுவதும் சிறப்பாக கொண்டாடப்படும்.

எம்.ஜி.ஆர். பிறந்த நாள் நூற்றாண்டின் நினைவாக, சிறப்பு அஞ்சல் தலையும், அவரது திருவுருவம் பொறிக்கப்பட்ட சிறப்பு நாணயமும் வெளியிட, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மத்திய அரசை வலியுறுத்துவோம என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஒன்றை மட்டும் இந்த நேரத்தில் நிறைவாகவும், உறுதியாகவும் சொல்ல விருமபுகிறேன்.

நம்மை இன்று விமர்சிப்பவரும் கூட, நாளை மனமுவந்து நம்மை பின் தொடரும் அளவுக்கு, ஒரு புனிதமான பொது வாழ்வை நாம் மேற்கொள்வோம்.

இன்னும் எவ்வளவு காலம் நான வாழ்கிறேனோ, அதன முழுமையையும் கழகத்தின நலத்திற்கும், தமிழகத்தின வளர்ச்சிக்கும் உரித்தாக்கிக் கொண்டு உழைப்பேன்.

"ஒன்றரைக் கோடி பிள்ளைகளை உன் வசத்தில் ஒப்படைத்திருக்கிறேன்" என்று ஜெயலலிதாவின் ஆன்மா என் அருகில் இருந்து ஆணையிடுவதாகவே என்றும் நான் உணர்கிறேன். அவரின் இலட்சியக் கனவுகளை உயிராகக் காப்பதற்கு, நாம் அனைவரும் இந்நாளில் உறுதி ஏற்போம்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளராக, என்னை ஒருமனதாக தேர்வு செய்திருக்கும் உங்களின் அன்புக்கும், நம்பிக்கைக்கும் ஏற்ப, என் வாழ்வின் எஞ்சிய காலத்தை அர்பபணித்து உழைப்பேன். நமது பண்பாட்டையும், கலாசாரத்தையும், ஜெயல லிதா வழியில் பின்பற்றுவோம்.

அவர் வகுத்துத் தந்திருககும் நெறிமுறையில் நெல் முனை அளவும் மாறாமல், இந்த இயக்கத்தின் பொதுச் செயலாளராகப் பணியாற்றுவேன் என்பதை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக் கொண்டு, என்னுடைய பணிகள் எல்லாம் வெற்றி பெற, உங்களின் ஒத்துழைப்பும், இறைவனின் ஆசீர்வாதத்தையும் வேண்டுகிறேன்.

பெரியாரின் தன்மானம், அணணாவின் இனமானம், எம்.ஜி.ஆரின் கனிவு, ஜெயலலிதா நமக்கு போதித்த துணிவு இவற்றையே உயிராக, உணர்வாகப் போற்று வோம்.

"மறைந்த முன்னாள் முதலவர் ஜெயலலிதா புகழை இப்புவியே சொல்லும். எப்படை வரினும் இப்படையே வெல்லும்!" என்று உறுதி கூறி, "மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்று முழக்க மிட்டவரின் வழியில் நம் பயணத்தை மேற்கொள்வோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)




# நள்ளிரவு வே

## புத்தாண்டு அன்று

### துருக்கி தலைநகர் இஸ்தான்புல் ந
### புத்தாண்டு விழாக்கொண்டாட்டத்தி
### துப்பாக்கிச்சூட்டுக்கு 35 பேர் பலியா

துருக்கி தலைநகரான இஸ்தான்புல் நகரையொட்டி ஐரோப்பிய கண்டத்தையும் ஆசிய கண்டத்தையும் பிரிக்கும் பொஸ்பரஸ் ஜலசந்தி பகுதியில் ஆர்ட்டாக்கோய் மாவட்டத்தில் உள்ள பிரபல இரவு விடுதி உள்நாட்டினரும் வெளி நாட்டினரும் அடிக்கடி ஒன்று கூடி விருந்து நிகழ்ச்சிகளை நடத்தும் பிரசித்தி பெற்ற இடமாகும்.

நேற்றுப் பிறந்த புத்தாண்டை வரவேற்க இந்த இரவு விடுதியில் நேற்று முன்தினம் சுமார் 500 பேர் திரண்டு மகிழ்ச்சியுடன் காத்திருந்தனர் பாட்டம் கொ அவர்கள் தி 1.30 மணிய உள்ளே புகு கண்மூடித்த

இதில் 35

## பணம் எடுக்க வரிசையில் நின்று 112 பேர் உயிரிழந்ததற்கு மோடியே பொறுப்பு - மம்தா



வங்கியில் பணம் எடுக்க நின்று 112 பேர் இறந்ததற்கு பிரதமர் மோடி தான் பொறுப்பு என்று மேற்கு வங்காள முதலமைச்சர் மம்தா குற்றம் சாட்டினார்.

ரூபாய்நோட்டு பிரச்சினை தொடர்பாக மேற்கு வங்காள முதலமைச்சர் மம்தா பானர்ஜி பிரதமர் மோடிக்கு எதிராக தொடர்ந்து போர்க்கொடி உயர்த்தி வருகிறார்.

சமீபத்தில் பேட்டி அளித்த அவர, இந்த பிரச்சினைக்கு பொறுப்பு ஏற்று பிரதமர் தனது பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் என்று கூறி இருந்தார். பிரதமர், பதவி விலக கோரி போராட்டம் நடத்தப்போவதாகவும் அறிவித்தார். இந்த நிலையில டுவிட்டர் வலைத்தளத்தில் அவர மோடியை மீண்டும் கடுமையாக விமர்சித்துள்ளார். அவர் கூறியிருப்பதாவது,

மோடி அண்ணா, நீங்கள் மிகவும் கடுமையாக நடந்து வருகிறீர்கள். வங்கியில் பணம் எடுக்க நின்று 112 பேர் இதுவரை பலியாகி இருக்கிறார்கள். எங்கள் மாநிலத்தில் இப்போதும் ஒருவர் பலியாகி இருக்கிறார்.

இத்தனை பேர் சாவுக்கும் நீங்கள்தான் பொறுப்பு. உங்கள் ஆட்சியில் பொதுமக்களை பிச்சைக்காரர்களாக மாற்றி இருக்கிறீர்கள்.

பணத்தை எடுப்பதில் கொண்டு வந்த கட்டுப்பாடுகள் இவ்வளவு காலத்துக்கு பிறகும் நீடிப்பது ஏன்? 50 நாட்கள் கடந்த பிறகும் மக்கள் தங்கள் பணத்தை எடுப்பதற்கு ஏன் இத்தனை நிர்ப்பந்தங்களை ஏற்படுத்துகிறீர்கள்?

மக்களின் பொருளாதார உரிமையை பறிப்பதற்கு உங்களுக்கு எந்த அதிகாரமும் கிடையாது எனக் கூறியுள்ளார். (இ-7)

## இரு சிறிய ரக விமானங்கள் ந



## பாகிஸ்தானின் 7 நிறுவனங்கள்மீது பொருளாதார தடை!

### அமெரிக்கா அதிரடி

பாகிஸ்தானின் ஏவுகணை திட்டத்தில் தொடர்புள்ள 7 நிறுவனங்கள் மீது அமெரிக்கா அதிரடியாக பொருளாதார தடை விதித்துள்ளது.

பாகிஸ்தான் ஏவுகணை திட்டங்களை செயற்படுத்தி வருகிறது. இருப்பினும் அந்த நாடு, அணு ஆயுத திட்டங்களிலும் சரி, ஏவுகணை திட்டங்களிலும் சரி, தவறாக எதுவும் செய்யவில்லை என கூறி வருகிறது.

இந்த நிலையில் சற்றும் எதிர்பாராத வகையில் அந்த நாட்டின் ஏவுகணை திட்டங்களில் தொடர்பு கொண்டிருப்பதாக கூறி, 7 நிறுவனங்கள் மீது அமெரிக்காவில் ஆட்சி அதிகாரத்தில் உள்ள ஒபாமா அரசு அதிரடியாக பொருளாதார தடை விதித்துள்ளது.

அந்த நிறுவனங்கள் லாகூர் அஹ்றாத் இன்டர்நஷனல், வாஹ் கண்டோன்மென்ட் ஏர் வெப்பன்ஸ் காம்பிளக்ஸ், இஸ்லாமாபாத் என்ஜினீயரிங் சொல்யூசன்ஸ், கராச்சி மெரிடைம் டெக்னாலஜி காம்ப்ளக்ஸ், இஸ்லாமாபாத் நஷனல் என்ஜினீயரிங் அன்ட் சயின்டிபிக் கமிஷன், ரர்வல்பிண்டி நியூ ஆட்டோ என்ஜினீயரிங், சட்டார் யுனிவர்சல் டூலிங் சர்வீசஸ் ஆகியவை ஆகும்.

இந்த நிறுவனங்கள் மீது பொருளாதார தடை விதித்து, அமெரிக்க வர்த்தக துறை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில், "அமெரிக்க தேசிய பாதுகாப்பு அல்லது வெளிநாட்டு கொள்கை நலன்களுக்கு மாறாக செயற்படுவதாக கருதி, பாகிஸ்தானின் 7 நிறுவனங்கள் ஏற்றுமதி நிர்வாக கட்டுப்பாட்டு ஒழுங்குமுறையின்கீழ் கொண்டு வரப்படுகின்றன" என கூறப்பட்டுள்ளது.

மேலும், "குறிப்பிட்ட உண்மைகள் அடிப்படையில் இந்த அரசு நிறுவனங்கள், அரசியல் அதிகாரத்தின்கீழ் நாட்டுக்காக மறைமுகமாக செயற்படும் பேரஸ்டால் நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், அமெரிக்காவின் பாதுகாப்புக்கு, வெளியுறவு கொள்கைக்கு மாறான செயற்பாடுகளில் தொடர்பு கொண்டுள்ளன என்று நம்புவதற்கு நியாயமான காரணம் உள்ளது" என கூறப்பட்டுள்ளது.

இந்த 7 நிறுவனங்களும் 'இயர்' என்றழைக்கப்படுகிற (அமெரிக்க) நிர்வாக கட்டுப்பாட்டு ஒழுங்குமுறையின்கீழ் அனைத்து பொருட்களுக்கும் உரிமம் பெற வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

அதே நேரத்தில் இந்த நிறுவனங்கள் என்ன மீறல்களில் ஈடுபட்டன, அவை சர்ச்சைக்கிடமான எந்த பொருளை ஏற்றுமதி அல்லது மறு ஏற்றுமதி அல்லது இறக்குமதி செய்தன என்பது குறித்து அமெரிக்க வர்த்தக துறையின் அறிவிக்கையில் குறிப்பிடப்படவில்லை.

அமெரிக்காவின் இந்த அதிரடி நடவடிக்கை, பாகிஸ்தானில் பெரும பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (இ-7)

## அனைவரின் வாழ் மகிழ்ச்சி பொங்க

### பிரதமர் மோடி புத்தாண்டு வாழ்த்து



நாட்டு மக்கள் அனைவரின் வாழ்க்கையிலும் மகிழ்ச்சியும், வளமும் பொங்கட்டும் என புத்தாண்டையொட்டி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து செய்தி வெளி யிட்டுள்ளார்.

இதுதொடர்பாக, தனது டுவிட்டர் பக்கத்தின் மூலம் நாட்டு மக்களுக்கு அவர் வெளியிட் டுள்ள வாழ் த்து செய்தியில்,

'2017ஆம் ஆண்டின் தொடக்கத்தையொட்டி மனமார்ந்த வாழ்த்துகள், நாட்டு மக்கள் அனை வரின் வாழ்க்கையிலும் ஆரோக் கியமும், மகிழ்ச்சியும், வளமும் பொங்கட்டும்' என குறிப்பிட்டுள்ளார். (இ-7)

## எம்.பி.சுட்டுக்கொலை

பங்களாதேசத்தை சேர்ந்த எம்.பி. மஞ்சுருல் இஸ்லாம், மோட்டார் சைக்கிளில் வந்த மர்ம நபர்களால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

பங்களாதேசத்தை சேர்ந்த எம்.பி. மஞ்சுருல் இஸ்லாம். இவர் அவாமி லீக் கட்சியை சேர்ந்தவர். நேற்று முன்தினம் இவர் காய பந்தா மாவட்டத்தில் உள்ள தனது வீட்டில் இருந்தார்.

அப்போது அங்கு மர்ம நபர்கள் 3 பேர் ஒரு மோட்டார் சைக்கிளில் வந்தனர். அவர்கள் மஞ்சுருல் இஸ்லாமை சந்திக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். எனவே அவர்கள் வீட்டுக்குள் அனுமதிக்கப்பட்டனர்.

அதையடுத்து அவர்கள் மஞ்சுருல் இஸ்லாம் எம்.பி.யை 5 தடவைகள் துப்பாக்கியால் சுட்டனர். குண்டுகள் பாய்ந்த அவர் இரத்த வெள்ளத்தில் மயங்கி விழுந்தார்.

உடனே அவரை வைத்தியசாலையில் சேர்த்தனர். அங்கு சிகிச்சை பலனின்றி அவர் பரிதாபமாக உயிரிழந்தார். இதற்கிடையே துப்பாக்கியால் சுட்ட மர்ம நபர்கள் தாங்கள் வந்த மோட்டார் சைக்கிளிலேயே தப்பி சென்றனர்.

தகவல் அறிந்ததும் அவரது ஆதரவாளர்கள் அங்கு பெருமளவில் திரண்டனர். எம்.பி கொல்லப்பட்டதற்கு கண்டனம் தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சிறுவனை சுட்டுக் கொன்றதாக கடந்த 2015ஆம் ஆண்டு மஞ்சுருல் இஸ்லாம் எம்.பி. கைது செய்யப்பட்டார். அதன் பின்னர் பிணையல் விடுதலை செய்யப்பட்டார். அதற்கு பழிவாங்கும் நடவடிக்கையாக அவர் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கலாம் என கருதப்படுகிறது.(இ-7)

## சசிகலாவுக்கு கருணாநிதி சூ

### சுப்பிரமணியன்

கருணாநிதியின் சூழ்ச்சியை முறியடிக்கவே அ.தி.மு.க. பொதுச் செயலாளராக சசிகலா பொறுப்பேற்றார் என்று செல்லூர் ராஜு தெரிவித்த கருத்துக்கு மா.சுப்பிரமணியன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

தி.மு.க. தலைவர் கருணாநிதியின் சூழ்ச்சியை முறியடிக்கவே அ.தி.மு.க. பொதுச் செயலாளராக சசிகலா பொறுப்பேற்றார் என்று அமைச்சர் செல்லூர் ராஜு தெரிவித்த கருத்துக்கு தி.மு.க. எம்.எல். ஏ. மா.சுப்பிரமணியன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் செல்லூர் ராஜுக்கு இப்படி ஒரு அதீத கற்பனை எப்படி வந்தது என்று தெ வில்லை.

சசிகலாவு பொதுமக்கள் ம யிலும் அடிம தொண டர்கள் ம யிலும் கடும் எதி இருக்கிறது. அவ வருகையை சகி முடியாமல் இ கிறார்கள்.

அதை சமா கவேகலைஞ்யெ இழுத்து இருப் என்று கருதுகிறே

அமைச்சர் வியில் இருப்பவர்

# வளை நாசவேலை - 35 பேர் பலி!

## ன்றது பெரும் சோகம்

புல் நகரில் இரவு விடுதியில் நிகழ்ந்த ட்டத்தின்போது மர்மநபர் நடத்திய பலியாகினர்.

காத்திருந்தனர். நள்ளிரவு 12 மணிக்கு மேல் ஆட்டம் பாட்டம் கொண்டாட்டத்துடன் உச்சகட்ட உற்சாகத்தில் அவர்கள் திளைத்திருந்தபோது நள்ளி ரவு சுமார் 1.30 மணியளவில் தானியங்கி ரக துப்பாக்கியுடன் உள்ளே புகுந்த மர்மநபர் எதிர் பட்டவர்களை நோக்கி கண்மூடித்தனமாக சுட்டான்.

இதில் 35 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்த னர் 40-க்கும் அதிகமானவர்கள் குண்டுக் காயங்களுடன்அருகாமையில் உள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் சிலரது நிலமை கவலைக்கிடமாக உள்ளதால் பலி எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது. (இ-7)



## கள் நடுவானில் மோதி விபத்து



அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்தில், McKinney நகரில் நேறறு இரு சிறிய ரக விமானங்கள் நடுவானில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மக்கள் நடமாட்டம் உள்ள ஒரு வாகன தரிப்பிடத்தில் குறித்த இரு விமானங்களும் வீழ்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த விபத்தில் உயிரிழப்புக்கள் தொடர்பில் இதுவரை தகவல்கள் வெளியாகவில்லை. இது தொடர்பான வீடியோ காட்சிகள் இணையங்களில் வெளியாகியுள்ளன. (இ-7)

## ழ்விலும் கட்டும்



## வுக்கு எதிராக தி சூழ்ச்சியா?

## யின் கண்டனம்

ந்தது என்று தெரிய இல்லை.

சசிகலாவுக்கு பொதுமக்கள் மத்தி லும் அடிமட்ட தொண டர்கள் மத்தி லும் கடும் எதிர்ப்பு ருக்கிறது. அவரது ருகையை சகிக்க டியாமல் இருக் றார்கள்.

அதை சமாளிக் வேகலைஞர்யெரை ழுத்து இருப்பார் ன்று கருதுகிறேன்.

அமைச்சர் பத வியில் இருப்பவர்கள் பதவியின் தகுதி அறிந்து பேச வேண்டும்.

பொத்தாம் பொதுவாக எதையும் பேசக் கூடாது.

கலைஞர் எப்போது சொன்னார்? யாரிடம்சொன்னார்? எங்கே சொன்னார்? என்று ஆதாரத்தோடு பேச வேண் டும். முது பெரும் தலைவர் மீது முதிர்ச்சி இல்லாமல் புழுதிவாரி வீசுவது கண்டனத்துக்குரியது.

இப்படி கோமாளித்தனமாக பேசுவதை தவிர்த்து, தான் வகிக்கும் பதவிக்கு ஏற்றாற் போல்செயநபடுவதுதான் அமைச்சர் பதவிக்கு அழகு என அவர் தெரிவித்தார். (இ-7)

## சிரியாவில் இடைக்கால போர் நிறுத்தம்

# ரஷ்யா - துருக்கி ஒன்றிணைவுக்கு ஐ.நா. பாதுகாப்புச் சபை ஆதரவு

உள்நாட்டுப் போரால் பாதிக்கப்பட்டுள்ள சிரியாவில் இடைக்கால போர் நிறுத்தம் ஏற்பட்டு அமைதி நிலவ ரஷ்யா மற்றும் துருக்கி ஒன்றிணைந்து செய்துள்ள சமாதான முயற்சிக்கு ஐ.நா. பாதுகாப்பு சபை ஒப்புதல் அளித்துள்ளது.


சிரியாவில் ஜனாதிபதி பஷார் அல் ஆசாத் ஆதரவு படைகளுக்கும், கிளர்ச்சியாளர்களின் படைகளுக்கும் இடையே கடந்த 2011ஆம் ஆண்டு, மார்ச் 15 ஆம் திகதி உள்நாட்டுப்போர் தொடங்கியது. தொடர்ந்து 6-வது ஆண்டாக நடைபெற்றுவரும் இந்த உள்நாட்டுப் போரில் 3 இலட்சத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர். பல இலட்சம் பேர் வீடுகளை விட்டு, உயிர் பிழைக்க இடம் பெயர்ந்தனர்.

இந்த நிலையில் ரஷ்யா, துருக்கி ஆதரவுடன் இரு தரப்புக்கும் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டது. "இது உள்நாட்டுப் போரை முடிவுக்கு கொண்டு வந்து, அரசியல் தீர்வு காண்பதற்கு உண்மையான வாய்ப்பாக அமையும்" என சிரியா அரசு கூறியுள்ளது.

இந்த போர் நிறுத்தம் டிசம்பர் 29 ஆம் திகதி-இரவில் இருந்து அமுலுக்கு வந்தது. போராளி குழுக்கள் மற்றும் சிரியா அரசு பிரதிநிதிகளிடையே இந்த மாதம் கஜகஸ்தான் நாட்டில் சமாதான பேச்சுவார்த்தை நடத்தவும் ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

இந்நிலையில், ரஷ்யா மற்றும் துருக்கி ஆகிய நாடுகளின் இந்த முயற்சியை ஆதரித்து ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் நேற்று தீர்மானம் கொண்டு வரப்பட்டது. இந்த தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.


சிரியாவில் வன்முறையை முடிவுக்கு கொண்டுவரவும், அரசியல்ரீதியான தீர்வு காணவும்



ரஷ்யா மற்றும் துருக்கி எடுத்துள்ள இந்த முயற்சிகளை வரவேற்று, ஆதரிக்கிறோம்' என்று தெரிவிக்கப்பட்டுள்ள இந்த தீர்மானத்தை ஆதரித்து, ஐ.நா. பாதுகாப்பு சபையில் அங்கம் வகிக்கும் 15 நாடுகளும் வாக்களித்தன. (இ-7)

## சுற்றுச்சூழல் அமைச்சர் சுட்டுப்படுகொலை

புருண்டி நாட்டின் சுற்றுச்சூழல் அமைச்சர் எம்மானுவேல் நியோனகுரு நேற்று அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.



புருண்டி நாட்டின் தலைநகரான புஜும்புராவில் நேற்று அடையாளம் தெரியாத நபர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் சுற்றுச்சூழல் அமைச்சர் எம்மானுவேல் நியோனகுரு கொல்லப்பட்டதாக முதல்கட்ட தகவல் வெளியாகியுள்ளது. (இ-7)

## தாயின் கார்ச்சில்லில் சிக்கி ஏழு மாதக் குழந்தை பலி!

அவுஸ்திரேலியாவில் ஒரு பெண் பின்பக்கமாக எடுத்த கார்ச் சில்லில் சிக்கி 7 மாத குழந்தை பலியான சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

அவுஸ்திரேலியா நாட்டிலுள்ள குவீன்ஸ்லாந்து அருகாமையில் வுட்ரிட்ஜ் என்ற பகுதியில் தனது 7 மாத குழந்தை தள்ளுவண்டியில் இருப்பதை கவனிக்காத பெண், காரை திருப்புவதற்காக பின்பக்கமாக செலுத்தியுள்ளார்.

வேகமாக பின்னால் வந்த காரின் சில்லில் தள்ளுவண்டியுடன் சிக்கிய குழந்தையை மீட்டு, வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போதும் சிகிச்சை பலனின்றி குழந்தை உயிரிழந்ததாக தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பாக 'அஜாக்கிரதை மரணம்' என்ற குற்றப்பிரிவின்கீழ் வழக்குப்பதிவு செய்துள்ள பொலிஸார் தொடர்ந்து விசாரித்து வருகின்றனர்.(இ-7)

# மைசூர் முதல் ‘81 போயஸ் கார்டன்’ வரை...


## ஜெயலலிதா டயரி குறிப்புக்கள்






“மதியாதார் தலைவாசல் மிதியாதே...!” - இது ஔவைப்பாட்டி சொன்னது. சரிதான்... நம்மைப் புறக்கணிப்பவர்களை, நம் இருப்பை விரும்பாதவர்களை, நம்மைப் புழுவாக நினைப்பவர்களை... நாம் கண்டு கொள்ளாமல், அவர்கள் வாசலை மிதியாமல் இருப்பதுதான் சரி. மறுப்பதற்கில்லை. ஔவையை ஒப்புக்கொள்ள வேண்டியதுதான். ஆனால், நம்மை மதியாதார் வாசலில்தான், நம் எதிர்காலம் இருந்தால்.... நம் வாழ்வு இருந்தால்... எப்படி மிதிக்காமல் இருக்க முடியும்? சரி, வாசலை மிதிக்காமல் இருந்துவிட்டுப் போவோம்.... ஆனால், வீட்டைக் கைப்பற்றலாம் அல்லவா...? ஆம், இதை... இதைத் தான் செய்தார் ஜெயலலிதா. அவரை புழுவாக மதித்தார்கள், அப்போதைய அ.தி.மு.கவின் முன்னணித் தலைவர்கள். புழுதான் கடுமையான நிலத்தையும் ஊடுருவும் என்பது அவர்களுக்கு ஏனோ தெரியாமல் போனது. அப்பலோவில் அனுமதி மறுக்கப்பட்டவர்... பொறுத்துப் பார்த்தார், கெஞ்சிப் பார்த்தார், அழுதும் பார்த்தார். இனி இது எதுவும் உதவாது என்ற முடிவுக்கு வந்தார். 'சிவாஜி' பட ரஜினி பாணியில் சொல்ல வேண்டுமென்றால்... இனி 'பூ' பாதை உதவாது. 'சிங்கப்' பாதையில் பயணிக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார். வெகுண்டெழுந்தார்.

**'வெகுண்டெழுந்த ஜெ...!'**



இதற்கு இன்னொரு காரணமும் இருந்தது. ஜெயலலிதா தன் அம்மாஸ்தானத்தில் வைத்து மதித்த இந்திரா காந்தியின் மரணமும், அவரை மிகவும் கவலையுறச் செய்தது. இந்திரா காந்திதான் அந்தச் சமயத்தில் ஜெயலலிதாவுக்கு இருந்த நம்பிக்கை. இந்திராவுக்கும் பிடித்தமான இளம் தலைவராக ஜெயலலிதா இருந்தார். அதனால் தான் அப்போதைய யூகோஸ்லாவியா நாட்டு ஜனாதிபதிக்கு கொடுத்த விருந்தில், ஜெயலலிதாவையும் அழைத்தார். அந்த விருந்தில் மொத்தம் 16 பேர்தான் அழைக்கப்பட்டிருந்தார்கள். அதில் ஜெயாவும் ஒருவர். விருந்துக்கு அழைத்தது மட்டுமல்லாமல், அவரை தனிப்பட்ட முறையில் ஜனாதிபதிக்கும் அறிமுகப்படுத்தி வைத்தார். இதுவெல்லாம், ஜெயலலிதா மனதில் பெரும் நம்பிக்கையை விதைத்திருந்தது. இக்கட்டான சூழலில் நம்மை அவர் காப்பார் என்று நம்பினார். ஆனால், அதிலும் பேரிடி விழுந்தது. இனி தன் இருப்பைக் காக்க எந்தத் தேவதூதனும் வரமாட்டான்... நம்மை நாம்தான் காத்துக்கொள்ள வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார்.

பத்திரிகையாளர்களும் ஜெயலலிதாவைக் கட்சியிலிருந்து ஒதுக்குவதைக் கவனித்தே வந்தனர். தமிழக ஊடகவியலாளர்கள் மட்டும் அல்ல... டில்லியிலும்தான். ஏனெனில், எம்.ஜி.ஆர். உடல்நிலை சரியில்லாமல், அப்பலோவில் அனுமதிக்கப்பட்ட பின், ஜெயாவின் நாடாளுமன்றத் துணைத் தலைவர் பதவி பறிக்கப்பட்டது. அது மட்டும் இல்லாமல், டில்லியில் தமிழ்நாடு இல்லத்தில் அவருக்கு ஒதுக்கப்பட்ட வி.ஐ.பி. அறையிலும் அனுமதி மறுக்கப்பட்டது. இதற்கெல்லாம் என்ன காரணம்...? ஏன் ஜெயலலிதா ஒதுக்கப்படுகிறார் என்று தெரிந்துகொள்ள டில்லி பத்திரிகையாளர்கள் ஆர்வமாக இருந்தனர். அவர்கள் எல்லோரையும் அழைத்தார்... ஓர் அதிர்ச்சிகரமான பேட்டியைச் சர்வ சாதாரணமாக டில்லியில் அளித்தார். அந்த பேட்டி இதுதான்,

"நான் என்ன சந்தேகிக்கிறேன் என்றால்.... எம்.ஜி.ஆரின் மனத்திறன் சரியாக இல்லை என்று. அது மட்டுமல்ல... கட்சியில் உள்ள சில சுயநலவாதிகளால் எம்.ஜி.ஆர். சிறை வைக்கப்பட்டிருக்கிறார் என்றும் சந்தேகிக்கிறேன்..." என்று திரியைக் கொளுத்திப் போட்டார்.



டில்லியில் கொளுத்திப் போட்ட திரி... தமிழகத்தில் வெடித்தது. தலைவர்கள் கோபமுற்றார்கள். அவரது பேச்சை அப்படியே புருக்லினுக்கு ஃபேக்ஸ் செய்தார்கள். அவர்கள் ஜெயாவை வீழ்த்த மும்முரமாக இருந்தபோது... ஜெயாவும் தன் மீட்சிக்காக டில்லியில் கடுமையாக உழைத்துக் கொண்டிருந்தார். காங்கிரஸின் அனைத்துத் தலைவர்களையும் சந்தித்தார். "தனக்கு அநீதி இழைக்கப்படுகிறது" என்றார். இது, நன்கு வேலை செய்யத் தொடங்கியது. காங்கிரஸ் தலைவர்கள் சிலர் இவருக்கு ஆதரவுக்கரம் நீட்டத் தொடங்கினார்கள்.

**'தலைவர் நலமாக இருக்கிறார்!'**

இந்திரா காந்தி மரணத்துக்குப் பின், நாடாளுமன்றத் தேர்தலும்... தமிழக சட்டமன்றத் தேர்தலும் ஒன்றாக வருகிறது. அந்தத் தேர்தலில் அ.தி.மு.கவும், காங்கிரஸூம் கூட்டணி. நிச்சயம் ஜெயித்து விடுவோம் என்பது இரண்டு கட்சிகளுக்கும் நன்கு தெரியும். இந்திரா இறந்தது மற்றும் எம்.ஜி.ஆர். மருத்துவமனையில் இருப்பது... இந்த இரண்டும் அனுதாப அலைகளை உண்டாக்கும். நாம் அறுதிப்பெரும்பான்மையைக் கைப்பற்றலாம் என்று அ.தி.மு.க தலைவர்கள் நினைத்தார்கள். ஹூம்... அவர்கள் இன்னொன்றுக்கும் திட்டமிட்டார்கள். எந்தக் காரணத்தைக் கொண்டும் ஜெயலலிதாவை பிரசாரக் கூட்டத்துக்கு அழைக்கக்கூடாது. இந்தத் தேர்தலோடு அவர் அரசியல் வாழ்வை அஸ்தமிக்க செய்ய வேண்டும் என்பது தான் அந்தத் திட்டம்.

ஆனால் காங்கிரஸ், தி.மு.கவை எதிர்கொள்ள கடுமையான பிரசாரம் வேண்டும் என்று நினைத்தது. ராஜீவ் காந்தி அந்தப் பிரசாரத்தை மேற்கொள்ள ஜெயலலிதா வேண்டும் என்று நினைத்தார். தமிழக அ.தி.மு.க. தலைவர்களுடன் பேசினார். அதற்குப் பின்தான் ஜெயலலிதா தேர்தல் பிரசாரத்தை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டார்.

ஜெயலலிதாவைப் பார்க்க கூட்டம் அலை மோதியது. உண்மையில், அந்த எளிய தொண்டர்கள் கூடியது ஜெயலலிதாவைப் பார்க்க அல்ல... அவர், எம்.ஜி.ஆர். குறித்து என்ன சொல்லப்போகிறார் என்று அறிந்துகொள்வதற்காக. ஜெயலலிதாவும் அதை நன்கு உணர்ந்திருந்தார். டில்லியில் பத்திரிகையாளர்களிடம் பேசியதுபோல் எல்லாம் பேசவில்லை... அனைவருக்கும் நம்பிக்கை அளிக்கும்விதமாக... "தலைவர் நலமாக இருக்கிறார்... மீண்டும் வருவார்" என்றார் கம்பீரமான தொனியில். இந்த ஒரு வாக்கியத்தைக் கேட்க... ஜெயலலிதா சென்ற இடமெல்லாம் கூட்டம் கூடியது. தேர்தலில் மகத்தான வெற்றியும் கிடைத்தது.

தேர்தல் முடிந்து ஏறத்தாழ ஒன்றரை மாதங்களுக்குப்பின் எம்.ஜி.ஆர். அமெரிக்காவிலிருந்து வருகிறார். அவரைச் சந்திக்க மீனம்பாக்கம் விமான நிலையத்தில் ஜெயலலிதா காத்துக்கொண்டிருந்தார். ஆனால், அங்கு எந்த முன்னணித் தலைவர்களும் இல்லை... இது, ஜெயலலிதாவுக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தியது. ஆம்... ஜெயலலிதா மீனம்பாக்கத்தில் காத்துக்கொண்டிருக்க... செயின்ட்தாமஸ் இராணுவப் பயிற்சி மைய ரன்வேயில் வந்து இறங்கினார் எம்.ஜி.ஆர்.

(தொடரும்)

# சீனக்குடா விவகாரம் குறித்து இந்திய அரசுடன் தான் இலங்கை பேச வேண்டும்

## ஐ.ஓ.சி. நிறுவனம் தெரிவிப்பு

(கொழும்பு)

**திருகோணமலை- சீனக்குடாவில் ஐ.ஓ.சி. எனப்படும் இந்திய எண்ணெய் நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் உள்ள மூன்று எண்ணெய்க் குதங்களை மீளப் பெறுவதற்கு இலங்கை அரசாங்கம் முடிவு செய்துள்ள நிலையில் இது குறித்து இந்திய அரசாங்கத்துடன் இலங்கை பேச்சு நடத்தவேண்டும் என்று இந்திய ஐ.ஓ.சி. நிறுவனம் தெரிவித்துள்ளது.**

வரட்சி நிலையைக் கருத்தில் கொண்டு, மேலதிக டீசல் மற்றும் எண்ணெயைக் களஞ்சியப்படுத்தி வைக்கும் நோக்கில், சீனக்குடாவில் உள்ள மூன்று எண்ணெய்க் குதங்களை இந்திய எண்ணெய் நிறுவனத்திடம் இருந்து மீளப் பெறும் அமைச்சரவைத் தீர்மானம் அண்மையில் எடுக்கப்பட்டுள்ளது.

இதனை இலங்கையில் பெற்றோலியத்துறை அமைச்சர் சந்திம வீரக்கொடி உறுதி செய்துள்ளார்.

தேசிய தேவைப்பாடுகளை கருத்தில் கொண்டே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து இந்திய எண்ணெய் நிறுவனத்துக்கு தகவல் அளிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவைத் தீர்மானத்தில் தலையிடும் உரிமை எந்தவொரு நிறுவனத்துக்கும் கிடையாது.

எனினும், அயல் நாட்டுடன் பிரச்சினையை ஏற்படுத்திக் கொள்ள நாம் விரும்பவில்லை என்றும் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

அடுத்த வாரம இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகள், சீனக்குடா எண்ணெய்க் குதங்களைப் பார்வையிடுவதற்குச் செல்வார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, இரண்டு நாட்டு அரசாங்கங்களுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்டுள்ள உடன்பாட்டின்படி, தேவைப்பட்டால் இலங்கை எந்த எண்ணெய்க் குதங்களை மீளப்பெற முடியும். இதுகுறித்து இந்திய அரசாங்கத்துடனேயே இலங்கை அரசாங்கம் பேச வேண்டும் என்று, இந்திய எண்ணெய் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் சியாம் போரா தெரிவித்துள்ளார்.(இ-3)

# கூட்டுப்படைகளின் தளபதி பதவியை இல்லாதொழிக்க அரசு ஆலோசனை

கூட்டுப் படைகளின் கட்டளைத் தளபதி பதவியை இரத்துச் செய்வது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தப் பதவியை தற்போது எயார் சீப் மார்ஷல் கோலித குணதிலக்க வகித்து வருகின்றார்.

கோலித குணதிலக்கவை ஓய்வுபெற வைத்து அவரது அலுவலகத்தை மூட வேண்டுமென ஜனாதிபதிக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுடனான போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்னர் 2009 ஆம் ஆண்டில் விசேட சட்டமூலமொன்றின் மூலம் இந்தக் காரியாலயம் நிறுவப்பட்டிருந்தது.

குறித்த காலப் பகுதியில் இராணுவத் தளபதியாக கடமையாற்றிய சரத் பொன்சேகாவை அந்தப் பதவியிலிருந்து நீக்கும் நோக்கிலேயே இந்த கூட்டுப்படை பிரதானி பதவி உருவாக்கப்பட்டது.

இந்தப் பதவியை வழங்கி சரத் பொன்சேகாவின் அதிகாரங்கள் முடக்கப்பட்டதும், மகிந்த அரசாங்கத்துடன் சரத் பொன்சேகா முரண்படுவதற்கு பிரதான ஏதுவாக அமைந்தது.

எனினும் இந்தக் காரியாலயத்தை தொடர்ந்தும் கொண்டு நடத்துவதில் எவ்வித பயனும் கிடையாது என ஜனாதிபதிக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தப் பதவியை இரத்து செய்யுமாறு யோசனை முன்வைக்கப்பட்டுள்ள போதிலும் இறுதித் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை என பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார். (இ-3)

# மகிந்தவின் எதிர்ப்புக்கு மத்தியிலும் சீனாவின் திட்டங்களை ஆரம்பிக்கவுள்ளார் ரணில்

சீனாவின் உதவியுடன் அம்பாந்தோட்டை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வது உள்ளிட்ட தென்மாகாணத்தை அபிவிருத்தி செய்யும் திட்டத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் ஜனவரி 7ஆம் திகதி ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இந்த நிகழ்வில் இலங்கைக்கான சீனத் தூதுவர் ஜி ஷியான்லியாங் மற்றும் முக்கிய அமைச்சர்களும் கலந்து கொள்ளவுள்ளதாக, ருகுணு அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் தலைவர் அஜித் கோஸ்தா தெரிவித்துள்ளார்.



இந்த திட்டத்தின் கீழ், துறைமுகம், எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை மற்றும் கைத்தொழில் பூங்கா என்பன அபிவிருத்தி செய்யப்படும்.

இதற்காக அம்பாந்தோட்டை துறைமுகத்தின் 80 வீத உரிமை சீனாவுக்கு வழங்கப்படவுள்ளதுடன், அம்பாந்தோட்டை, மொனராகல, மாத்தறை மாவட்டங்களில் 15 ஆயிரம் ஏக்கர் காணிகளும் சீன நிறுவனங்களுக்கு வழங்கப்படவுள்ளது.

இதற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.(இ-3)

## இன்று ஒரு தகவல்

### இதானே வேணாங்குறது!

சமயங்களில் யாரை நாம் துச்சமாக எண்ணுகிறோமோ அவர்கள் ரொம்பவும் சக்தி மிக்கவர்களாக ஆகிவிடுவது உண்டு.

இது தெரியாமல் சிலர் எக்கச்சக்கமாய் மாட்டிக்கொண்டு விழிப்பவர்களும் உண்டு.

ஒரு சாதாரண விடயம். கிளார்க் மட்டத்தில் முடிந்து போக வேண்டிய வேலை அது. கிளார்க் கொஞ்சம் இழுத்தடித்தார். ஐயா! சாமி எனும் பாணியில் பேசிக் காரியத்தை சாதித்திருக்கலாம். ஒரு மனிதருக்குப் பொறுமையில்லை. உன்னை மேலிடத்தில் சொல்லி என்ன செய்கிறேன் பார்! என்று வீரம் பேசிவிட்டுப் போனார்.

மேலிடம் கிளார்க்கைக் கூப்பிட்டுத் திட்டியது. மிரட்டியது. கிளார்க்கோ நன்கு கற்பனை செய்து ஒரு புதுப் பிரச்சினையைக் கிளப்பியதும் உடனே மேலிடமும் தயங்க ஆரம்பித்து காரியம் கெட்டது.

கீழ் மட்டத்தில் வேலை ஆகவில்லை என்றால் மேலிடத்திற்குப் போவதில் தவறு இல்லை தான். ஆனால் அதற்காகக் கீழித்தை உசுப்பியிருக்கக் கூடாது. அந்த விடயத்தை ஒரு கௌரவப் பிரச்சினையாக எடுத்துக் கொண்டது தவறு. அதையும் வெளிப்படையாகக் காட்டிக் கொண்டது மகா தவறு.

குடும்பத்தையே எடுத்துக் கொள்ளுங்கள். பையன் மொப்பட் வேண்டும் என்கிறான். தாயோ பாதுகாப்புக் கருதி வேண்டாம் என்கிறாள். பையன் அம்மாவைக் கொஞ்சம் விட்டுப் பிடித்து நல்ல சூழ்நிலைக்காகக் காத்திருந்து பாசம் பொங்கும் வேளையில் அம்மா! ப்ளீஸ்மா! என்றால் மொப்பட் நிச்சயம்.

அதை விடுத்து அப்பாகிட்டே சொல்லி மொப்பட் வாங்கி உன் முன்னாடி கொண்டு வந்து நிறுத்தலே என் பேரு கணேசனில்லை! என்று சவால் மட்டும் விட்டு விட வேண்டாம்.

அப்பாவிடம் போனால் அவர் அம்மாவிடம் தான் கேட்பார். அப்படியிருக்கையில் அம்மாவை விரோதித்துக் கொண்டு வாங்கி விட முடியுமா என எண்ணுவதில்லை. ஏதோ அந்த நேரத்து உணர்ச்சி! பொரிந்து தள்ளி விடுகிறார்கள்.

காரியவாதிகள் இப்படி இருக்கக் கூடாது. சவாலா? விடலாம். ஆனால் மனத்திற்குள் சவால் விட வேண்டும். என் காரியத்தைக் கெடுக்கவா பார்க்கிறாய்? உன்னை வைத்தே இதைச் சாதித்துக் கொள்கிறேன் பார்! என்று மனத்திற்குள் கருவிக் கொள்ள வேண்டும். வெளியே சிறிதும் காட்டிக் கொள்ள வேண்டாம்.

எதிரியை உருவாக்கி வீழ்த்துவதைவிட அவன் முழுமையாக உருவாவதற்கு முன்பே கன்று அளவிலேயே சாய்க்க வேண்டும். இது மிக எளிது.

**லேனா தமிழ்வாணன்**




# மர்ம பங்களா

ஒரே ஒரு ஊர்லே ராஜா ஒருத்தர் இருந்தாராம். என்ன ராஜா காலத்து கதைக்கு கொண்டு போய்ட்டேன்னு நினைக்கிறீங்களா? அதான் இல்லே. ராஜ வாழ்க்கை வாழ்ந்தவர்களின் ஒரு பாழடைந்த பங்களா ஒன்று இருந்தது. அந்த பங்களாவில் பல பிரச்சனைகள். முதலில் அந்த பங்களா யாருடையது என்று யாருக்கும் தெரியவில்லை. மிகவும் பழமைவாய்ந்தது. அந்த பாழடைந்த பங்களாவை சுற்றி பல மர்மங்கள் வேறு. அந்த பங்களாவுக்குள் செல்பவர்கள் உயிரோடு திரும்பியதாக வரலாறு எதுவும் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். இப்படியாக எத்தனை உயிர்கள் பறிபோனது என்று தெரியவில்லை. ஊருக்கு தெரிந்தது போன வருடம் நான்கு பள்ளிக்கூட நண்பர்கள் இரவு பத்து மணி போல் விளையாட்டாக உள்ளே சென்று இருந்திருக்கின்றனர். சிறு பிள்ளைகள் அல்லவா, இளங்கன்று பயம் அறியாது என்பார்கள் அல்லவா அது போல் ஊர் மக்களின் பேச்சை காது கொடுத்து கேளாமல், யாருக்கும் தெரியாமல் உள்ளே



சென்று இருந்திருக்கின்றனர்.

அந்த நால்வரில் மூன்று பேர் மயங்கிய நிலையில் பங்களாவுக்கு வெளியே வீசி எறியப்பட்டும் ஒருவன் பங்களாவுக்கு உள்ளேயே மர்மமான முறையில் இறந்து கிடந்தான். இந்த செய்தி கேட்ட பின் அந்த பங்களா மேல் இருந்த பயம் மேலும் ஊர் மக்களை பீதி அடைய செய்திருந்தது.

இப்படியாக மர்மங்கள் தொடர்ந்தன. அரசாங்கமும் அந்த பங்களாவின் மர்மங்களை கலைய முன் வரவில்லை. பங்களாவில் காத்து கருப்பு இருக்கு எனவும் இரவு நேரங்களில் அலைகிறது எனவும் வலைத்தளங்களிலும் ஊடகங்களிலும் பரவ ஆரம்பித்தது. லண்டனில் வசிக்கும் கால்வின் என்ற ஆங்கிலேயன் அதை பார்த்து விட்டு அதிர்ந்தான். பங்களாவை பற்றி ஆய்வு செய்யும் ஆவல் அவனுக்கு தூண்டியது. பங்களாவைபற்றிஆய்வு செய்யும் விஷ பரட்சையை எதிர்நோக்க தமிழ் நாடு சென்றான். வந்து இறங்கியும் ஊர் தலைவனை சந்தித்து தங்குவதற்கு அனு மதி பெற்றான். அவரின் மற் றொரு வீட்டிலே தங்கினான். அவன் ஊர் தலைவனிடம் வந்த காரணத்தை சொல்லவில்லை. ஊர் மக்களின் வாழ்வியல் பற்றி ஆய்வு செய்வதாக கூறி மழுப்பி னான். தன்னுடைய பங்க ளாவின் ஆய்வுக்கு ஊர் தலைவர் உதவுவார் என்பதில் நம்பிக்கை இல்லை. ஊர் மக்களிடையே நம்பபடும் மூட நம்பிக்கைக்கு காரணம் ஊர் தலைவராக இருந்தால் தன்னுடைய ஆய்வுக்கு இடைஞ்சல் கொடுப்பர் என சந்தேகப்பட்டான்.

(தொடரும்...)

## 01.2017 02 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 366 - அலமானி எனப்படும் ஜேர்மனிய ஆதிகுடிகள் ரைன் ஆற்றைக் கடந்து ரோமை முற்றுகையிட்டனர்.
- 1492 - ஸ்பெயினில் முஸ்லிம்களின் ஆளுகைக் குட்பட்ட கடைசி நகரமான கிரனாடா சரணடைந்தது.
- 1757 - கல்கத்தாவை ஐக்கிய இராச்சியம் கைப்பற்றியது.
- 1782 - பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனி அட்மிரல் எட்வெர்ட் ஹியூஸ் தலைமையில் இந்தியாவில் இருந்து திருகோணமலை நோக்கிப் புறப்பட்டது.
- 1788 - ஜோர்ஜியா ஐக்கிய அமெரிக்க அரசியலமைப்பை ஏற்றுக் கொண்ட 4வது மாநிலமானது.
- 1791 - ஒகைய்யோ மாநிலத்தில் குழந்தைகள் உட்பட குடியேற்றவாசிகள் 14 பேரை இந்திய ஆதிகுடிகள் படுகொலை செய்தனர்.
- 1793 - ரஷ்யாவும் புரூசியாவும் போலந்தை பங்கிட்டன.
- 1818 - பிரித்தானிய குடிசார் பொறியாளர்கள் நிறுவனம் நிறுவப்பட்டது.
- 1893 - வட அமெரிக்காவில் தொடருந்துப் பாதைகளில் நேரத்தை அளவிடும் குரோனோமீட்டர்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.
- 1905 - ரஷ்யக் கடற்படையினர் சீனாவின் போர்ட் ஆதரில் ஜப்பானியரிடம் சரணடைந்தனர்.
- 1921 - ஸ்பெயினின் சாண்டா இசபெல் கப்பல் மூழ்கியதில் 244 பேர் கொல்லப்பட்டனர்.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: வேல்ஸில் கார்டிஃப் என்ற இடத்தில் லாண்டாஃப் தேவாலய ஜெர்மனியரின் குண்டுவீச்சில் பலத்த சேதம் அடைந்தது.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: மணிலா ஜப்பானியரினால் கைப்பற்றப்பட்டது.
- 1954 - பத்மஸ்ரீ, பத்மபூசண், பத்மவிபூசன் விருதுகள் இந்திய அரசினால் ஏற்படுத்தப் பட்டது.
- 1955 - பனாமாவின் அதிபர் ஜோசே அன்ரோனியோ ரெமோன் படுகொலை செய்யப்பட்டார்.
- 1959 - முதலாவது செயற்கைச் செய்மதி, லூனா 1, சோவியத் ஒன்றியத்தால் விண்ணுக்கு ஏவப்பட்டது.
- 1971 - கிளாஸ்கோவில் உதைபந்தாட்ட மைதானம் ஒன்றில் இடம்பெற்ற விபத்தில் சிறுவர்கள் உட்பட 66 பேர் கொல்லப்பட் டனர்.
- 1982 - சோமாலிய அரசுக்கு எதிரான தமது முதலாவது இராணுவ நடவடிக்கையை சோமாலிய தேசிய இயக்கம் தொடங்கியது. சோமாலியாவின் வடபகுதியில் அரசியல் கைதிகளை விடுவித்தனர்.
- 1993 - யாழ்ப்பாணக் கடல் நீரேரிப் படுகொலை: கிளாலி நீரேரியில் 35-100 பயணிகள் இலங்கைப் படையினரால் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1999 - விஸ்கொன்சின் மாநிலத்தில் இடம் பெற்ற பலத்த பனிப்புயலில் சிக்கி 68 பேர் கொல்லப்பட்டனர்.
- 2004 - ஸ்டார்டஸ்ட் விண்கலம் வைல்டு 2 என்ற வால்வெள்ளியை வெற்றிகரமாகத் தாண்டியது.
- 2006 - திருகோணமலை மாணவர்கள் படுகொலை: இலங்கையின் கிழக்கே திருகோணமலை, நிலாவெளி கடற்கரையில் 5 தமிழ் மாணவர்கள் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டனர்.
- 2006 - மன்னாரில் இலுப்பைக்கடவையில் இடம்பெற்ற இலங்கைப் படையினரின் வான் தாக்குதலில் 8 சிறுவர்கள் உட்பட 15 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 40 பேர் படுகாயமடைந்தனர்.
- 2008 - விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்குமிடையே 2002 இல் கைச்சாத்திடப்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கையில் இருந்து வெளியேறுவதாக இலங்கை அரசு அறிவித்தது.

### பிறப்புகள


- 1873 - லிசியே நகரின் தெரேசா, பிரெஞ்சு கத்தோலிக்கப் புனிதர் (இ. 1897)
- 1914 - நூர் இனாயத் கான், உருசிய-ஆங்கிலேய உளவாளி (இ. 1944)
- 1920 - ஐசாக் அசிமோவ், அமெரிக்க எழுத்தாளர் (இ. 1992)
- 1935 - க. நவரத்தினம், ஈழத்து அரசியல்வாதி
- 1940 - எஸ். ஆர். ஸ்ரீனிவாச வரதன், இந்திய-அமெரிக்கக் கணிதவியலர்
- 1943 - பாரிசு மான்கோ, துருக்கிய பாடகர், தயாரிப்பாளர் (இ. 1999)
- 1960 - ராமன் லம்பா, இந்தியத் துடுப்பாளர் (இ. 1998)
- 1961 - கேணல் கிட்டு, விடுதலைப் புலிகளின் மத்தியகுழு உறுப்பினர், தளபதி (இ. 1993)

### இறப்புகள்

- 1782 - கீர்த்திஸ்ரீ ராஜசிங்கன் - இலங்கையின் கண்டியை ஆண்ட கடைசி அரசன்.
- 1876 - மீனாட்சி சுந்தரம் பிள்ளை, தமிழறிஞர் (பி. 1815)
- 1960 - தி. வை. சதாசிவ பண்டாரத்தார், தமிழக வரலாற்று அறிஞர் (பி. 1892)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 100 | 50 | 40 | 40 | 30 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 90 | 100 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 200 | 100 | 180 | 120 | 200 | 200 |
| தக்காளி | 200 | 160 | 120 | 170 | 200 | 180 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 | 70 | 60 | 60 |
| கோவா | 30 | 60 | 20 | 30 | 40 | 30 |
| கரட் | 120 | 100 | 90 | 90 | 120 | 120 |
| பூசணி | 60 | 60 | 35 | 50 | 60 | 50 |
| புடோல் | 80 | 60 | 50 | 70 | 80 | 80 |
| வாழைக்காய் | 40 | 60 | 40 | 50 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 120 | 100 | 80 | 80 | 120 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 100 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 300 | 200 | 240 | 300 | 200 | 300 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 70 | 300 | 120 | 80 |
| கருணைக்கிழங்கு | 50 | 100 | 50 | 60 | 80 | 50 |
| பயற்றங்காய் | 150 | 100 | 180 | 140 | 100 | 180 |
| லீக்ஸ் | 100 | 100 | 80 | 100 | 120 | 100 |
| பீற்றூட் | 60 | 100 | 50 | 80 | 80 | 70 |
| கறிமிளகாய் | 200 | 100 | 180 | 160 | 300 | 100 |
| முருங்கைக்காய் | 400 | — | 300 | 400 | 400 | — |
| போஞ்சி | 120 | 100 | 110 | 100 | 120 | 120 |
| கத்தரிதம்புள்ள | 20 | 20 | 20 | 30 | 40 | 30 |
| கீரை - 1பிடி | 30 | 40 | 30 | 30 | 40 | 20 |
| தேசிக்காய் | 300 | 200 | 250 | 300 | 400 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 45 | 50 | 20-40 | 35 | 45-60 | 50 |
| இராசவள்ளி | 280 | 200 | 250 | 250 | 300 | 300 |
| வெங்காயப்பூ | 250 | 100 | 200 | 220 | 280 | 200 |
| முள்ளங்கி | 60 | 50 | 40 | 60 | 80 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 15 | 30 | 40 | 30 |
| வல்லாரை | 10 | 20 | 15 | 20 | 20 | 25 |
| ஈரப்பலா | 60 | 50 | 50 | 60 | 100 | 60 |



2017 ஆம் ஆண்டு வருடப்பிறப்பை முன்னிட்டு நெடுங்கேணி கிறிஸ்து அரசர் ஆலயத்தில் திருப்பலிப்பூசைகள் நேற்று முன்தினம் நள்ளிரவு இடமபெற்று கிறிஸ்து அரசர் ஆலயத்தின் அருட்தந்தை அற்புதராஜாவினால் திருப்பலி இயேசுநாதரிடம் ஒப்புக் கொடுக்கப்பட்டது. (படங்கள்: கலைச்செல்வன்)

# முத்தையன்கட்டு விவசாயிகளுக்கு வரட்சி நிவாரணமாக உலர் உணவு

## வடக்கு விவசாய அமைச்சு வழங்கியது



முத்தையன்கட்டுக் குளத்தை நம்பி விவசாயத்தை மேற்கொள்ளும் 1000 பேருக்கு வரட்சிநிவாரணமாக வடமாகாண விவசாய அமைச்சு நேற்று முன் தினம் சனிக்கிழமை உலர் உணவுப் பொதிகளை வழங்கி வைத்துள்ளது. ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற இதற்கான நிகழ்ச்சியில் வடக்கு விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கலந்து கொண்டு உணவுப் பொதிகளை வழங்கி வைத்துள்ளார்.

முத்தையன்கட்டுக் குளத்தின் கீழ் பயிரிடப்படும் நிலப்பரப்பின் அளவை 6000 ஏக்கர் அளவாக அதிகரிக்கச் செய்யும் நோக்கோடு மேற்கொள்ளப்பட்டுவந்த முத்தையன்கட்டுக் குளத்தின் புனரமைப்புப் பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளது. இப்புனரமைப்புப் பணிகளுக்காகக் குளத்தில் இருந்த நீரை முன்கூட்டியே திறந்து விடவேண்டிய அவசியம் ஏற்பட்டதால் 2016 ஆம் ஆண்டில் காலபோகச் செய்கைக்கான நீர் விவசாயிகளுக்கு வழங்க முடியாத நிலை ஏற்பட்டது. இதனால், கால போகச் செய்கையில் விவசாயிகளால் பெருமளவுக்கு ஈடுபடமுடியவில்லை.

மழைநீரைச் சேகரிப்பதற்குத் தயாராகக் குளத்தின் புனரமைப்புப் பணிகள் விரைந்து முடிக்கப்பட்டபோதும், பருவ மழை பொய்த்ததன் காரணமாக குளத்தில் போதியளவு நீரைச் சேமிக்க முடியவில்லை. இதனால் பெரும் போகத்திலும் முத்தையன் கட்டுக்குள விவசாயிகளால் முழுமையாக ஈடுபடமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இவற்றைக் கருத்திற் கொண்டு வரட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உலர் உணவு நிவாரணம் வழங்குமாறு முல்லை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மாகாணசபை உறுப்பினர்கள் விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனிடம் மாகாணசபையில் அவரது பாதீடு உரை இடம் பெற்றபோது கோரிக்கை விடுத்திருந்தனர். இக்கோரிக்கைக்கு அமைவாகவே, வடக்கு விவசாய அமைச்சின் ஒரு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் பாதிக்கப்பட்ட 1000 விவசாயிகளுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் ய.அநிருத்தனன் தலைமையில் நடைபெற்ற உலர் உணவு வழங்கல் நிகழ்ச்சியில், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் க.சிவநேசன், து.ரவிகரன், ஆ.புவனேஸவரன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (இ)

# சிறப்பு பூசைகள்



2017 ஆம் ஆண்டு வருடப் பிறப்பு பூசைகள் நெடுங்கேணி மாறாலிப்பை நாதம்பிரான் ஆலயத்தில் வெகுசிறப்பாக இடம்பெற்றது.

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 945

**பவி**

பசித்த வயிறு...!
பணமில்லா வாழ்க்கை...!!
பொய்யான உறவுகள்...!!!
இவை மூன்றும்
ஒரு மனிதனுக்கு
கற்றுக் கொடுக்கும் பாடத்தை
எவனொருவனாலும்
கற்றுக் கொடுக்க முடியாது....

**பாஸ்கரன்**




**ராகு**




**சுலக்ஷன்**

ஆண் எதிர்பார்ப்பது தன் மீது அன்பாயிருக்கும் மனைவியை, பெண் எதிர்பாப்பது தன் மீது மட்டும் அன்பாயிருக்கும் கணவனை..

**கஜா**

அழகில் மயங்கி காதலில் வீழ்ந்து விடலாம், ஆனால் வாழ்க்கை முழுவதும் வாழப்போவது என்னவோ குணத்தை வைத்து தான் என்பதை மறவாதீர்கள்..

**சுபாசினி**

தேவை இருந்தால்
உன்னை
தெய்வம் என்பர்
உன்னால்
தேவை முடிந்தபின்
உன்னையே
தேவாங்கு
என்பர்

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# கடமை நிறைவேற்று அதிபர்களின் சத்தியக்கடதாசி

*அன்பு வாசகர்களுக்கு!*

*கடமை நிறைவேற்று அதிபர்களின் சத்தியக் கடதாசி என்ற இச்சத்தியக்கூற்று யாரையும் பழி தீர்ப்பதன்று. மாறாக உண்மையை உண்மையாக வெளிப்படுத்துவது. இதில் இடம்பெறக்கூடிய கருத்துக்கள் பொய்யானவை என்று அறியப்பட்டால் அது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் தங்கள் கருத்தை இவ்விடத்தில் பதிவு செய்ய முடியும்.*

*மட்டுமன்றி, கடமை நிறைவேற்று அதிபர்களை தொடர்ந்தும் பணிநிலையில் வைத்திருக்க முடியாமைக்கான காரணத்தையும் உரியவர்கள்- தொடர்புபட்ட அதிகாரிகள் தெரியப்படுத்த முடியும்.*

*நாட்டின் 8 மாகாணங்களில் கடமை நிறைவேற்று அதிபர்கள் தொடர்ந்தும் கடமையில் ஈடுபட்டிருக்கையில் வடக்கு மாகாணத்தில் மட்டும் கடமை நிறைவேற்று அதிபர்களை பணி நிலையில் இருந்து விடுவிக்க வேண்டிய சூழ்நிலை ஏன் ஏற்பட்டது என்பது தொடர்பில் எவர் தமது நியாயமான கருத்துக்களை முன்வைத்தாலும் அவை நடுநிலை நின்று பிரசுரிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.*

*எனினும் அந்தக் கருத்துக்கள் யாவும் கடமை நிறைவேற்று அதிபர்களின் சத்தியக்கடதாசி என்ற தொடரின் நிறைவில் பிரசுரிக்கப்படும் என்பது அறிதற்குரியது.*

*மேலும் குறிப்பாக இச்சத்தியக்கடதாசியை வடக்கு மாகாணத்தின் முதலமைச்சர் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்கள் பார்வையிட வேண்டும் என்பது ஒட்டுமொத்த கடமை நிறைவேற்று அதிபர்களின் விருப்பமாகும்.*

*எனினும் அவருக்கு நேர காலங்கள் கிடைக்காத பட்சத்தில் அவரின் உதவியாளர்கள் இதனைப் பார்வையிட்டு இதில் உள்ளதை உள்ளவாறு அவருக்குத் தெரியப்படுத்த வேண்டும் எனவும் கடமை நிறைவேற்று அதிபர்கள் கேட்டுக் கொள்கின்றனர்.*

*இலங்கையின் எந்த மாகாணத்திலும் நடக்காத ஒரு சம்பவம் யுத்தம் நடந்த வடமாகாணத்தில் நடந்தது ஏன்? யுத்த காலத்தில் கடமையாற்றிய கடமை நிறைவேற்று அதிபர்களை உடனடியாக தூக்கி வீச வேண்டிய தேவை ஏற்பட்டது எதற்காக?*

*ஒன்றாக, ஒற்றுமையாக, நண்பர்களாக இருந்தவர்கள் அதிபர் தரப் பரீட்சை முடிவுகளோடு எவ்வாறு பிரிக்கப்பட்டனர். இதன் பின்னணியில் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்த ஆசிரியர் தொழிற்சங்கம் சார்ந்த ஒருவர் செயற்பட்டாரா?*

*வேறு மாகாணங்களில் கடமை நிறைவேற்று அதிபர்களைத் தூக்காமல் அவர் வடபுலத்திற்கு ஓடி வந்தது ஏன்? இங்கு இருக்கக்கூடிய அந்தத் தொழிற்சங்கம் சார்ந்த சில உறுப்பினர்கள் தமிழ்த்தேசியப் பற்றுக் கொண்டவர்களாயினும் அவரின் விடயத்தில் அசமந்தமாக இருந்துவிட்டார்களா? இவ்வாறு இருந்தவர்கள் ஏனைய மாகாணத்தில் உள்ள கடமை நிறைவேற்று அதிபர்களை எப்போது தூக்குவீர்கள் என்று அவரிடம் கேட்டார்களா? அவர் உறுதிமொழி வழங்கினாரா?*

*இதுபோன்ற விடயங்களும் இச்சத்தியக்கடதாசியில் இடம்பெறுவதால் இது தொடர்பில் தமிழ்மக்களின் கருத்துக்களும் இவ்விடத்தில் பதிவேற்றம் செய்யப்படும்.*

*இவை யாவும் நடுவு நிலையோடு- எந்தப் பக்கச்சார்புமின்றி மேற் கொள்ளப்படும் என்பதை இவ்விடத்தில் தெரிவித்துக் கொள்கிறோம். இங்கு பிரசுரிக்கப்படுவது சத்தியக் கடதாசி என்பதால் மேற்போந்த விடயங்கள் முன்கூட்டியே வாசகர்களுக்கு தெரியப்படுத்துவது பத்திரிகை ஆசிரியரின் கடமை என்ற அடிப்படையில் மேற்படி குறிப்பு தரப்படுகிறது.*

*(ஆசிரியர்)*

### சத்தியக் கடதாசி

பொதுவில் பதவியைப் பொறுப்பேற்கும் போது தான் சத்தியப்பிரமாணம் செய்வதும் சத்தியக்கடதாசி முடிப்பதுமான சம்பிரதாயங்கள் நடந்தேறுவது வழமை.

ஆனால் அந்த வழமைக்கு மாறாக கடமையில் இருந்து விலகும் போது சத்தியக் கடதாசி முடிக்கின்ற ஒரு புதுமுறைமை இத்தால் நடந்தேறுகிறது.

சிலவேளைகளில் இதுவும் பொருத்தம் தான் என்று எண்ணத் தோன்றும். எதுவாயினும் இன்று வட மாகாணத்தின் கல்விப்புலத்தில் கடமை நிறைவேற்று அதிபர்கள்- அதிபர் சேவை தரம்- III போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த நபர்கள் என்ற விவகாரம் பேசுபடு பொருளாகியுள்ளது.

இந்த இரண்டு விடயங்களும் பலருக்கு விசனத்தையும் மன உளைச்சலையும் ஏற்படுத்தியுள்ளது என்பது உண்மைதான்.

அதிலும் நேரடியாக சம்பந்தப்பட்டவர்கள் என்ற எல்லை கடந்து வடக்கு மாகாணத்தின் முதலமைச்சர் கல்வியமைச்சர், கல்வியமைச்சின் செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர் , வலயக் கல்விப் பணிப்பாளர்கள் என்ற பல தரப்பிலும் மேற்குறிப்பிட்ட விடயங்கள் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன என்பது மறுக்க முடியாத உண்மை.

இத்தகைய நிலைமை ஏன் உருவாகியது, இதன் பின்னணி என்ன? இரு தரப்பிற்கும் பாதகம் இல்லாமல் இந்த விடயத்தைக் கையாண்டிருக்க முடியாதா? என்ற பல வினாக்கள் இதனூடு எழுகை பெறுகிறது.

இந்த வினாக்களுக்கான விடையைத் தேடும் போது தான் தவறுகள் எங்கே நடந்தன என்ற உண்மையை உணரமுடியும்.

பொதுவில் சில விடயங்கள் சம்பந்தப்பட்டவர்களுடனும் அதனோடு இணைந்தவர்களுடனும் நடந்து முடிந்து போவதும் உண்டு. ஆனால் கடமை நிறைவேற்று அதிபர் என்ற விவகாரம் தனித்து சம்பந்தப்பட்டவர்களுடனோ அன்றி அதிகாரிகளுடனோ நின்று போகக்கூடியதன்று. ஏனெனில் இஃது மக்களுடன், மாணவ சமூகத்துடன், கல்விப் புலத்துடன் தொடர்புபட்டது என்பதால் இது தொடர்பான தகவல்களை அறியும் அதிகாரமும் உரிமையும் பொதுமக்களுக்கு உண்டு என்ற அடிப்படையில் இச்சத்தியக்கடதாசி முடிக்கப்படுகிறது.

### கடமை நிறைவேற்று அதிபர்கள்

கடமை நிறைவேற்று அதிபர்கள் (Performing Principals) என்ற சொற்பதம் பலருக்கு புதியதாகவே இருக்க முடியும். ஏனெனில் அதிபர், பதில் அதிபர், பிரதி அதிபர், உபஅதிபர் என்ற வகைமைப்பாடுகளே கல்விச் சமூகத்தில் பரவலாகக் கையாளப்படுவது என்பதால் கடமை நிறைவேற்று அதிபர்கள் என்ற பதம் சாதாரண சொல் வழக்கில் புதியது எனலாம். அதிபர் தரத்தில் அல்லது குறித்த பாடசாலைக்கு தேவையான அதிபர் தரத்தில் இல்லாத ஒரு ஆசிரியரை அந்தப் பாடசாலைக்கு அதிபராக நியமிக்கும் போது அவரைக் கடமை நிறைவேற்று அதிபராக நியமிப்பது வழமை.

இஃது பாடசாலைகள் மட்டுமன்றி ஏனைய அரச அமைப்புக்களிலும் இருக்கக்கூடிய வழமை. உண்மையில் பதில் அதிபர்கள் என்ற நியமனச் சொல்லால் அழைக்கப்படவேண்டிய ஒரு பதவிக்கு மேலும் சில அதிகாரங்களை வழங்கும் பொருட்டு கடமை நிறைவேற்று அதிபர்கள் (Performing Principal) என்ற சொற்பதம் பொருத்தப்படுகிறது.

இலங்கைத் தீவின் கல்வி வரலாற்றில் கடமை நிறைவேற்று அதிபர்கள் என்ற பணிநிலை நேற்று இன்று ஆரம்பமானதன்று.

அன்று முதல் இன்று வரை என்று கூறக்கூடியவாறு கடமை நிறைவேற்று அதிபர்கள் இருந்துள்ளனர் என்பது மறுதலிப்புக்கு இடமில்லாத உண்மை.

மிகப்பிரபல்யமான பாடசாலைகள்கூட கடமை நிறைவேற்று அதிபர்களின் நிர்வாகத்தின்கீழ் மிகச்சிறப்பாக இயங்கின என்பது கல்விச் சமூகத்துடன் தொடர்புபட்டவர்களுக்கு நன்கு தெரியும்.

இவ்வாறு கடமைநிறைவேற்று அதிபர்கள் என்ற பணி நிறைவின் தோற்றுவாய் என்பது அதிபர் தரப்பரீட்சைகளை ஒழுங்குசீராக நடத்தாததன் காரணமாக ஏற்பட்ட ஒரு சூழ்நிலைக்களம் என்று கூறுவதே பொருத்தமானதாகும்.

அதிபர் தரப்பரீட்சைகள் 10 ஆண்டுகளுக்கு அல்லது 15 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்துதல் என்ற காரணத்தால் அதிபர் தரத்தில் உள்ளவர்களுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுவிடும்.

அதேநேரம் ஓய்வுபெறும் அதிபர்களின் இடத்தை நிரப்புவதற்கும் முடியாமல் போகின்றது. இத்தகைய நிலையில் கடமை நிறைவேற்று அதி பர்களுக்கான நியமனங்கள் நடந்தாகின்றன.

அவ்வப்போது இருக்கக்கூடிய கல்வி நிர்வாகக் கட்டமைப்புக்களுக்கு அமைய வலயக் கல்வி அலுவலகங்கள் கடமை நிறைவேற்று அதிபர்களுக்கான விண்ணப்பங்களைக் கோரி விண்ணப்பிப்பவர்களிடையே பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை நடத்தி அவர்களுக்கான நியமனங்கள் வழங்கப்படுகின்றன.

இந்த நடைமுறையில் சில சந்தர்ப்பங்களில் குறித்த பாடசாலையில் அதிபர் இல்லாதவிடத்து அந்த நிர்வாகத்தைப் பொறுப்பேற்ற அந்தப் பாடசாலையில் கடமையாற்றும் சிரேஷ்ட ஆசிரியருக்கு கடமை நிறைவேற்று அதிபர் பதவியை வழங்கிய சந்தர்ப்பங்களும் உண்டு. எதுவாயினும் யுத்தகால சூழ்நிலையில் எங்கள் வடபுலத்தில் பெரும்பாலான பாடசாலைகளை நிர்வகித்து அவற்றை இயக்கிய பெருமை கடமை நிறைவேற்று அதிபர்களுக்கு உண்டு என்பது சத்தியம்.

நிலைமை இதுவாக இருக்கையில் காலத்திற்கு காலம் கடமை நிறைவேற்று அதிபர்களை அதிபர் சேவைக்குள் உள்ளீர்ப்புச் செய்யும் நடைமுறையும் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. இப்போது வடபுலம் சந்தித்துள்ள கடமை நிறைவேற்று அதிபர் பிரச்சினை உள்ளீர்ப்பு என்ற வேர் அறுந்து போனதால் ஏற்பட்டதுதான்.

(நாளை தொ .ரும்)

# வேலையிழப்பும் மாற்று தீர்வுகளும்

ஒரு நிறுவனத்தில் வேலை பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். நாளையிலிருந்து வேலைக்கு வரவேண்டாம் என்று உங்கள் மேலதிகாரியிடமிருந்து உத்தரவு வருகிறது. இந்த வேலைக்கு நீங்கள் பொருத்தமில்லை, உங்கள் தகுதியை பயன்படுத்திக் கொள்ள முடியவில்லை என்று விளக்கம் சொல்கிறார் அவர்.

அடுத்தது என்னஎன உங்களை என்ன யோசிக்க வைக்கும். அப்படி ஒரு இக்கட்டில் நிற்கிறார்கள் பணியாளர்கள்.

இது எல்லா நிறுவனங்களிலும நடக்கலாம். புதிய புதிய தொழில்நுட்பங்கள் புகுத்தப்படும் ஒவ்வொரு முறையும் பழைய தொழில்நுட்ப பணியாளர்களுக்கான வேலை இழப்பு அதிகரித்துக் கொண்டுதான் இருக்கின்றது.

இதற்கு பின்னால் நிறுவனத்தின் செலவுகளைக் கட்டுப்படுத்துவது, இலாபத்தை உறுதிப்படுத்துவது, அல்லது புதிய உத்திகள், தொழில்நுட்பம் என பல காரணங்கள் இருபபதை புரிந்து கொள்ள முடியும். அதே நேரத்தில் இது வழக்கமாக நடக்கும் ஒன்றுதான் என நிறுவனங்களும் கூறிவிடுகின்றன.

பணி பாதுகாப்பு, தொழிலாளர் நலச் சட்டங்கள், தவிர்க்க முடியாத தொழில்நுட்ப வளர்ச்சி என்கிற எல்லாவற்றையும் தாண்டி இந்த சூழலை எப்படி எதிர்கொள்வது என்பதை முன்னறிந்து கொள்ள வேண்டியதும் அவசியமாகிறது.

பொருத்தல் பகுதிகளில் வேலை பார்த்த பணியாளர்கள் வேலை இழந்தால் அவர்களுக்கு வேறு வேலை வாய்ப்புகள் மிக அரிதானது. அதே தொழில்நுட்பத் தில் இயங்கும் வேறு நிறுவனம் என்றால் பணிவாய்ப்புக்கு முயற் சிக்கலாம். இருந்தாலும் ஒருநிறுவனத்தில் வேலை இழந்த அத்தனைபேருக்கும் வேலை கொடுக்க முடியுமா என்பதை யோசிக்க வேண்டும்.

புதிய ஒரு தொழில்நுட்பத்தையோ, பணி அனுபவத்தையோ கற்றுக் கொள்ள வாய்ப்பில்லாத இந்த பணியாளர்களுக்கு மாற்று வாய்ப்புதான் என்ன? வேலை வாய்ப்பு போட்டியை சமாளிக்கும் அளவுக்கு தகுதிகளோ, திறமைகளோ இருந்தால் தப்பித்துக் கொள்ளலாம்.

ஆனால் 20 வயதில் பணிக்கு சேர்ந்து 30 வயதில் வேலை இழககும் ஒருவருக்கு தனது தனித்திறமையை அதிகரித்துக் கொள்ளும் வாய்ப்புகள் மிகக் குறைவு தான். தொழில்நுட்ப பணியாளர் களும், தொழில்நுட்பத்தில் பின் தங்கியவர்களும் திரும்பவும் வேலைவாய்ப்பு போட்டியில் பங்கெடுக்க வேண்டும்...

இதுபோன்ற நிலைமைகளில் தான் எல்லாவிதமான நடைமுறைகளையும் தாண்டி வேலை இழப்பால் பாதிக்கப்படுபவர்களுக்கான மாற்றுத் தீர்வுகள் குறித்தும் யோசிக்க வேண்டியிருக்கிறது. இது குறித்து இவர்களுக்கான மாற்று வாய்ப்புகள் என்ன? இவர்களை மாற்றும் வாய்ப்புகள் என்ன என் பவற்றைக் மனித வள துறையைச் சேர்ந்த நிபுணர்களிடம் ஆலோசனைகள் கேட்டோம்.

இது தனிப்பட்ட பணியாளர்கள் சார்ந்த பிரச்சினை அல்ல. வளரும் பொருளாதாரத்தில் தவிர்க்க முடியாது. அதே சமயத்தில் தொழிலாளர்களுக்கான பணி பாதுகாப்பு சார்ந்த நடைமுறைகள் என்பது சட்ட ரீதியான விவகாரங்கள். ஆனால் இப்படியான இரு சூழ் நிலையை பணியாளர்கள் எதிர் கொண்டால் அதை சமாளித்துக் கொள்வது எப்படி என்பதில் தெளிவு இருக்க வேண்டும். இது முழுக்க முழுக்க நமது திட்டமிடுதல், கற்றுக்கொள்ளுதல், திறனை வெளிப்படுத்துதல் சார்ந்த விடயம்

இப்படி பணி இழப்பவர்கள் புதிய வேலையை தேடி போக வேண்டும்தான்... ஆனால் வேலை வாய்ப்பு போட்டி கடந்த காலங்களைவிட அதிகரித்துள்ளதே.. அதை எப்படி சமாளிப்பது அல்லது வருமானத்தை உத்திரவாதப் படுத்த என்ன செய்வது என்கிற கேள்விகளோடு இதை அணுக வேண்டும் என்கின்றனர்.

எனவே இது போன்ற நேரங்களில் பணியாளர்களுக்கான மாற்றுத் தீர்வு என்ன என்பதை பார்க்கலாம்

**திட்டமிடுதல்**

திறன் பணியாளரோ அல்லது திறன் குறைவான பணியாளரோ இருதரப்புமே இந்த சூழ்நிலையை எதிர்கொள்ள வேண்டுமெனில் அடுத்து என்ன செய்வது என்பதை திட்டமிட வேண்டும். எந்த திட்டமுமில்லாமல் மாற்று வேலை தேடினால் பயனில்லை. வளரும் தொழில்நுட்பம், பணிபாதுகாப்பு, நிறுவனத்தின் நம்பகம் போன்ற இவற்றைக் கொண்டு மாற்று பணி தேடலாம். அல்லது சுய தொழில்களுக்கான முயற்சிகளில் இறங்கலாம்.

**திறன் வளர்ப்பு**

வேலை இழக்கும் பணியாளர்களில் தொழில் அனுபவம் மற்றும் தகுதி கொண்டவர்களுக்கு எளிதாக மாற்று வேலை தேடிக் கொள்ள முடியும் என்கின்றனர் மனித வளத்துறையினர். குறிப்பிடத்தக்க தொழில் திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

**சமூக வலைதளங்கள்**

வழக்கமான நமது வேலை தேடும் முறைகளிலிருந்து மாற்றி சிந்திக்க வேண்டும். தற்போதைய நவீன தொழில்நுட்ப உலகில் சமூக வலைதளங்களில் பங்களிப்பும் முக்கியமாக இருக்கிறது. வேலை வாய்ப்புகளை குறிப்பிடும் பல பத்திரிகை மூலமும் தேடுங்கள். தவிர ஒவ்வொரு நிறுவனங்களின் பணியாளர்கள் தேவை குறித்து அதில் குறிப்பிட்டு இருப்பார்கள். அதை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

**தொடர்புகள் மூலம**

புதிய நபர்களை வெளியிலிருந்து எடுத்துக் கொள்ளும் பல நிறுவனங்கள் தங்களது பணியாளர்கள் வழி புதியவர்களை வேலைக்கு எடுப்பதும் அதிகரித்துள்ளது. எனவே உங்களது நண்பர்கள் வழி தொடர்பில் இருங்கள்.

**பயிற்சிகள்**

புதிய தொழில்நுட்பங்கள் மாறிக் கொண்டிருக்கும் ஒவ்வொரு முறையும் எந்த தொழிலாக இருந்தாலும் தங்களையும் அந்த புதிய தொழில்நுட்பத்துக்கு பொருத்திக் கொள்ள வேண்டும். கணினி பயிற்சி தேவையாக இருக்கிறது என்றால், அதற்கு உடன்பட வேண்டும் திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

**சொந்த தொழில் முயற்சிகள்**

திடீரென பணியிழப்பில் சோர்ந்து போகாமல் குறுகிய கால பயிற்சிகள் மூலம் சொந்த தொழில் வாய்ப்புகளையும் யோசிக்கலாம். சேவைத்துறை மற்றும் அச்சகத்துறை சார்ந்த துறைகளில் எப்போதுமே வாய்ப்புகள் உள்ளது.

**சரியானதை தேடுதல்**

வேலை இழந்தாலும் மாற்று தீர்வுகள் இருக்கத்தான் செய்கிறது. புதிய புதிய நிறுவனங்கள் புதிய தொழில் வாய்ப்புகள் உருவாகிக்கொண்டே இருக்கும். சரியானதை தேடி போக வேண்டும்.

**சேமிப்பும் செலவும்**

வேலை இழந்ததும் மாற்று வாய்ப்புகளுக்காக யோசிக்கும் அதே நேரத்தில் செலவுகளை திட்டமிட்டு செலவு செய்வதும், முதலீடும் செய்வது முக்கியமானது.

இனிவரும் காலங்கள் சிறப்பாக இருக்க திட்டமிடுங்கள், வாழ்க்கை பயணத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

# ஏன் தேவை பங்குச் சந்தை முதலீடு?

சேமிப்புக்கும் முதலீட்டுக்கும் வித்தியாசம் இருக்கிறது. சேமிப்பு என்பது பணத்தை செலவு செய்யாமல் வங்கியில் வைத்திருப் பது. முதலீடு என்பது நமக்கு வருமானத்தை கொடுக்க கூடியது. இந்த வித் தியாசம் தெரியாமல் பலர் இருக்கிறார்கள். இந்த வித்தியாசம் தெரிந்தவர்கள்கூட சரியான விகிதத்தில் பிரித்துக் கொள்வதில்லை.

**ஏன் முதலீடு?**

சில முன்னிணி பங்குகள் வெளியான போது சில ஆயிரம் ரூபாய்களுக்கு அந்த பங்குகளை வாங்கி இருந்தீர்கள் என்றால், போனஸ்பங்கு பிரிப்பு உள்ளிட்டவற்றை சேர்க்கும் போது இப்போது அதன் மதிப்பு பல லட்சமாகி இருக்கும் என்று பங்குச் சந்தையில் பலர் சொல்லக் கேட்டிருப்பீர்கள். அதே போல மொத்த முதலீடும் காணாமல் போன கதையும் கேள்விபட்டிருப்பீர்கள்.

இப்போது முதலீடு செய்யலாமா வேண்டாமா என்று கேட்டால், முதலீடு செய்யலாம் ஆனால் சில விதி முறைகளுடன் சந்தையில் பயணிக்க வேண்டும். தவிர நீண்டகால அடிப்படை யில் பார்க்கும் போது பண வீக்கத்தை தாண்டிய வருமானம் பங்குச் சந்தை சார்ந்த முதலீடுகளில் கிடைக்கிறது.

**பிரித்து முதலீடு செய்க!**

பங்குச் சந்தை முதலீடு தேவை தான். ஆனால் அதற்காக முதலீடு செய்யத் திட்டமிட்டிருக்கும் அத்தனை தொகையையும் பங்குச்சந்தையில் முதலீடு செய்யக்கூடாது. உங்கள் வயது மற்றும் ரிஸ்க் எடுக்கும் திறனுக்கு ஏற்ப பங்குச்சந்தையில் முதலீடு செய்ய வேண்டும். உதாரணமாக உங்களுக்கு 30 வயதாகிறது. ரூ.1000 முதலீடு செய்ய திட்டமிட்டிருக்கிறீர்கள் என்று வைத்துக் கொண்டால் (1000-300) 700 ரூபாயை பங்குச் சந்தையில் முதலீடு செய்யலாம். இது பொதுவான விதி. ஒவ்வொருவரின் ரிஸ்க் எடுக்கும் திறனுக்கு ஏற்ப இதனை மாற்றிக் கொள்ளலாம். அதேபோல 700 ரூபாய் முத லீடு செய்ய முடிவு செய்துவிட்டாலும் ஒரே சமயத்தில் அனைத்து முத லீடுகளையும் செய்ய வேண்டாம். 700 ரூபாயை நான்காக பிரித்து நேரம் வரும் போது முதலீடு செய்ய வேண்டும்.

**முதலீடா, வர்த்தகமா?**

அடுத்த கட்டத்துக்கு செல்லும் முன்பு, முதலீட்டுக்கும் வர்த்தகத்துக்கும் இடையே வித்தியாசத்தை தெரிந்து கொள்வது. சில முதலீட்டாளர்கள் நல்ல பங்குகளாக தேர்ந்தெடுத்து முதலீடு செய்துவிடுவார்கள். சில காலத்துக்கு / வருடத்துக்கு பிறகு அவர்கள் விற்றுவிடுவார்கள். இது முதலீடு. ஆனால் சிலர் காலையில் வாங்கி மதியம் விற்பது, மாலை விற்பது போன்றவற்றில் ஈடுபடுவார்கள் இதற்கு பெயர் வர்த்தகம். இது ரிஸ்க் மிகுந்தது. நீங்கள் காலையில் வாங்கிவிடுவீர்கள். ஆனால் அந்த பங்கு தொடர்ந்து சரிய ஆரம்பிக்கும். இன்னும் சில நாளைக்கு பிறகு லாபத்துடன் விற்கலாம் என்று முடிவெடுப்பீர்கள். ஆனால் அந்த பங்கு நீங்கள் வாங்கிய விலைக்கு மீண்டும் வரவே வராது. புதிதாக சந்தை யில் நுழைபவர்கள் இதில் இருந்து கொஞ்சம் விலகியே இருக்கலாம்.

**போர்ட்போலியோ!**

பங்குச்சந்தையில் முதலீடு செய்யும் போது, மொத்த முதலீட்டையும் ஒரே சமயத் தில் முதலீடு செய்யக்கூடாதோ அதேபோல, மொத்த முதலீட்டையும், ஒரே பங்கு அல்லது ஒரு துறை சார்ந்த பங்குகளில் முதலீடு செய்யக் கூடாது. ஒரு துறையில் ஏதாவது அசம்பாவிதம் நடக்கும்போது, அந்த துறை சார்ந்த பங்குகள் அனைத்திலும் சரிவு ஏற்படும். அப்போது உங்களது முதலீடு அதி களவு சரிய வாய்ப்பு இருக்கிறது. அதனால் வங்கி, சுற்றுலா என்று துறைவாரியாக பிரித்து முதலீடு செய்து ஒரு போர்ட் போலியோவை உருவாக்க வேண்டும்.

**தள்ளி நின்று கவனிக்க**

பங்குச்சந்தை களேபரங்க ளில் இருந்து தள்ளி நின்று உங்கள் முதலீடுகளை செய்யுங்கள். எப்போது பங்குச் சந்தையில் உற் சாகம் மிகுதியாக இருக்கிறதோ அப்போது விற்று விடவேண்டும். எப்போது பங்குச் சந்தையில் பயம் அதிகமாக இருக்கிறதோ அப்போது முதலீடு செய்ய வேண்டும். இது முதலீட்டு ஆலோசகர் வாரன் பபெட் கூறிய முதலீட்டு தத்துவம்.

**கடன் வாங்கி முதலீடு வேண்டாம்**

பங்குச்சந்தையில் முதலீடு நீண்ட கால முதலீட்டாளர்களுக்கு நல்ல இலாபம் கொடுத்திருக்கிறது என்றாலும், கடன் வாங்கி முதலீடு செய்வது ஆபத்தானது. உங்களிடம் இருக்கும் உபரி பணமாக இருந்தால் யாருக்கும் பதில் சொல்லத்தேவை இல்லை.

**மறு ஆய்வு**

தங்கம் இன்று எவ்வளவு வர்த்தகம் ஆகிறது. வீட்டின் சதுரடி மதிப்பு இன்று எவ்வளவு என்ப தை யாரும் பார்ப்பதில்லை. ஆனால் முதலீடு செய்த பங்குகள் மட்டும் இன்று எவ்வளவு உயர்ந் திருக்கிறது என்பதை பார்க்கத் தவறுவதில்லை. முதலீடு செய்த பங்குகளின் மதிப்பை தினமும் பார்ப்பது எப்படி தவறோ அதே போல பார்க்காமல் விட்டுவிடு வதும் தவறு. பங்குகளின் விலையை பற்றி கவலைப்படுவதை விட்டுவிட்டு முதலீடு செய்தி ருந்த பங்குகளை பற்றி என்ன செய்திகள் வருகின்றன என்பதில் கவனம் செலுத்த லாம். செய்திகள் சரியாக இல்லை என்றால் அவற்றை விற்பதை பற்றி பரிசீலனை செய்யலாம்.

**எதில் முதலீடு?**

நீங்கள் முதலீடு செய்யப்போவது பங்குகளில் அல்ல, தொழிலில் முதலீடு செய்கிறீர்கள் என்பதை உணருங்கள், அதே போல உங்களுக்கு தெரியாத தொழிலில் முதலீடு செய்யாதீர்கள் என்ற வாரன் பபெட்டின் ஆலோசனையை நினைவில் கொள்க.




## வெற்றிமொழி– நெப்போலியன் ஹில்

1883-ஆம் ஆண்டு பிறந்த நெப்போலியன் ஹில் அமெரிக்காவைச் சேர்ந்த எழுத்தாளர். 1908-ஆம் ஆண்டு புகழ்பெற்ற தொழிலதிபர் அண்ட்ரூ கார்னெகியை சந்தித்ததே நெப்போலியன் ஹில்லின் வாழ்க்கையில் திருப்புமுனையாக அமைந்தது. ஹில்லின் "திங்க் அண்ட் க்ரோ ரிச்" என்னும் புத்தகம் மிகவும் பிரபலமாக விற்பனையான புத்தகங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

மனம் எதை நம்பிக்கையுடன் திட்டமிடுகிறதோ அதை அடைந்தே தீரும்.

உங்களால் பெரிய விஷயங்களைச் செய்யமுடியவில்லை என்றால், சிறிய விடயங்களைச் சிறந்த வழியில் செய்து பாருங்கள்.

எப்போது உங்கள் ஆசைகள் போதுமான வலுவுடன் இருகின்றதோ, அப்போது அதனை அடைவதற்கான அதிகபட்ச சக்தி உங்களுக்குக் கிடைக்கிறது.

எதற்காகவும் காத்திருக்க வேண்டாம், இந்த நிமிடமே சரியான நேரம்.

விருப்பமே, அனைத்து வெற்றிகளுக்குமான முதல் படியாகும்.

உங்களுக்கான மிகப்பெரிய வாய்ப்பானது, நீங்கள் இப்பொழுது எங்கிருக்கீறீர்களோ அங்கேயேகூட இருக்கலாம்.

போராட்ட குணத்தைக் கைவிட மறுப்பவர்களுக்கு வெற்றி சாத்தியமே.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,268.61 | 6,216.56 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,521.67 | 3,482.21 ⇩ |

**விலை அசைவுகளின் அடிப்படையில்** புரள்வு (ரூபா.மில்.) 1,464.261

***உயர்வடைந்த பங்குகள்(ரூ.):*** செங்கடகல (90.00), ரன்கிறின்(59.90), ரீசஸ் எனர்ஜி(22.30), ஒன்லே(55.00), முல்லர்ஸ்(1.20),

***சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):*** பீப்பிள்ஸ் மேர்ச்(16.20), கபுஹேஸ்ரன்(16.00), பிடிஎல்(71.90), எஸ்எம்பி லீசிங்(0.60), டேடன்ஸ்(69.30)

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 147.84 | 151.66 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 181.02 | 187.28 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 154.93 | 160.92 |
| சுவிஸ் பிராங் | 144.12 | 149.92 |
| கனேடிய டொலர் | 109.05 | 113.41 |
| அவுஸ்திரேலிய டொலர் | 106.07 | 110.92 |
| சிங்கப்பூர் டொலர் | 101.95 | 105.74 |
| ஜப்பான் யென் | 1.26 | 1.31 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.20 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 40.78 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# முன்மொழியப்பட்டுள்ள அரசியலமைப்பு நாட்டைத்துண்டாடும் ஆவணம் இல்லை

## ஜனாதிபதி மைத்திரி உறுதியளிப்பு

(கொழும்பு)

**முன்மொழியப்பட்டுள்ள புதிய அரசியலமைப்பு வரைபில் நாட்டுக்கு தீமையான எந்தவொரு அம்சமும் உள்ளடக்கப்படவில்லை என தெரிவித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அது எந்தவகையிலும் நாட்டைத் துண்டாடும் ஆவணம் அல்ல என அஸ்கிரிய மகாநாயக்க தேரர் முன் நிலையில் உறுதியளித்தார்.**

முன்மொழியப்பட்டுள்ள புதிய அரசியலமைப்புக்கு எதிராக சிலர் எத்தகைய கருத்துக்களை முன்வைத்த போதும் அதில் நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு அல்லது புத்த சாசனத்திற்கு பாதிப்பான எந்தவொரு அம்சமும் கிடையாது என்பதுடன், அத்தகையதொரு நடவடிக்கைக்கு தனது பதவிக்காலத்தில் இடமளிக்கப்படமாட்டாது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

புத்தாண்டை முன்னிட்டு வரலாற்று முக்கியத்துவம் மிக்க கண்டி தலதா மாளிகைக்கு நேற்று முன்தினம் பிற்பகல் விஜயம் செய்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அஸ்கிரி மகாநாயக்க தேரர் சங்கைக்குரிய வரகாகொட ஸ்ரீஞானரத்ன தேரரைச் சந்தித்து அவரது சுக துக்கங்களைக் கேட்டறிந்தார். இந்த சந்திப்பின்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மகா சங்கத்தினரின் ஆசிர்வாதமின்றி புதிய அரசியலமைப்பை வரைவதற்கு தாம் தயாராக இல்லை எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, புதிய அரசியலமைப்பு ஒரு போதும் தனிப்பட்ட கருத்தின் அடிப்படையில் தயாரிக்கப்படும் ஒரு ஆவணமாக வன்றி மக்கள் பிரதிநிதிகள், கல்விமான்கள் மற்றும் பொது மக்களின் கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளைக் கருத்திற் கொண்டே தயாரிக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

புதிய அரசியலமைப்பைத தயாரிக்கும் போது மக்களின் கருத்துக்களை கேட்டறிய அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் தொடர்பில் மக்கள் சரியான முறையில் அறிந்திருக்கவில்லை என இதன்போது மகாநாயக்க தேரர் ஜனாதிபதியிடம் தெரிவித்ததுடன், புதிய அரசியலமைப்பு தொடர்பாக பொது மக்களின் கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளை முன்வைப்பதற்கு மீண்டும் சந்தர்ப்பத்தை பெற்றுக் கொடுப்பதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

மழைவேண்டி நாடளாவிய ரீதியில் பிரித் பாராயணம் செய்வது தொடர்பாக இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், இதன் மூலம் உரிய காலத்தில் மழை கிடைக்கப்பெற்று வரட்சி நிலை நீங்குவதற்கு வாய்ப்புள்ளது என்றும் மகாநாயக்க தேரர் தெரிவித்தார்.

புத்தாண்டை முன்னிட்டு பிரித் பாராயணம் செய்து மகாநாயக்க தேரர் ஜனாதிபதிக்கு ஆசிர்வாதம் வழங்கினார்.

அதன் பின்னர் மல்வத்தை விகாரைக்கு விஜயம்செய்த ஜனாதிபதி, மல்வத்தை பீடத்தின் மகாநாயக்க தேரர் சங்கைக்குரிய திப்படுவாவே ஸ்ரீ சுமங்கள தேரரை சந்தித்து ஆசிர்வாதங்களைப் பெற்றுக்கொண்டார்.

நாட்டை வறுமையிலிருந்து விடுவித்து அனைத்து மக்களையும் பொருளாதார ரீதியாக பலப்படுத்துவதற்கு 2017 ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்படவுள்ள நிகழ்ச்சித்திட்டம் குறித்து ஜனாதிபதி மல்வத்தை மகாநாயக்க தேரருக்கு விளக்கியதுடன், கடந்த இரண்டு வருட காலமாக தற்போதைய அரசாங்கம் பின்பற்றிவந்த நட்பு ரீதியான வெளிநாட்டுக் கொள்கையின் மூலம் பல்வேறு உலக நாடுகளின் உதவிகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் கூறினார்.

எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய மின்சக்தி பிரச்சினை தொடர்பாக மகாநாயக்க தேரர் ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டுவந்ததுடன், இதற்கான தீர்வுகளைக் கண்டடைவதற்காக ஏனைய நாடுகளைப்போல இலங்கையும் தயாராகவுள்ளதாகவும் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நாட்டின் சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்தை உறுதிப்படுத்தி நாட்டுக்குத் தேவையான பல்வேறு சமூக மற்றும் அரசியல் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு கடந்த இரண்டு வருட காலமாக ஜனாதிபதியின் தலைமையில் நல்லாட்சி அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவந்த போதும் அது தொடர்பாக மக்களுக்கு சரியாக தெளிவுபடுத்தப்படாத காரணத்தினால் பிரச்சினைகள் எழுவதாகக் குறிப்பிட்ட மகாநாயக்க தேரர், அரசாங்கம் கடந்த இரண்டு வருடங்களாக மேற்கொண்ட நிகழ்ச்சித்திட்டங்கள் குறித்து மக்களுக்கு விளக்குவதற்கான ஒரு நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டினார். (இ-3)

# நாட்டை விரைவாக அபிவிருத்தி செய்து சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவோம்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

அமரபுர நிகாயவின் சங்கைக்குரிய தேரர் தவுல்தென ஞானிஸ்ஸர மகாநாயக்க தேரரின் 102 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

சங்கைக்குரிய தேரரின் நுகேகொட பாகொட ஸ்ரீவித்யா விஜயராம விகாரைக்கு நேற்று முன்தினம் முற்பகல் விஜயம் செய்த ஜனாதிபதி, தேரரைச் சந்தித்து அவரது சுகதுக்கங்களைக் கேட்டறிந்ததுடன், அவரது நீண்ட ஆயுளுக்காகவும் பிரார்த்தித்தார்.

எண்வகைப் பூஜைப் பொருட்களையும் ஒரு நினைவுச் சின்னத்தையும் ஜனாதிபதி தேரருக்கு வழங்கி வைத்தார்.

விகாரையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள இரண்டு மாடி சங்க வாசஸ்தலத்தை மகாசங்கத்தினரிடம் கையளிக்கும் நிகழ்வும் இதன்போது இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனாதிபதி, சங்கைக்குரிய தவுல்தென ஞானிஸ்ஸர மகாநாயக்க தேரர் சாசனத்திற்கும் சமூகத்திற்கும் செய்துள்ள பணிகளைப் பாராட்டியதுடன், இளம் பிக்குகளுக்கு அவர் ஒரு சிறந்த முன்மாதிரி என்றும் குறிப்பிட்டார்.

நாட்டின் உள்ளகப் பிரச்சினைகளின் போதும் வெளிநாட்டு ஆக்கிரமிப்புகளின் போதும் அரச தலைவர்களுக்கு மகாசங்கத்தினர் பக்கபலமாக இருந்தமையை நினைவு கூர்ந்த ஜனாதிபதி, நாட்டை அபிவிருத்தி செய்து சிறந்த எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதற்கு அவர்கள் வழங்கி வரும் அர்ப்பணிப்புக்கும் மனிதனது ஆன்மீக முன்னேற்றத்திற்கான மகாசங்கத்தினரின் வழிகாட்டல்களுக்கும் ஜனாதிபதி நன்றி தெரிவித்தார்.

நுகேகொட பாகொட ஸ்ரீ வித்யா விஜயராம விகாரையின் தலைமைத் தேரர் உள்ளிட்ட மகா சங்கத்தினரும் அமைச்சர்களான விஜயதாஸ ராஜபக்ஷ, பாட்டலி சம்பிக்க ரணவக்க, ராஜித சேனாரட்ன, தென்மாகாண ஆளுநர் ஹேமகுமார நாணயக்கார ஆகியோரும் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர். (இ-3)

# எட்கா உடன்படிக்கை தொடர்பான மூன்றாம் கட்டப்பேச்சு கொழும்பில்

(கொழும்பு)

எட்கா எனப்படும் பொருளாதார தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்பாடு தொடர்பாக, இந்தியா, இலங்கை இடையிலான மூன்றாவது கட்டப் பேச்சு எதிர்வரும் ஜனவரி 4ஆம், 5ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எட்கா உடன்பாடு குறித்து இந்திய- இலங்கை இருதரப்பு களுக்கு இடையில் முதலாவது கட்டப் பேச்சு கடந்த ஓகஸ்ட் மாதம் கொழும்பில் நடைபெற்றது.

இதையடுத்து, டில்லியில் இரண்டாவது கட்டப் பேச்சு செப்டெம்பர் மாதம் நடந்தது.

இந்தப் பேச்சுக்களில் இந்தியாவின் மத்திய வர்த்தக, கைத்தொழில் இணைய மைச்சர் நிர்மலா சீத்தாராமன் பங்கேற்றிருந்தார்.

இந்த நிலையிலேயே மூன்றாவது கட்டப் பேச்சு மீண்டும் கொழும்பில் ஜனவரி 4ஆம், 5ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவுடனான எட்கா உடன்பாட்டை, 2016 டிசம்பர் மாதத்துக்குள் கையெழுத்திடுவதற்கு இலங்கை அரசாங்கம் திட்டமிட்டிருந்தது.

எனினும் இந்தியத் தரப்பு இந்த உடன்பாட்டை செய்து கொள்வதில் அவசரம்காட்டவில்லை. 2017 மே மாதத்துக்குள் எட்கா உடன்பாட்டைச் செய்து கொள்ளும் திட்டத்திலேயே இந்தியா இருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

# ஆப்கானுக்கான தூதுவராகிறார் முன்னாள் விமானப்படைத் தளபதி

ஆப்கானிஸ்தானுக்கான இலங்கை தூதுவராக இலங்கை விமானப்படையின் முன்னாள் தளபதி எயார் சீவ் மார்ஷல் ககன் புலத்சிங்கள நியமிக்கப்படவுள்ளார்.

அண்மையில் இலங்கை விமானப்படைத் தளபதி பதவியில் இருந்து ஓய்வு பெற்ற எயார் சீவ் மார்ஷல் ககன் புலத்சிங்களவை ஆப்கானிஸ்தானுக்கான தூதுவராக நியமிப்பதற்கு இலங்கை அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

அவரது பெயர் இந்தப் பதவிக்கு முன்மொழியப்பட்டுள்ள நிலையில், உயர்நிலைப் பதவிகளுக்கான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் முன்பாக இவர் முன்னிலையாவார்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழு இவரை இந்தப் பதவிக்குப் பொருத்தமானவர் என்று ஏற்றுக்கொள்ளும் நிலையில், ஆப்கானிஸ்தானுக்கான தூதுவராக எயார் சீவ் மார்ஷல் ககன் புலத்சிங்கள நியமிக்கப்படுவார். (இ-3)



# பிரியங்கர ஜயரத்னவின் இராஜினாமாவை ஏற்க மறுத்த ஜனாதிபதி

இராஜாங்க அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன தனது பதவியை இராஜினாமா செய்யும் கடிதத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அனுப்பியுள்ளார்.

எனினும் ஜனாதிபதி அவரது இராஜினாமா கடிதத்தை ஏற்க மறுத்துள்ளதாக கூறப்படுகிறது. நேற்று முன்தினம் நண்பகல் சுமார் ஒரு மணியளவில் ஜனாதிபதிக்கும் இராஜாங்க அமைச்சருக்கும் இடையில் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

இதேவேளை பிரியங்கர ஜயரத்ன இராஜாங்க அமைச்சர் பதவியை இராஜினாமா செய்து விட்டு கூட்டு எதிர்க்கட்சியில் இணையவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (இ-3)

நம்பிக்கையான கனவுகளில் இருந்துதான் பொறுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
- யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சிறுவர் வைத்தியசாலையை மண்டைதீவில் அமையுங்கள்

வட மாகாணத்திற்கான சிறுவர் வைத்திய சாலை ஒன்றை அமைப்பதற்கு அரசாங்கம ஆயிரம் மில்லியன் ரூபாயை ஒதுக்கியுள்ள தாகவும், எனவே, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அண்மையாக 1 – 5 ஏக்கர் நிலம் தேவை எனவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி அறிவித்துள்ளார்.

குறித்த காணி இனங்காணப்பட்டு சிறுவர் வைத்தியசாலை அமைப்பதற்கான பூர்வாங்கப் பணிகள் ஆரம்பிக்கப்படாதவிடத்து 1-000 மில்லியன் ரூபாயும் திரும்பி விடும் என்ற தகவலும் முன்வைக்கப்பட்டுள்ளது.

சிறுவர்களுக்கென தனியான வைத்திய சாலை யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைப்பது மிகப் பெரும் வரப்பிரசாதம்.

எனவே, கிடைத்த நிதியைப் பயன்படுத்தி வட மாகாணத்து மக்கள் நன்மை பெறும் வகையில் சிறுவர் வைத்தியசாலையை அமைப்பது கட்டாய மானதாகும்.

அதேவேளை சிறுவர் வைத்தியசாலையை அமைக்கும் போது யாழ்பபாண நகர மயமாக்கலின் திட்டமிடல் பற்றிக் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

பொதுவில் வடமாகாணத்தில் நகர மயமாக்கம் உள்ளிட்ட பல விடயங்கள் திட்டமிடப்படாத முறையில் மேற்கொள்ளப்படுவதால், எதையும் ஒரு கட்டமைப்பிற்குள் வைத்திருக்க முடியவில்லை.

இதற்கு திருநெல்வேலி நகரத்தை நல்ல உதாரணமாக குறிப்பிடமுடியும்.

யாழ்ப்பாணத்திற்கு ஒரு உப தலை நகரம் தேவை என்றால் அது திருநெல்வேலியாகவே இருக்கமுடியும்.

எனினும் திருநெல்வேலியின் மத்திய பகுதி நகரமயமாக்கலுக்கு உட்பட முடியாதவாறு ஆக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலியில் அமைந்துள்ள சந்தைக் கட்டிடம் அதன் விஸ்தீரினம் வாகனத் தரிப்பிடங்கள் என்பன திருநெல்வேலி என்ற ஊரையே உபாதைப்படுத்தி வருகிறது.

எனவே நகரமயமாக்கம், கட்டிட வாக்கம் என்பன தொடர்பில் கவனம் செலுத்துவது அவசியமாகும். அவ்வாறான ஒரு பார்வையில், வடமாகாணத்திற்கானசிறுவர் வைத்திய சாலையை யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கு மிக அண்மையாக அமைப்பது சாத்தியமற்றதென்பதுடன். அதற்கான காணியைப் பெற்றுக்கொள்வதும் முடியாத காரியமாகவே இருக்கும் எனவே யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலைக்கு அண்மையில் சிறுவர் வைத்தியசாலையை அமைத்தல்என்பதற்கு மாற்றீடாக யாழ்நகரத்திற்கு 6 கிலோமீற்றர் தூரத்தில் இருக்கின்ற மண்டைதீவில் சிறுவர் வைத்தியசாலையை அமைப்பது பொருத்தமுடையதாக இருக்கும்.

இவ்வாறு மண்டைதீவில் சிறுவர் வைத்திய சாலையை அமைப்பதன் மூலம் யாழ் நகரத்தில் ஏற்படக் கூடிய சன நெருக்கடி தவிர்க்கப்படும்.

ஒரு தனியான – விசாலமான – சுவாத்தியமான – பசுமையான இடத்தில் சிறுவர் வைத்தியசாலை அமையப்பெறும்.

இதனூடாக சிறுவர்களின் உளநலமேம்பாட்டிற்கான கவின் நிலை இயல்பாகயவே வைத்தியசாலை வளாகத்திலேயே கிடைக்கப்படும்.

மண்டைதீவில் சிறுவர் வைத்தியசாலையை அமைப்பதனூடாக அப்பகுதியில் வர்த்தக முயற்சிகள் அதனூடான தொழில் வாய்ப்புக்கள் ஏற்படும் என்பதுடன் தீவுப் பகுதிநோக்கிய குடியமர்வுகளும் சாத்தியமாகும்.

எனவே, மண்டைதீவில் இலங்கை வானொலியின் உப அலுவலகம் அமைந்திருந்த – இயற்கையான காற்றும் ஆரோக்கியமான சூழலும் கொண்ட மண்டைதீவு மண்ணில் சிறுவர் வைத்திய சாலையை அமைப்பது பொருத்துடையது. ஆகையால் இது பற்றிக் சிந்திப்பது நன்மை தரும்.

# அரச வைத்தியசாலை நோயாளர்கள் தனியார் சேவையை நாடுவதற்கு தடை

(கொழும்பு)

அரசாங்க வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படும் நோயாளர்களுக்கு தனியார் வைத்தியசாலைகளில் இரத்தப் பரிசோதனை செய்வது நேற்று முதல் தடை செய்யப்பட்டுள்ளது.

அமைச்சர் ராஜித சேனாரத்னவால் இந்த தடை விதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த 31ஆம் திகதி யளவில் அரசாங்கத்தினால் சகல பரிசோதனை கூட வசதிகளும் உள்ள வைத்தியசாலைகளுக்கு இரத்த பரிசோதனை செய்யும் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

அரசாங்கத்திலுள்ள வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படும் நோயாளர்களின் இரத்தப் பரிசோதனைகளை தனியார் பிரிவினரால் மேற்கொள்வதாக தெரியவந்தால், இன்று முதல் சம்பந்தப்பட்ட வைத்தியசாலை (அரச வைத்தியசாலை) பணிப்பாளருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும், சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் அனைத்து அரசாங்க வைத்தியசாலை பணிப்பாளர்களுக்கும் இது குறித்து விஷேட சுற்றறிக்கை ஒன்றை வெளியிடுமாறு சுகாதார அமைச்சின செயலாளர் அனுர ஜெயவிக்ரமவுக்கு, அமைச்சர் ராஜித சேனாரத்ன பணிப்புரை விடுத்துள்ளார். (இ-3)

# இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா கோமாளித்தனமாகப் பேசி வருகிறார்

## அமைச்சர் ரஞ்சித் தெரிவிப்பு

(கொழும்பு)

இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா கோமாளித்தனமாக பேசி வருவதாக அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சர் ரஞ்சித் மத்துமபண்டார தெரிவித்துள்ளார்.

மொனராகலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

தொடர்ந்தும் அவர் அங்கு கருத்து தெரிவிக்கையில்,

டிலான் பெரேரா கூறுவது போல் அரசாங்கத்தில் எந்த பிளவுகளும் இல்லை. அதேபோல் தற்போதைய தேசிய அரசாங்கத்தை எவராலும் கவிழ்க்க முடியாது.

அத்துடன் 2017 ஆம் ஆண்டு தேசிய அரசாங்கத்திற்கு சிறந்த ஆண்டாக அமையும். தேசிய அரசாங்கத்தில் 160 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

இதனால், எவராலும் அரசாங்கத்தை கவிழ்க்க முடியாது எனவும் அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சர் மத்தும பண்டார மேலும் தெரிவித்தார். (இ-3)

## நல்லாட்சியை விமர்சிக்கும் அமைச்சர்களுக்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்க வேண்டும்

நல்லாட்சி அரசாங்கத்தை விமர்சனம் செய்யும் அமைச்சர்களுக்கு ஜனாதிபதி உரிய ஆலோசனை வழங்க வேண்டும் என அமைச்சர் வசந்த அலு விஹாரே தெரிவித்துள்ளார்.

மாத்தளையில் நேற்று முன்தினம் நடை பெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள் ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகித்துக் கொண்டு அரசாங்கத்தை விமர்சனம் செய்யும் அமைச்சர்களுக்கு உரிய ஆலோசனை வழிகாட்டல்களை ஜனாதிபதியுமபிரதமரும்வழங்கவேண்டுமென கோருகின் றேன்.

இணக்கப்பாட்டு அரசாங்கமொன்றில் அங்கம் வகித்தால் அனைவரும் ஒரே கொள்கைகள் கோட்பாடுகளை பின்பற்ற வேண்டும். பேச்சுவார்த்தைகளின் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும்.

இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா அரசாங்கத்தை விமர்சனம் செய்து வருகின்றார்.

ஆளும் கட்சியில் அங்கம் வகித்துக் கொண்டே அரசாங்கத்தை விமர்சனம் செய்வது பயனற்றது.

ஜனாதிபதி பிரதமர் உள்ளிட்ட அரசாங்கம் ஓர் கொள்கையில் செயற்படும் போது அதனை சுதந்திரக் கட்சி விமர்சனம் செய்வது பொருத்தமற்றது என அவர் தெரிவித்தார்.

அரசாங்கத்தில் அங்கம் வகித்துக் கொண்டு அரசாங்கத்தை விமர்சனம் செய்வது பொருத்தமற்றது என அவர் தெரிவித்துள்ளார். (இ-3)

## மாற்றுத்திறனாளிகளுக்கு இலவச பயணம்

மாற்றுத் திறனாளிகள் தனது பேருந்தில் நேற்று தொடக்கம் இலவசமாக பயணம் மேற்கொள்ளலாம் என தனியார் பேருந்து உரிமையாளர் ஒருவர் தெரி வித்துள் ளார்.

பருத்தித்துறை - யாழ்.- கொழும்பு சேவையில் ஈடுபடும் லக்ஸ்மி ரவல்ஸ் இன் உரிமையாளரான ஆர். துறை ரஞ்சன் என்பவரே இதனைத் தெரிவித்தார்.

மேற்படி சேவையினை மேற்கொண்டு வரும் அவர் தனது பேருந்து சேவை ஆரம்பிக்கப்பட்டதன் ஐந்தாம் ஆண்டு நிறை வினை ஒட்டி இதிலிருந்து மாற்றுத் திறனாளிகள் தமது பேருந்து வண்டியில் இலவசமாக பயணம் மேற்கொள்ளலாம் என ஊடகங்கள் வாயிலாக அறிவித்துள்ளார். (செ-60)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### வாழ்க்கைத் தத்துவம்



வாழ்கையை விளங்கிக் கொண்டு, காரணத்தையும் உணர்ந்து கொண்டு நடத்தினால் அது வெள்ளத்தில் படகு விடுவதை ஒக்கும்.

ஷமாறாக அவ் விளக்கம் இல்லாமல் நடத்தினால் அது வெள்ளத்தில் அகப்பட்ட துரும்பின் நிலையேயாகும்.

வாழ்க்கையோ, இயற்கை, சமுதாயம், தான் என்ற மூன்றின் இணைப்பில் நடைபெறுகிறது. இவற்றில் சமுதாயம் என்ற தத்துவத்தை ஆராய்வதே நாம் இப்போது எடுத்துக் கொண்டுள்ள வாழ்க்கைத் தத்துவ ஆராய்ச்சியாகும்.

வாழ்க்கை வெற்றிமிக்கதாக அமைய வேண்டுமாயின், நாம் இயற்கையையும், சமுதாயத்தையும் உணர்ந்து, மதித்து வாழ வேண்டும். அதோடு எந்தக் காரியத்துக்காக இந்தப் பிறவியை எடுத்து வந்தோமோ, அந்த நோக்கத்திற்கு ஒத்ததாக அதாவது பிறவித் தொடரை முடித்துக் கொண்டு வீடுபேறு எய்த வேண்டும் என்ற அந்த உயரிய நோக்கத்திற்கு ஒத்ததாக வாழும்முறை அமைய வேண்டும். அப்போது தான் துன்பத்தைத் தோற்றுவித்துக் கொள்ளாமலும் வாழலாம்.

தவறுதலாக நாம் தோற்றுவித்துக் கொள்ளும் துன்பத்திலிருந்தும் மீண்டு கொள்ளலாம். பிறரால் தோன்றக்கூடிய துன்பங்களிலிருந்தும் நம்மை நாம் காத்துக் கொள்ளலாம்.

எனவே, வாழ்க்கையின் தத்துவத்தைப் பற்றிய தெளிவான விளக்கம் பெற்று அதன்படியே வாழ்ந்து வரவேண்டும்.

## சட்டவிரோதமாக தங்கம் கடத்திய இலங். பிரஜை இந்தியாவில் கைது

(கொழும்பு)

இலங்கையிலிருந்து சட்ட விரோதமான முறையில் 8.3 கிலோகிராம் எடையுடைய தங்கம் கடத்திய நபர் நேற்று அதிகாலை இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சென்னை வருவாய் புலனாய்வுத்துறை அதி காரிகளால் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போதே குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

முஜ்புர் ரஹ்மான் என்ற 31 வயதுடைய நபரே இந்த தங்க கடத்தலில் ஈடுபட்டுள்ளதாகவும், கடத்தப்பட்ட தங்கம் 2.44 கோடி மதிப்புடையது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் குறித்த நபர் கடத்தலுக்கு பயன்படுத்திய கார் உட்பட தங்கத்தையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இதேவேளை சம்பவம் தொடர்பில் சென்னை வருவாய் புலனாய்வுத்துறை அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## மின் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று திங்கட் கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை மணி வரை **வவுனியா பிரதேசத்தில்** கல் மடுவிலிருந்து சின்ன வலயன்கட்டு வரையுள்ள பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்குக

கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ். மாவட்ட ரீதியிலான கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

மேற்படி போட்டிக்கு விண்ணப்பிக்கும் விளையாட்டுக் கழகங்கள் எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு போட்டி ஏற்பாட்டுக் குழுவினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

போட்டிகள் யாவும் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும். அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகள் மின்னொளியில் இடம்பெறும்.

தொடர்பு:- சுலீசன் - 077 889 3330, ரதன் - 077 525 3580, ரமணன் - 077 617 7688, பிரகாஷ் - 077 618 3166. (க)

# வட மாகாண சபை உறுப்பினர் விந்தன் வி.கழகங்களுக்கு நிதி வழங்கினார்




வடமாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் நிதி ஒதுக்கீட்டின் மூலம் புங்குடுதீவு நசரேத் விளையாட்டுக்கழகத்திற்கு ரூபா 20 ஆயிரத்திற்கும் ஊர்காவற்றுறை புளியங்கூடல் மகாமாரி விளையாட்டுக்கழகத்திற்கு ரூபா 25 ஆயிரத்திற்கும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைத்தார்.

இந் நிகழ்வு வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் 30.12.2016 அன்று நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் விளையாட்டுத் திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர் ஆனந்தகுமாரும் கலந்து கொண்டார். (க)

# குமார் பொன்னம்பலம் ஞாபகார்த்த உதைபந்தாட்ட சுற்றுப்போட்டித் தொடர்

## பலாலி விண்மீன் வெற்றி





பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் திக்கமுனை மைதானத்தில் விலகல் முறையில் நடத்தும் "அமரர் மாமனிதர் குமார் பொன் னம்பலம்" ஞாபகார்த்த உதைபந் தாட்ட சுற்றுப்போட்டித் தொடரில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகிய போட்டியில் பலாலி விண்மீன் வி.கழக அணி, கரவெட்டி கரணவாய் வி. கழக "ஏ" அணியை எதிர்கொண்டது.

இரு அணிகளும் சமபலம் கொண்ட அணிகள் என்பதால் போட்டி விறுவிறுப்பாக ஆரம்பித்தது. அனல்பறக்கும் வேகத்தில் ஆரம்பக் கோலை அடிப்பதற்றாக அணிகள் இரண்டும் ஆக்கிரமிப்பு தாக்குதலைக் கையாண்டு கொண்டிருந்தனர்.

ஆனாலும் இரு அணிகளின் முன்கள வீரர்கள் எதிர் அணியின் தற்காப்பு வீரர்களை தகர்த்துகோல் போட பல தடவைகள் முயன்றும்



முடியாமல் போய்க் கொண்டிருந்தன.

பத்து நிமிடங்கள் பறந்து போயின. இருப்பினும் சுறுசுறுப்பும்வேகமும் அதிகரித்துக்கொண்டே இருந்தன. 12 ஆவது நிமிடத்தில் பலாலி விண்மீன் வி.கழக அணியின் முன்கள 07 இலக்க -வீரர் பே.நிருசன் தனக்கு கிடைத்த அந்த வாய்ப்பை தவறவிடாது எதிர் அணியின் தற்காப்பை தகர்த்து தனது அணிக்கான முதலாவது கோலைப் பெற்றுக்கொடுத்தார்.

அப்போது அவர் எண்ணியிருக்க வாய்ப்பில்லைத்தான். அடித்த அந்த கோல்தான் போட்டி ஒரேகோலாக இருக்கும் என்று.

கரணவாய் வி.கழக "ஏ" அணி எவ்வாறாயினும் ஒருகோலை போட்டு போட்டியில் சமநிலையை ஏறபடுத்தவேண்டும் என்று வேகத்துடன் விளையாடினர். ஆனாலும் அவர்களது முயற்சிகள் முடியாமற் போய்கொண்டிருந்தன.


இறுதியாக போட்டி 5:17 மணிக்கு முடிவுக்கு வரும்போது பலாலி விண்மீன் வி.கழக அணி ஒரு கோலை போட்டு வெற்றி பெற்று தொடரில் தனது இடத்தை தக்க வைத்துக் கொள்ள கரணவாய் வி.கழக "ஏ"அணி எந்தவித கோல்களையும் அடிக்கமுடியாமல் தோல்வியுற்று தொடரிலிருந்து வெளியேறியது.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக விண்மீன்வி.கழக அணியின் முன்கள 7 இலக்க -வீரர் பே.நிருசன் தெரிவுசெய்யப்பட்டார்.(க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# 2016 ஆம் ஆண்டில் சர்வதேச கிரிக்கெட்டில் கலக்கியவர்கள் யார்?






2016 ஆம் ஆண்டில் சர்வதேச கிரிக்கெட்டில் யார் யார் கலக்கினார்கள் என்ற விபரங்களைப் பார்க்கலாம்.

2016 ஆம் ஆண்டில் மொத்தம் 47 டெஸ்ட் போட்டிகள் அரங்கேறியுள்ளன. இதில் அதிக வெற்றிகளை குவித்த அணி என்ற மகத்தான பெருமையை இந்தியா பெற்றுள்ளது. 12 டெஸ்டில் விளையாடி அதில் 9 இல் வெற்றியும், 3இல் சமநிலையும் கண்டது. இந்த ஆண்டில் தோல்வியே சந்திக்காத ஒரே அணி இந்தியா தான்.

அதேசமயம் வெற்றி பக்கமே செல்லாத அணி சிம்பாவே (4 டெஸ்டில் ஆடி அனைத்திலும் தோல்வி). அவுஸ்திரேலிய அணி 11 டெஸ்டில் ஆடி 5 வெற்றி, 5 தோல்வி, ஒரு சமநிலையைச் சந்தித்துள்ளது.

★ டெஸ்ட் கிரிக்கெட்டில் மொத்தம் 90 சதங்கள் பதிவாகின. இதில் பாகிஸ்தானின் அசார் அலி (302* ரன்), இந்தியாவின் கருண் நாயர் (303* ரன்) ஆகியோர் முச்சதம் அடித்ததும் அடங்கும். விராட் கோலி (இந்தியா), மொயீன் அலி (இங்கிலாந்து), ஸ்டீவன் சுமித் (அவுஸ்திரேலியா) ஆகியோர் அதிகபட்சமாக தலா 4 செஞ்சுரிகள் அடித்துள்ளனர்.

★ அதிக ரன்கள் எடுத்தவர்களின் வரிசையில் இங்கிலாந்தின் ஜோ ரூட்டும் (1,477 ரன்), அதிக விக்கெட்டுகள் கைப்பற்றியவர்களில் இந்தியாவின் அஸ்வினும் (72 விக்கெட்) முதலிடம் பெற்றுள்ளனர்.

அஸ்வின் இன்னிங்சில் 5-க்கு மேல் விக்கெட்டுகளை 8 முறை வீழ்த்தியதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இந்த ஆண்டில் மொத்தம் 98 ஒரு நாள் போட்டிகள் (நியூசிலாந்து - பங்களாதேசம்கடைசிஒருநாள்போட்டியை தவிர்த்து) நடந்துள் ளன.

அதிகபட்சமாக அவுஸ்திரேலிய அணி 29 ஒருநாள் போட்டிகளில் பங்கேற்று 17இல் வெற்றியும், 11இல் தோல்வியும் சந்தித்துள்ளன. ஒரு ஆட்டத்தில் முடிவு இல்லை. இந்திய அணி 13 ஒருநாள் போட்டிகளில் களம் இறங்கி 7இல் வெற்றியும், 6இல் தோல்வியும் கண்டுள்ளது.

★ அதிக ரன்கள் குவித்தவர்களில் அவுஸ்திரேலியாவின் டேவிட் வோர்னரும் (1,388 ரன்), விக்கெட் வீழ்த்தியவர்களில் அவுஸ்திரேலிய சுழற்பந்து வீச்சாளர் ஆடம் ஜம்பாவும் (30 விக்கெட்) முதலிடம் வகிக்கிறார்கள். இந்திய தரப்பில் அதிகபட்சமாக விராட் கோலி 10 ஆட்டத்தில் விளையாடி 3 சதம் உட்பட 739 ரன்கள் சேர்த்துள்ளார்.

★ 68 சதங்கள் அடிக்கப்பட்டு இருக்கின்றன. அவுஸ்திரேலிய துணை தலைவர் டேவிட் வோர்னர் 7 சதங்கள் விளாசி அமர்க்களப்படுத்தி இருக்கிறார்.

கடந்த ஆண்டில் நடந்த 20 ஓவர் போட்டிகளின் எண்ணிக்கை 100. அதில் இந்திய அணி 21 ஆட்டத்தில் விளையாடி 15 வெற்றி, 5 தோல்வி கண்டுள்ளது. ஒரு ஆட்டத்தில் முடிவு இல்லை. 20 ஓவர் கிரிக்கெட்டில் அதிக வெற்றிகளை சுவைத்த அணி இந்தியா தான்.

★ 8 சதங்கள் அடிக்கப்பட்டுள்ளன. தனிநபர் அதிகபட்சமாக அவுஸ்திரேலியாவின் மக்ஸ்வெல் 145 ரன்கள் (இலங்கைக்கு எதிராக) விளாசினார்.

★ சிக்சர் மன்னர்களாக டெஸ்டில் பென் ஸ்டோக்ஸ் (21 சிக்சர், 12 டெஸ்ட்), ஒரு நாள் போட்டியில் நியூசிலாந்தின் மார்ட்டின் குப்தில் (28 சிக்சர், 17 ஆட்டம்), 20 ஓவர் கிரிக்கெட்டில் ஆப்கானிஸ்தானின் முகமது ஷாசாத் (25 சிக்சர், 15 ஆட்டம்) ஆகியோர் வலம் வருகிறார்கள். (க)

## பொருத்துவீட்டு...

அவர் அனுப்பியுள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கையில்.

பொருத்து இரும்பு வீட்டுத்திட்டத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பதினாறு பாராளுமன்ற உறுப்பினர்களும், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களும், உயர்மட்ட அரசியல் தலைவர்களும் பொருத்தமற்ற வீட்டுத் திட்டம் என எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்,

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களிலும், மாகாணசபைகளிலும் இதை எதிர்த்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் வரவு செலவுத்திட்ட விவாத காலத்தில் மீள்குடியேற்ற அமைச்சு விவாதத்தின் போது இவ் வீட்டுத்திட்டத்திற்கான ஒப்பந்த விதி முறைகள் (tender Procedure) மீறப்பட்டுள்ளமை. ஊழலுக்கு இடமளிக்கப்பட்டுள்ளமை மோசடிக்குள்ளானவர்களுடன் உள்ள ஒப்பந்தம் உடன்பாடுகளை பாராளுமன்றத்தில் வெளியிட்டு மீள்குடியேற்ற அமைச்சின் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

பாராளுமன்றத்தில் எனது தலைமையில் உள்ள மீள் குடியேற்ற அமைச்சு உள்ளிட்ட மேற்பார்வைக்குழுவில் (Parliament oversight Committee) இத் திட்டம் வேண்டாம் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கடந்த வருடம் டிசம்பர் 7 ஆம் திகதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலையிட்டு இப் பிரச்சினைக்குத் தீர்வு காணுவதாகவும் வடக்கு கிழக்கின் அபிவிருத்தி பணிகளுக்கும் கூடுதலான நிதி ஒதுக்குவதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வாக்குறுதியளித்திருந்தார் என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் எட்டு இலட்சம் ரூபா வீட்டுத்திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன. ஆனால் அமைச்சர் கல்லில்லை, மணலில்லை, நீரில்லை என்ற அற்ப காரணங்களைக் காட்டி மக்களை ஏமாற்றுகின்றார்.

பிரதமர் பாராளுமன்றில் மீள்குடியேற்ற அமைச்சு மற்றும் வீட்டுப் பிரச்சினைகளைத் தலையிட்டுத் தீர்வுகாணும் வாக்குறுதியை வழங்கியுள்ள நிலையில் மீள்குடியேற்ற அமைச்சர் பொருத்துவீட்டுக்கு விளம்பரம் செய்வது தவறானதாகும்.

ஏன் இவ்வளவு அவசரம். அமைச்சர் சுவாமிநாதனின் விசுவாசிகளும், முகவர்களும், அரச அதிபர்களையும் பிரதேச செயலாளர்களையும், ஊழியர்களையும் மிரட்டி அச்சுறுத்தி பொருத்து வீடுகளை ஏற்கவேண்டுமெனப் பேசுகின்ற செய்திகளும் கசிந்து இருக்கின்றன. மீள்குடியேற்ற அமைச்சு, வீடு தேவைப்பட்டவர்களுக்கு கல்-சீமெந்து வீடுகளை பத்து இலட்சம் ரூபாயில் கட்டிக் கொடுப்பதற்கான நடவடிக்கையை முறையாக செயற்படுத்துவதே இன்றைய தேவை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்திப் பொருத்தமான தீர்மானங்களை எடுக்க வேண்டுமென வற்புறுத்துகின்றோம். அமைச்சர் சுவாமிநாதனின் மீள்குடியேற்ற அமைச்சில் ஓராண்டுக்குள் இரண்டு அமைச்சின் செயலாளர்கள் துரத்தப்பட்டுள்ளனர். அமைச்சுக்கு இன்னும் ஒரு செயலாளர் நியமிக்க முடியவில்லை. அரசு செயலாளர் தரமுள்ளவர்கள் இந்த அமைச்சுக்கு வரமறுக்கின்றனர்.

இந்நிலையில் இப் பொருத்து வீட்டுத் திட்டத்தை இருபத்தொரு இலட்சத்திலிருந்து பதினாறு இலட்சமாக குறைத்து அமைச்சர் சுவாமிநாதன் விளம்பரம் பிரசுரித்து ஒப்பேற்ற எடுக்கும் நடவடிக்கையில் மறைந்திருக்கும் மர்மந்தான் என்ன? இத்திட்டத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதா என்று கேள்வி எழுப்புகிறோம்.

அரசையும் தமிழ் மக்களையும் அமைச்சர் சுவாமிநாதன் தவறாக வழிநடத்த வேண்டாம எனக் கேட்டுக் கொள்கின்றோம். போரினால் அழிந்து போயுள்ள வடக்கு கிழக்குப் பிரதேசங்களுக்கு கல் சீமெந்தினால் கட்டப்பட்ட ஒரு இலட்சத்து முப்பதினாயிரத்திற்கும் அதிகமான வீடு தேவை.

எனவே பொருத்து வீட்டு விண்ணப்பங்களை வீட்டுத் தேவையுள்ள மக்கள் நிராகரித்து கல்வீடுதான் வேண்டுமென அமைச்சுக்கு, அதிகாரிகளுக்கு எழுதிக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். மக்களின் வீட்டுத் தேவையை நிறைவு செய்ய அமைச்சரின் தவறான வழிநடத்தலுக்குப் பலியாகிப் பின் மனவருத்தப்பட வேண்டாமென வேண்டுகோள் விடுக்கின்றோம் என மாவை எம்.பி தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார். (செ-9)

## இந்தியா-இலங்கை...

யில் நடைபெற்ற அமைச்சர் மட்டப் பேச்சுவார்த்தையில் அமைக்கப்பட்ட மீன்பிடி தொடர்பான கூட்டு நடவடிக்கை குழுவின் முதலாவது சந் திப்பாக டில்லியில் பேச்சுவார்த்தை அமை ந்ததாக அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இலங்கை மற்றும் இந்தியாவை பிரதிநிதித்துவப்படுத்தும் அரச மற்றும் இராணுவ அதிகாரிகள் இதில் கலந்துகொண்டிருந்தனர்.

எவ்வாறாயினும் இந்தப் பேச்சுவார்த்தையில் தமிழக அரசாங்கம் மற்றும் மீனவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் எந்தவொருவரும் பங்கேற்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

சர்வதேச கடற்பரப்பை தாண்டிய இந்திய மீனவர்களின் சட்டவிரோத மீன்பிடியை தடுத்தல், இலங்கை அரசினால் சிறைபிடிக்கப்பட்ட மீனவர்கள் மற்றும் அவர்களின் படகுகளை விடுதலை செய்தல், இரண்டு நாட்டு கடல்வளங்களை கூட்டாக பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தல் குறித்து இந்த பேச்சுவார்த்தையில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

முன்னதாக தமிழக மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடியால் வருடாந்தம் ஒன்பது பில்லியன் ரூபா இழப்பு ஏற்படுவதாகவும் அத்துமீறும் மீனவர்களுக்கு கடுமையான அபராதம் விதிக்கப்படும் எனவும் கடற்றொழில் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## மகிந்தவின்...

போதும் மறக்கமாட்டார்கள் என ஜே.வி.பி. யின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

2017ஆம் ஆண்டில் ஆட்சியைக் கவிழ்ப்போம் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தமை தொடர்பில் கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-3)

## ஐக்கிய இலங்கை...

கிரமசிங்கவும் தம்மை அர்ப்பணித்துள்ளதாக தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, நல்லாட்சி நாட்டில் நிலை நாட்டப்படுள்ளது எனவும் குறிப்பிட்டார்.

புத்தாண்டை முன்னிட்டு அவர் நேற்று அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செய்தியிலே முன்னாள் ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தனது வாழத்துச் செய்தியில்,

இலங்கையர்களான எங்களது அரசியல் புத்திசாதுரியம், முதிர்ச்சித் தன்மை என்பன நாட்டின் ஆட்சி மாற்றத்தில் மிகவும் தெளிவாக வெளிக்காட்டப்பட்டதை எண்ணி மீண்டும் ஆறுதலடைய முடியும்.

குடி மக்களாகிய நாம் ஒருவருக்கும் மற்றொருவருக்கும் இடையில் பிரிவு மற்றும் அவநம்பிக்கை என்பவற்றை உருவாக்கி அதை மனதில் பதிவதற்கு மேற்கொள்ளும் முயற்சியைத் தோற்கடித்து, எங்களது பன்முகத் தன்மையை வளமொன்றாகவும் சக்தியாகவும் காணக்கூடிய சமுதாயம் ஒன்றை உருவாக்க வேண்டியுள்ளது.

நல்லாட்சி மற்றும் சட்டத்தின் ஆதிக்கம் என்பவற்றை மீளவும் நிலைநாட்டுவதன் மூலம், ஒரே இனமாக நாட்டின் சகல குடிமக்களும் சம உரிமைகளை அனுபவித்துக் கண்ணியமாக வாழ முடியுமான ஐக்கிய மற்றும் நியாயமான இலங்கை ஒன்றை கட்டியெழுப்புவதற்காக ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகிய இருவரும் மிகவும் தெளிவாக அர் பணிப்புச் செய்துள்ளனர்.

சகல குடிமக்களுக்கும் தங்களது எதிர் காலத்தைக் கட்டியெழுப்பக் கூடிய, எனது நாடு என்று பெருமைப்படக் கூடியதான ஒரு நாட்டை கட்டியெழுப்புவதை முன் நோக்காகக் கொண்டு, எல்லோரும் ஒற்றுமையுட னும் பன்முகத் தன்மைக்கு மதிப்பளித்தும் வாழக் கூடியதுமான சமூகம் ஒன்றை உருவாக்குவதற்கு மேற்கொள்ளும் முயற்சிகள் சகல வழிகளிலும் வெற்றி பெற வேண்டும்.

உதயமாகியுள்ள 2017 புத்தாண்டு உங்கள் அனைவருக்கும் அமைதி, சுகவாழ்வு, மகிழ்ச்சி மற்றும் செயற்திறன் மிக்க ஆண் டாக அமைய வேண்டுமென தான் பிரார்த்தி ப்பதாகவும் சந்திரிகா குமாரதுங்க தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## இலங்கைக்கு...

அரசாங்கத்திற்கு ஆதரவாகத் தீர்மானம் இயற்றப்பட்டால் அதன் மூலம் நல்லிணக்கச் செயற்பாட்டை மேற்கொள்வதற்குத் தேவைப்படும் பொறிமுறைகளை அமுல்படுத்துவதற்கான காலஅவகாசம் மேலும் வழங்கப்பட வேண்டியிருக்கும்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 34வது கூட்டத் தொடரானது பெப்ரவரி 27 தொடக்கம் மார்ச் 24 வரை ஜெனிவாவில் நடைபெறவுள்ளது. இதில் இலங்கை தொடர்பான கலந்துரையாடலானது மார்ச் 22ஆம் திகதி இடம்பெறும்.

இக்கலந்துரையாடலானது, மனித உரிமைகளுக்கான ஐ.நா உயர் ஆணையாளர் செய்ட் அல் ராட் அல் ஹுசெய்னால் இவ்வாண்டு வழங்கப்பட்ட இலங்கை தொடர்பான அறிக்கையை அடிப்படையாகக் கொண்டே இடம்பெறும்.

நல்லிணக்க முயற்சிகள் தொடர்பாக இலங்கை அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் முயற்சிகள் திருப்தி அளிப்பதாக தனது இடைக்கால அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

எனினும், இலங்கை இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்ட நிலங்களை விடுவிப்பதில் தாமதம் ஏற்படுவதாகவும் அவர் தனது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளார். அத்துடன் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நிர்மூலமாக்குவதில் இலங்கை தோல்வியடைந்துள்ளதாகவும் அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

பொறுப்புக்கூறல் செயற்பாட்டில் அனைத்துலக சமூகத்தின் பங்களிப்பு தேவையானது எனவும் ஆணையாளர் சுட்டிக்காட்டியுள்ளார். நல்லிணக்க முயற்சிகள் தொடர்பாக பல்வேறு தரப்புக்களிடமிருந்தும் எழும் வெறுப்புக்கள், பொறுமையின்மை, ஒதுக்கங்கள் போன்றவற்றைக் களைந்து அனைத்து தரப்பினரையும் நல்லிணக்க முயற்சிகளில் ஒன்றிணைப்பதற்கான பலமான நகர்வுகளை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும் என உயர் ஆணையாளர் மேலும் குறிப்பிட்டிருந்தார்.

இலங்கையில் நல்லிணக்க முயற்சிகளை முன்னெடுப்பதில் மனித உரிமைகள் பேரவையின் ஊக்குவிப்பும் ஆதரவும் மிகவும் முக்கிய பங்காற்றியுள்ளதாகவும் இது அனைத்துப் பங்குதாரர்களுக்கும் குறிப்பாக பாதிக்கப்பட்ட சமூகத்திற்கு உறுதிப்பாட்டையும் நம்பிக்கையையும் கொடுத்துள்ளதாக அவர் தனது அறிக்கையில் தெரிவித்திருந்தார்.

இவ்வாண்டு இடம்பெற்ற ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் செய்ட் ராட் அல்ஹுசெய்ன் உரையாற்றிய போது, இலங்கையின் நிலைப்பாடு தொடர்பாகக் குறிப்பிட்டிருந்தார். அனைத்து இலங்கையர்களும் நல்லிணக்கச் செயற்பாட்டில் வினைத்திறனுடனும் பயனுள்ள வகையிலும் பங்களிப்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும் என கடந்த ஆண்டு ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போது செய்ட் தெரிவித்திருந்தார்.

அரசாங்கமானது தனது நாட்டில் 30/1 தீர்மானத்தை அமுல்படுத்துவதற்கு நீதி முறைமையில் மாற்றத்தைக் கொண்டுவரக்கூடிய முழுமையான மூலோபாயம் ஒன்று வரையப்பட வேண்டும் எனவும் இதன்மூலம் பல்வேறு தரப்பினரையும் பொருத்தமான வகையில் ஒன்றிணைக்க முடியும் எனவும் ஆணையர் தெரிவித்திருந்தார்.

கடந்த ஆண்டு இலங்கை தொடர்பான அறிக்கை வெளியிடப்பட்டதிலிருந்து அரசாங்கமானது மெதுவாகவே செயற்பட்டு வருகின்றது. எனினும் வினைத்திறன் மிக்க பொறுப்புக்கூறல் பொறிமுறையை அமுல்படுத்துவதற்கான பயனுள்ள நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றது.

எனினும், யுத்த காலத்தில் இடம்பெற்ற பல்வேறு மனித உரிமை மீறல்கள் தொடர்பில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக தண்டனை வழங்கும் செயற்பாடானது இன்னமும் அமுல்படுத்தப்படவில்லை என்கின்ற குற்றச்சாட்டு இலங்கையிற்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், இலங்கைக்குச் சாதகமானதொரு தீர்மானம் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் நிறைவேற்றப்படுவதற்குத் தேவையான ஆதரவை அரசாங்கம் திரட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையில் புதிய அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதன் பின்னரும் கூட பொலிஸாரின் சித்திரவதைகள் இடம்பெறுவதாக இவ்வாண்டு இலங்கை மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. பாதுகாப்புப் படையினரால் மேற்கொள்ளப்படும் வெள்ளை வான் கடத்தல்கள், சித்திரவதைகள், பாலியல் வன்முறைகள் தொடர்பாக ஐ.நாவின் சித்திரவதைக்கு எதிரான ஆணைக்குழுவானது இலங்கைக்கு சென்று பார்வையிட்டு சுயாதீன விசாரணை மேற்கொள்ள வேண்டும் என அனைத்துலக உண்மை மற்றும் நீதிக்கான செயற்திட்டம் கடந்த மாதம் கோரிக்கை விடுத்திருந்தது.

2015 ஜனவரியில் ஆட்சி மாற்றம் இடம்பெற்ற போதிலும் சட்ட ரீதியற்ற வகையில் இரகசியத் தடுப்பு முகாங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழர்களை இலக்கு வைத்து பாதுகாப்புப் படையினர் தொடர்ச்சியாக பயங்கரமான சித்திரவதைகள் மற்றும் பாலியல் வன்முறைகளில் ஈடுபடுகின்றனர்' என அனைத்துலக உண்மை மற்றும் நீதித் திட்டத்தின் நிறைவேற்று இயக்குநர் ஜஸ்மின் சூகா தெரிவித்திருந்தார்.

தற்போதைய சிறிசேன அரசாங்கத்தின் கீழ் இந்நாட்டுப் பாதுகாப்பு மற்றும் புலனாய்வு அதிகாரிகளால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் கடத்தல், சட்ட ரீதியற்ற தடுப்பு, சித்திரவதை, பாலியல் வன்புணர்வுகள் போன்றவற்றால் பாதிக்கப்பட்டு தற்போது ஐரோப்பிய நாடுகளில் வாழும் 36 தமிழ் மக்களிடமிருந்து அனைத்துலக உண்மை மற்றும் நீதித் திட்டத்தால் சாட்சியங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. சாட்சியம் வழங்கியவர்களில் 10 பேரின் வழக்குகள் ஆராயப்பட்டு அவர்களுக்கு புகலிடம் வழங்கப்பட்டுள்ளது. ஆகவே இவர்களுக்கு புகலிடம் வழங்கப்பட்டதன் மூலம் வெளிநாட்டு அரசாங்கங்கள் இலங்கையில் மீறல்கள் இடம்பெறுகின்றன என்பதை உறுதிப்படுத்தியுள்ளன.

அரசாங்கமானது உண்மையில் தனது பாதுகாப்புத் துறையில் மாற்றத்தை ஏற்படுத்த விரும்பினால், புதிதாக பரிந்துரைக்கப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் கூடுதல் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள பொலிஸாரால் இழைக்கப்படும் மீறல்களை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என கடந்த மாதம் மனித உரிமைகள் பேரவையால் விடுக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 30வது கூட்டத் தொடரில் இலங்கை மீதான தீர்மானமானது எவ்வித வாக்கெடுப்புமின்றி நிறைவேற்றப்பட்டது. நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் போன்றவற்றை இலங்கையில் மேம்படுத்துதல்' என்கின்ற தலைப்பின் கீழ் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அக்காலப்பகுதியில் ஜெனிவாவில் அங்கம் வகித்த அமெரிக்கக் குழுவால் பேரவையில் தீர்மானம் முன்வைக்கப்பட்டது. ஆனால் அடுத்த ஆண்டு டொனால்ட் ட்ரம்ப்பின் தலைமையிலான அமெரிக்க அரசாங்கத்தின் பிரதிநிதிகள் குழுவே மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் அங்கம் வகிக்கும்.

மனித உரிமைகள் விவகாரம் தொடர்பில் ட்ரம்ப் அரசாங்கத்துடன் பணியாற்றுவதற்கான தனது கதவுகளை இலங்கை ஏற்கெனவே திறந்துவிட்டுள்ளது. அமெரிக்காவின் துணை அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மைக் பென்ஸ் தொலைபேசி மூலமாக அதிபர் மைத்திரிபால சிறிசேனவுடன் தொடர்பு கொண்டு அமெரிக்கா-இலங்கையின் எதிர்கால உறவு தொடர்பாகக் கலந்துரையாடியிருந்தார்.

அதிபர் டொனால்ட் ட்ரம்ப்பின் ஆட்சியின் கீழ் அமெரிக்கா-இலங்கை உறவுகளை மேலும் எவ்வாறு பலப்படுத்துவது தொடர்பாகவே பென்சும் அதிபர் சிறிசேனவும் தொலைபேசியில் உரையாடியதாக தெரிவிக்கப்படுகிறது.

ட்ரம்ப் மற்றும் சிறிசேனவிற்கு இடையில் விரைவில் சந்திப்பொன்றை ஒழுங்குபடுத்துவதற்கு முயற்சிப்பதாக அமெரிக்கத் துணை அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பென்ஸ், ஜனாதிபதி சிறிசேனவிடம் தெரிவித்திருந்தார். (செ-11)

**BEACON TEC CITY**
வெலிங்டன் சந்தி, யாழ் நகர்
A/L
2017, 2018, 2019 புதிய பிரிவு
இயந்திரவியல் பொறியிடல்
செ.ஜெகநாதன்
குடிசார் இயந்திரவியல்
சி.சிவஜன்
படவரைதல்
அ.அருண்குமார்
இலத்திரனியல், மின்னியல்
இ.றொபின்சன்
பௌதிகவியல்
கிருபாகரன்
இரசாயனவியல்
சு.நந்தா
உயிரியலும்,உயிர்முறையியலும்
D.A.ஜக்சன்
தகவல் தொழில்நுட்பம்
சி.கார்த்திக்
(C-7059)
ஆரம்பம் : 07.01.2017 காலை 9 மணி



**BEACON**
வெலிங்டன் சந்தி, யாழ் நகர்
A/L
2017, 2018, 2019 புதிய பிரிவு
பொருளியல் :- K.பிரதீபன்
தமிழ் :- ஜீவானந்தன்
இந்துநாகரீகம் :- நேசன்
அளவையியல் :- S.S.மனோகரன்
நாடகமும் அரங்இயலும் :- வினோதன்
தகவல் தொழில் நுட்பம் :- கார்த்திக்
ஊடக கற்கைநெறி :- கோணேஸ்
அரசியல் :- N.பிரதீபன்
வரலாறு :- தாஸ்
(C-7059)
ஆரம்பம் : 07.01.2017 காலை 9 மணி



**BEACON** வெலிங்டன்சந்தி யாழ்நகர்
A/L 2019
வர்த்தகப்பிரிவு
ஆரம்பம் : 07.01.2017 காலை 9 மணி
பொருளியல் :- K.பிரதீபன்
கணக்கீடு :- R.சுகிர்தன்
வணிகக்கல்வி :- K.M.தீசன்
(C-7059)

**BEACON - யாழ்நகர்**
புதிய பாடத்திட்டத்துக்கமைவாக
2019 உயர்தர விஞ்ஞான பிரிவுகள்
ஆரம்பம் : 07.01.2017 காலை 9 மணி
இரசாயனவியல் வி.நந்தா
பௌதிகவியல் எ.கிருபாகரன் B.S.c
இணைந்த கணிதம் த.சுகந்தன் B.Sc
உயிரியல் D.A.ஜக்சன்
(C-7059)
தொடர்புகளுக்கு : நிர்வாகம்
BEACON வெலிங்டன் சந்தி,யாழ்ப்பாணம்



**CHEMISTRY**
(கடினமானது என கருதுகிறீர்களா?)
Group Classes
N.Vakeesan
BSc., PGDE
(7319)
135,பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி.
சேதன , பௌதிக கைத்தொழில் அலகுகள் மீட்டலில் ஈடுபடுபவர்களிற்கும் உகந்தது.
தி, பு, வெ - 6.00 Pm
ஆரம்பம்: 02.01.2017 திங்கள்
தொடர்பு : 0779771936


## ஆயுதக்குழு...

ந்த கே.மனோராஜ் (வயது 32) என்ற இளை ஞனே படுகாயமடைந்தவராவார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவது,

ஒரு ஆட்டோ மூன்று மோட்டார் சைக்கி ள்கள் சகிதம் அப்பகுதிக்கு வந்து இறங்கிய இனந்தெரியாத 15 பேர் அடங்கிய ஆயுதக் குழு மிருசுவில் பகுதியில் உள்ள ஒருவரை வெட்டுவதற்கு ஆயத்தமாகியுள்ளது.

எனினும் குறித்த நபர் வீட்டில் இல்லாத காரணத்தினால் அவ் இடத்தில் நின்ற மூன்று இளைஞர்களை அக்குழுவினர் கடுமையாக தாக்கியுள்ளனர்.

இதன்போது அதில் ஒரு இளைஞன் படு காயமடைய நேரிட்டது.

இது தொடர்பில் கொடிகாமம் பொலிஸாரு க்கு தகவல் வழங்கப்பட்டதனை அடுத்து சந் தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்ட தாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-85)

## உரிமையை மறுக்கும்...

அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோருகின்றோம்.

யுத்தக் குற்றங்கள், இனப்படுகொலை என்பவற்றுக்கான சர்வதேச விசாரணை வேண்டும் என்று உலகத்துக்கு வலியுறுத்தி யும் தமிழ் பேசும் மக்கள் மீதான அரசியல், சமூக, பொருளாதார தொழில் வாய்ப்பு ரீதி யான ஒடுக்கு முறைகளுக்கு எதிரான கண் டனங்கள் உட்பட இன்னும் பல விடயங் களை வலியுறுத்துகின்றோம். இவற்றை வலியுறுத்தியே எழுக தமிழ் எழுச்சிப் பேரணி நடைபெறவுள்ளது என வசந்தராசா குறிப்பிட் டார். (செ-11)

## விவசாய துறையில்...

இடம்பெற்ற சந்திப்பின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இன்று ஆரம்பமாகும் பேண்தகு யுகத் தின் மூன்றாண்டுப் பிரவேசம் தேசிய நிகழ் ச்சித்திட்டத்துடன் இந்நாட்டின் விவசாயத் துறையில் பல்வேறு மாற்றங்களை ஏற்படு த்தவுள்ளதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, அந் நிகழ்ச்சித்திட்டங்களை வெற்றிபெறச் செய் வதற்கு அனைத்து விவசாய சமூகத்தினதும் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகவும் குறிப் பிட்டார்.

மாவட்டத்தின் விவசாய சமூகம் எதிர்நோக் கும் பிரச்சினைகள் குறித்து இதன்போது ஜனாதிபதிக்கு விளக்கமளிக்கப்பட்டதுடன், எதிர்கால அபிவிருத்தித் திட்டங்களுடன் அந் தப் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பது அரசாங்கத்தின் நோக்கமாகும் என்றும் விவசாயக் குடும்பத்தில் பிறந்த தான் இந் நாட் டின் எந்தவொரு விவசாயக் குடும்ப த்தையும் பட்டினியில் இருகக இடமளிக்கப் போவதில்லை என்றும் தெரிவித்தார். (செ-11)

## 362 பிரேரணை...

ச் சுக்களின் செயலாளர்களை வரவழைத்து தெளிவூட்டப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார். அந்த வகையில் வரவு செலவுத் திட்டத்தினூடாக முன் வைக்கப்பட்ட அபி விருத்தி மற்றும் மக் கள் பயன்பாட்டிற்கான செயற்றிட்டங்கள் என்பன நேற்று முதல் அமுல் படுத்தப் பட வுள்ளதாகவும் அவர்

கூறியுள்ளார். அனைத்து செயற்பாடுகளும் சட்டரீதியாக முன்னெடுக்கப்பட வேண் டும் எனவும் நிதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். மக்கள் பயனடையும் வகையில், விரைவாக இந்த செயற்பாடுகளையும் முன்னெடுக்கு மாறு அனைத்து அதிகாரிகளுக்கும் பணிக்க ப்பட்டுள்ளதாகவும் நிதி அமைச்சர் ரவி கருணா நாயக்க சுட்டிக்காட்டியுள்ளார். (செ-11)

## 25 ஆயிரம்...

தாகவும் கொழும்பில் நேற்று ஊடகவியலா ளர்களைச் சந்தித்தபோது நிதி அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

வீதி விதிகளை மீறும் சாரதிகளுக்கு விதி க்கப்படும் அபராதத் தொகையை 25 ஆயிரம் ரூபாயாக அதிகரிக்க 2017ஆம் ஆண்டுக் கான வரவு - செலவுத் திட்டத்தில் நிதி அமை ச்சரால் யோசனை முன்வைக்கப்பட்டது.

இந்த யோசனைக்கு வாகன சாரதிகள் சங்கத்தினர் கடும் எதிர்ப்பு தெரிவித்து போரா ட்டங்களில் ஈடுபட்டனர். அத்துடன், ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து இந்த விடயம் குறித்து தமது கவலையையும் வெளியிட்டிருந்தனர்.

இதன்போது, இவர்களிடம் கருத்து வெளி யிட்டிருந்த ஜனாதிபதி, வாகன சாரதிகளு டன் கலந்துரையாடாமல் அபராதத் தொகையை அதிகரிக்கப்போவதில்லை எனக் கூறியிருந் தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)


யாழ் REGISTER NOW!
Java
Java Programming Classess with practicals
weekdays 9-11am 7-9 pm
weekends 9-12am 8-9.30 pm
0777861677
(C-7058)



அனைத்து நாடுகளுக்குமான
விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுககும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS
மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்.
தொடர்புகளுக்கு: 0768226240
●யாழ்ப்பாணம் ●கிளிநொச்சி ●நெல்லியடி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
V2 TRAVELS



வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை
SATISFACTION 100% GUARANTEED
070 330 5500
021 221 5656
உங்கள் உறவுகளுக்கு துரிதமாகவும் நம்பிக்கையாகவும் பொதிகள் மற்றும் கடிதங்களை உலகின் முன்னணி நிறுவனங்கள் ஊடாக அனுப்பிவைத்திட
அண்ணா அன் கோ
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
யாழ்ப்பாணம்
எம்முடன் இணைந்து இந் நிறுவனங்களின் முகவர்களாக விரும்புவோரும் தொடர்புகொள்ளலாம்



FALC FRENCH LANGUAGE CENTRE
FOR THE BEST FRENCH FOREVER
பிரெஞ்சு
மொழி வகுப்பு
(C-6921)
No. 40, பலாலி வீதி, ஆரியகுளம்.
0779 789 456 / 021 221 7781
ஆரம்பம் : 07.01.17 சனி 10 am.
பிரதான வீதி, நெல்லியடி
TP: 021 3202973
ஆரம்பம்: 09.01.17 திங்கள் 3,30pm.
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1 Classes.
Bus நிலையம் → ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → FLCentre



**வடபகுதியின் முதலாவது காகித உற்பத்தி ஆலைக்கு கீழ்வரும் பணிகளுக்கான விண்ணப்பம் கோரல்**

யாழ்ப்பாணம் அச்சுவேலி கைத்தொழிற்பேட்டையில் இயங்க ஆரம்பித்துள்ள முதலாவது காகித உற்பத்தி ஆலைக்கு ஆர்வமும், முயற்சியும் உடையவர்களிடமிருந்து பின்வரும் பணிகளுக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது.

1 - பேப்பர் வெட்டும் இயந்திர இயக்குநர்கள்
(Paper Cutting Machine Operators)
குறைந்தது ஐந்து வருட அனுபவம் உள்ளவர்கள்

2 - பேப்பர் தயாரிக்கும் இயந்திர பயிலுனர்கள்
(Paper Making Machine Trainee operators)

விருப்பார்வம் உடையோர் முழுமையான சுயவிபரக் கோவையுடன் 06.01.2017க்கு முன்னர் கீழ்க்காணும் முகவரிக்கு தபால் மூலம் விண்ணப்பிக்கவும்.

நோபிள் இன்ரர்நஷ்னல் பேப்பர்ஸ் லங்கா
பிரைவேற் லிமிற்ரெட்
கைத்தொழிற்பேட்டை, அச்சுவேலி,
யாழ்ப்பாணம். (C-7057)



**நடிகர்கள் தெரிவு!**

தென்னிந்திய தமிழ் திரைப்படத்தில் நடிப்பதற்கு இலங்கையின் அனைத்து பாகத்திலும் உள்ள கலைஞர்கள் தேவைப்படுகின்றார்கள். அவர்களுக்கான நேர் முகத்தேர்வு எதிர்வரும் 10.01.2017 அன்று காலை 9.00 மணி தொடக்கம் மாலை வரை யாழ்ப்பாணத்தில் நடைபெற உள்ளது.

ஆர்வமுள்ளோர் கீழ் காணும் தொலைபேசி இலக்கத்தினூடாக 09.01.2017க்கு முன்னதாக தொடர்பு கொண்டு உங்கள் வருகையை உறுதிபடுத்திக் கொள்ளவும்.

நன்றி

தொடர்பு
0774049567 (சுவிஞ் ரகு), 0774407832 (ஜெறாட்),
0779134524 (வாகீசன்)



**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்**
வெளிநாடுகளுக்கான
துரித கடிதங்கள், பொதிகள் சேவை

365
72 மணி நேரத்தில் உலகின் எப்பாகத்திலும் ஒப்படைக்கப்படும் (Express Service)
(Door to Door Service)
அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம்.
Call 021 222 6113
அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்
Call 021 222 3536
(C-6801)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.01.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.